

සේවා නියුක්තයන්ගේ භාර අරමුදල් මණ්ඩලය
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம
EMPLOYEES' TRUST FUND BOARD

ENDURING STRENGTH

වාර්ෂික වාර්තාව 2022
வருடாந்த அறிக்கை 2022
ANNUAL REPORT 2022

“தாங்கும் வலிமை”

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை தொற்றுநோய்க்குப் பின்னரான காலத்தில் நாட்டின் இரண்டாவது பெரிய ஓய்வூதிய நிதியமாக அதன் நீடித்த வலிமையை உறுதி செய்வதன் மூலம் அதன் ஸ்திரத்தன்மையை நிரூபித்தது. எந்தவொரு பாதகமான பொருளாதார நிலையிலும் தொடரும் திறனை சபை வெளிப்படுத்தியுள்ளது. எமது அர்ப்பணிப்புள்ள குழு ஒன்றுதிரண்டு அதன் அங்கத்தவர்களுக்கு வெற்றிகரமாக சேவை செய்வதற்கான புதிய வழிகளை விரைவாக மாற்றியமைத்தது. அவ்வாறே, பல சவால்களுக்கு மத்தியிலும் நெருக்கடியான காலகட்டத்தில் எமது முதலீட்டு நடவடிக்கைகளை நாம் சிறப்பாக பராமரித்து வந்துள்ளோம்.

நாட்டின் இரண்டாவது பெரிய சமூகப் பாதுகாப்பு நிதியமாக நீடித்த நம்பிக்கை மற்றும் ஸ்திரத்தன்மையை மீண்டும் வலியுறுத்தி எமது அங்கத்தவர்களுக்கு தரமான சேவையை வழங்குவதில் நாம் வெற்றியடைந்துள்ளோம்.

CONTENTS

எமது 42 ஆவது வருடாந்த அறிக்கைப் பற்றிய அறிமுகம்	111
நாம் யாவர்	112
நிதிசார் சிறப்பம்சங்கள்	113
பிரதான மைல்கற்கள்	114-115
பெறுமதி உருவாக்க மாதிரி	116-117
நிறுவனஞ்சார் மீளாய்வு	118
சபையின் பிரிவுகள்இ அலகுகளின் தொழிற்பாடுகள்	119-120
செயலாற்றுகை மீளாய்வு	121
தவிசாளரின் மீளாய்வு	122-123
பணிப்பாளர்களின் அறிக்கை	124
முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு	125-141
பணிப்பாளர் சபை	142-144
சிரேட்ட முகாமைத்துவக்குழு	145-147
முகாமைத்துவக்குழு	148
நிறுவன ஆளுகை	149-152
துணைக் குழுக்கள்	153-157
இடர் முகாமைத்துவம்	158-160

நிதிக் தகவல்கள்

விரிவான வருமானக் கூற்று	162
நிதி நிலைமைக் கூற்று	163
உரிமையாண்மை பங்கு மாற்றக் கூற்று	164-165
காசுப் பாய்ச்சல் கூற்று	166
திறைசேரி பிணைமுறி தொகுப்பின் சந்தைப் பெறுமதி	167
பட்டியலிடப்பட்ட கடன்பத்திர அமைப்பின் சந்தைப் பெறுமதி	168
அமைப்பு முதலீட்டுக் கூற்று	169-170
முக்கிய கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்	171-199

மேலதிக தகவல்கள்

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 2022	201-206
கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை தொடர்பில் சபையின் அவதானிப்புகள்	207-212
பத்து வருட கால சாராம்சம்	318
நிதி நிலமைப் பற்றிய கூற்று	319
புள்ளிவிபரவியல் பின்னிணைப்புகள்	320-321
எமது அடைவுகள்	322

எமது 42 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்



EMPLOYEES' TRUST
FUND BOARD
ANNUAL REPORT 2022

அறிக்கையின் உள்ளடக்கம்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் சமர்ப்பிக்கப்படும் 42 ஆவது வருடாந்த அறிக்கை இதுவாகும். 2022 ஆம் ஆண்டில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நலன்பெறுநர்களுக்கும் ஏனைய பங்குதாரர்களுக்கும் முக்கியமான பெறுமானத்தைத் தாபனம் எவ்வாறு உருவாக்கியது என்பதற்கான விரிவான அறிக்கையொன்று இதன் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையின் உள்ளடக்கம் 2022 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் தலைமை அலுவலகம் மற்றும் கிளை வலையமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ளன. மின அண்மைய வருடாந்த அறிக்கையான 2021 ஆம் ஆண்டின் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த அறிக்கையுடன் இவ்வறிக்கை ஒப்புநோக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் உள்ளடக்கம் நிறுவனத்திற்கும் அதன் முக்கிய பங்குதாரர்களுக்கும் முக்கியத்துவம்மிக்க அம்சங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் நோக்கம்

இவ்வறிக்கையானது தாபனத்தின் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால தனித்துவமிக்க பெறுமான உருவாக்கத்தினை தமது பிரபலமிக்க பங்குதாரர்களுடன் பகிர்ந்துகொள்வதனை நோக்காகக் கொண்டுள்ளது. அதன் மூலம் நிதியத்தின் தந்திரோபாயம், ஆளுகை மற்றும் நிதி முகாமைத்துவம் குறித்து சுருக்கமான தொடர்பாடலையும் இது வழங்குதுடன் அதன் நிதிசார் செயலாற்றுகை மற்றும் தாபனத்தினால் உருவாக்கப்பட்ட சமூகத்தடங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான உறவினையும் நிரூபணஞ் செய்கின்றது.

இவ்வறிக்கையானது அளவு மற்றும் தர ரீதியான தரவுகளைக் கொண்டுள்ளதுடன், ஒப்புநோக்கு மற்றும் மேலதிக பகுப்பாய்வினை எளிதாக்குவதற்கு முடியுமான அளவு ரீதியான தரவுகளை வழங்குவதே எமது நோக்காகும். நிதிக் கூற்றுக்களும் அதனுடன் தொடர்பான குறிப்புக்களும் அரசாங்க கணக்காய்வாளர் அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளதுடன் உத்தரவாத அறிக்கையும் இவ்வறிக்கையில் உள்ளது

அறிக்கையின் இணக்கம்

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆளுகை அறிக்கையானது பொது தொழில் முயற்சிகளுக்கான கூட்டுரு ஆளுகை மீதான சிறந்த நடைமுறைக்கான விதி மற்றும் 1980 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டம் என்பவற்றுடன் நிறுவனம் எவ்வாறு இணங்கி ஒழுகுகின்றது என்பது குறித்து கலந்துரையாடுகின்றது

மூலோபாய நோக்கு

வருடம் பூராகவும் செயலாற்றுகைக்கு கவனம் செலுத்தி இந்த வருடாந்த அறிக்கை பங்குதாரர்களின் வளர்ச்சிக்காக சபையின் தற்போதைய மற்றும் எதிர்காலப் பணிகள் தொடர்பில் புரிந்துணர்வை வழங்குகின்றது.

தொடர்புகளுக்கு

திருமதி ஜீ.ஏ.எஸ். சுமனசேன
பிரதி பொது முகாமையாளர் (நிதி)
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

தொலைபேசி : 94117747250
தொலை நகல் : 94117747209
மின்னஞ்சல் : கையெஒந:நவகடி.டம

நாம் யார்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்புநிதியமானது 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டு 1981 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் திகதி செயற்பாடுகளை ஆரம்பித்தது. இது தொழில் அமைச்சின் கீழ் நிறுவப்பட்டு, தற்போது நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது. அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளத்திற்கு உரித்தாகாத எல்லா அரச துறை ஊழியர்களும் மற்றும் தனியார் துறை ஊழியர்களும் இந்நிதியத்தில் அங்கத்தவர்களாவதுடன், அவர்களது தொழில் வழங்குநர்கள் அவ்வூழியர்களின் மொத்த உழைப்பிலிருந்து 3% இனை நிதியத்திற்கு மாதாந்தம் அனுப்ப வேண்டியுள்ளனர். எனவே ஊழியர் சேமலாப நிதியத்தைப் போலன்றி, தொழில் வழங்குநர் மாத்திரமே ஊழியர் / அங்கத்தவர் சார்பாகப் பங்களிப்பொன்றை மேற்கொள்வதுடன் அங்கத்தவர்கள் பங்களிப்புச் செய்யாத ஒரு நலனாகும். நாட்டின் பொருளாதாரத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்கும் சுயதொழில் முயற்சியாளர்களினதும் புலம்பெயர் தொழிலாளர்களினதும் தன்னார்வ அங்கத்துவத்தினை அதிகரிப்பதற்கு விசேட கவனஞ் செலுத்தப்படுகின்றது.

சபையின் குறிக்கோள்கள்
(1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 07 ஆம)

(அ) நிதியிடல் மற்றும் முதலீட்டில் பங்புபெறுவதன் ஊடாக ஊழியர் உடைமையாண்மை, ஊழியர் நலன்புரி, பொருளாதார சனநாயகம் ஆகியவற்றை ஊக்குவித்தல்

(ஆ) தொழில் முயற்சிகளில் உரிமை பங்கினைப் பெற்றுக் கொள்வதன் மூலம் முகாமைத்துவத்தில் ஊழியர் பங்களிப்பினை ஊக்குவித்தல்

(இ) ஊழியர்கள் ஓய்வு பெறும் போது தான் பங்களிப்புச் செய்யாத நலன்களை பெற்றுக்கொள்வதற்கு எற்பாடு செய்தல் மற்றும்

(ஈ) மேலே (அ), (ஆ) மற்றும் (இ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களிற்குத் தேவையான ஏனைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

எமது பொறுப்புக்கள்







நிதிசார் சிறப்பம்சங்கள்

	2022	2021	வித்தியாசம்
	இ.ரூபா '000	இ.ரூபா '000	%
தொழிற்பாடுகள்			
மொத்த வருமானம்	46,121,938	35,489,895	29.96
மொத்த வட்டி வருமானம	46,316,209	34,095,154	35.84
மொத்தச் செலவினம்	2,694,206	2,330,399	15.61
தொழிற்பாட்டுச் செலவினம்	1,648,344	1,539,849	7.05
வரிக்கு முன்னரான இலாபம்	43,427,732	33,159,496	30.97
வரிச் செலவினம்	6,449,427	4,590,140	40.51
வரிக்கு பின்னரான இலாபம்	36,978,305	28,569,356	29.43
நிதி நிலமைப் பற்றிய கூற்று			
காசும் காசுக்கு சமமானவையும்	584,266	578,758	0.95
நிதிச் சொத்துக்கள் FVTPL	2,887,168	3,622,159	(20.29)
நிதிச் சொத்துக்கள FVTOCI	8,646,578	10,561,493	(18.13)
கடன் தீர்ப்புச் செலவின் மீதான நிதிச சொத்துக்கள்	444,308,492	395,922,319	12.22
அங்கத்துவர் நிதியம் மற்றும் ஒதுக்குகள்	460,561,415	409,285,930	12.53
அங்கத்தவர் நோக்கு			
அங்கத்துவர் நிதியம்	459,630,606	406,288,901	13.13
வட்டி மற்றும் பங்கிலாபம்	36,981,107	27,919,952	32.45
வட்டி மற்றும் பங்கிலாபம (%)	8.75%	7.25%	20.69
அங்கத்தவர் நலன்கள்	477,055	440,912	8.20
முதலீட்டின் மீதான நலன்கள ROI	10.01%	8.58%	16.67
பங்கின் மீதான நலன்கள ROE	8.05%	6.98%	15.33
சொத்துக்கள் மீதான நலன்கள் ROA	7.95%	6.82%	16.57








பிரதான மைல்கற்கள்







1986

- மரண நலத்திட்டம் 100,000/-

1989

மரண நலத்திட்டம்
- நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் : 200,000/-

1991

மரண நலத்திட்டம்
- நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்
- இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி: 300,000/-

1992

மரண நலத்திட்டம் :
- நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
- இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி :
- கண்பரிசோதனை விலலை செலவிற்கான மீளளித்தல் ரூபா 18,000/=

1994

மரண நலத்திட்டம் :
- நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
- இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி
- கண் விலலை பொருத்தும் செலவிற்கான மீளளித்தல்
- 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் ரூ. 15000/ரூ 9000 புலமைப் பரிசில்கள்

1997

மரண நலத்திட்டம்
- நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்
- இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி
- கண் விலலை செலவிற்கான மீளளித்தல்
- 5.ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
- சீராகவ பெக்கவாணை" சிகிச்சைத் திட்டம் (ரூ.25000 வீதம் ஒரு வருடத்திற்கு உச்சமாக ரூ.50,000 சேலைக்கு-ளத்திற்குள்)

2002

மரண நலத்திட்டம் :
- நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
- இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி :
- கண்பளிங்கு வில்லை செலவிற்கான மீளளித்தல்
- 5ஆம் ஆண்டு பலமைப் பரிசில்
- "சிரமசுவ ரெக்கவரண" சிகிச்சைத் திட்டம்
- "விபன" வீட்டுக் கடன் திட்டம்

2006

மரண நலத்திட்டம் :
- நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
- இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி :
- கண்பளிங்கு வில்லை செலவிற்கான மீளளித்தல்
- 5ஆம் ஆண்டு பலமைப் பரிசில்
- "சிரமசுவ ரெக்கவரண" சிகிச்சைத் திட்டம்
- "விபன" வீட்டுக் கடன் திட்டம்
- சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு நிதியுதவி ரூ. 300,000

2010

மரண நலத்திட்டம்
- நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்
- இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி
- கண்பளிங்கு வில்லை செலவிற்கான மீளளித்தல்
- 5ஆம் ஆண்டு பலமைப் பரிசில்
- "சிரமசுவ ரெக்கவரண" சிகிச்சைத் திட்டம்
- "விபன" வீட்டுக் கடன் திட்டம்
- சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு நிதியுதவி ரூ. 300,000
- கபொத (உ/த) மாணவர்களுக்கான நிதியுதவி ரூபா 12,000/= 5000 பலமைப பரிசிலகள.


2016


மரண நலத்திட்டம
- நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்
- இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி
- கண்பளிங்கு வில்லை செலவிற்கான மீளளித்தல்
- 5ஆம் ஆண்டு பலமைப் பரிசில்
- "சிரமசுவ ரெக்கவரண" சிகிச்சைத் திட்டம்
- "விபன" வீட்டுக் கடன் திட்டம்
- சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு நிதியுதவி ரூ. 300,000

2022

2016 ஆம் ஆண்டின் அனைத்து பயன்களையும்
அடைந்துகொள்ளல் மற்றும்
- இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி - ரூபா 350,000/-
- சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு நிதியுதவி - ரூபா 350,000/-

பெறுமதி உருவாக்க மாதிரி





உருவாக்கப்பட்ட பெறுமதி (வெளியீடுகள்)

முதலீட்டாளர்கள்

அங்கத்தவர் நிதியம் 460 பில்லியன் முதலீட்டின் மீதான நலன்கள் 10.01%

அங்கத்தவர்கள்

வட்டி	3.00%
பங்கிலாபம்	5.75%

ஊழியர்கள்

தனிப்பட்ட செலவினம் 1.4 பில்லியன்
பயிற்சி மற்றும் அபிவிருத்திச் செலவு 4.2 மில்லியன்
ஆளணிப் புரள்வு 5% க்கு குறைவு

சமூகம்

கோரிக்கை கொடுப்பனவு	25 பில்லியன்
பங்கிலாபம்	24 பில்லியன
வட்டி	13 பில்லியன
இருதய சிகிச்சை	98 மீல்லியன்
மரண நலன்கள்	149 மில்லியன்
ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில்	87மில்லியன்
உயர் கல்வி நிதி	103 மில்லியன்
சிரமசுவ திட்டம்	23 மில்லியன்
நிரந்தர அங்கவீனம்	9 மில்லியன்
சிறுநீரகம் மாற்றுதல்	4 மில்லியன்
கண்வில்லை பொருத்தல்	4 மில்லியன்

நிறுவனஞ்சார் மீளாய்வு


ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையானது ஒரு நம்பிக்கையாளர் அல்லது பொறுப்பாளரின் வகிபங்கினைக் கொண்ட ஓர் ஒழுங்கான நிறுவனக் கட்டமைப்பைக் கொண்டுள்ளதுடன், எதிர்காலத்தில் ஒரு உன்னதமான நிதி நிறுவனமாகச் செயற்பட வைப்பதே முகாமைத்துவத்தின் நோக்கமாகும். நிறுவனக் கட்டமைப்பினைப் பற்றி சட்டவிதிகளில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. எவ்வாறாயினும் சட்டப் பிரிவு 5 இன் கீழ், சபையானது அதன் செயற்பாட்டு விதிமுறைகளை நெறிப்படுத்தலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதியச் செயற்பாட்டின் ஒட்டுமொத்த முகாமைத்துவப் பொறுப்புக்களும் அதன் பணிப்பாளர் சபையிலேயே தங்கியுள்ளது. பணிப்பாளர் சபையானது 9 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இவ் ஒன்பது உறுப்பினர்களில் 4 பேர் சம்பந்தப்பட்ட அமைச்சராலும் தலா ஒரு உறுப்பினர் வீதம் நிதி மற்றும் வணிக விடயங்களிற்கு பொறுப்பான அமைசர்களாலும் ஒரு உறுப்பினர் இலங்கைத் தொழிலாளர் சம்மேளனத்தாலும் இரு உறுப்பினர்கள் 100,000 இற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கங்களாலும் நியமிக்கப்படுவார்கள்.

இச்சபைக்குப் பொறுப்பான அமைச்சரின் தீர்மானத்திற்கமைய சபைத் தலைவர் தெரிவு செய்யப்படுவதுடன் சட்டவிதியின் படி சபைத் தலைவரே சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் (ஊநுழு) ஆவார்.

பெரும்பாலான தொழில்தருநர்கள் உள்ளபடியால் நுவுகுடீ ஆரம்பத்திலே ஒரு மையப்படுத்தப்பட்ட அமைப்பாக மேல்மாகாணத்திலே உருவாக்கப்பட்டது. முக்கிய பிரதேசங்களான பிராந்திய மற்றும் மாவட்ட அலுவலகங்கள் திறக்கப்பட்டதும் பிராந்திய அலுவலக வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டம் மறுசீரமைப்பு பூர்த்தியானதன் பின்னர் அமுலாக்கம் மற்றும் சட்ட நடவடிக்கைகளில் துரித முன்னேற்றம் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து கோரல்களை ஏற்றல், கோரல் கொடுப்பனவுகள், உறுப்பினர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்ற பல உறுப்பினர் சேவைச் செயற்பாடுகள் பரவலாக்கப்பட்டன.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளானது பரந்த அளவில் செயற்பாட்டுப் பிரிவு மற்றும் ஆதரவுச்சேவைப் பிரிவு என இரு வகைப்படுத்தப்படும். சேகரிப்பு மற்றும் தொழில்தருநர் தொடர்புகள், உறுப்பினர் சேவைகள் மற்றும் முதலீடுகள் என்பன செயற்பாட்டுப் பிரிவில் அடங்கும். நிர்வாகம் மற்றும் மனிதவளம், நிதி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் ஆதரவுச் சேவைகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தலைவர் அவர்கள் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகக் கடமைபுரிய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் (ஊநுழு) நேரடிக் கண்காணிப்பின் கீழ் பொதுமுகாமையாளர் மற்றும் மேலதிகப் பொதுமுகாமையாளர் ஆகியோர் செயற்படுவர். ஒவ்வொரு செயற்பாட்டுப் பிரிவும் ஒவ்வொரு பிரதிப் பொதுமுகாமையாளர் (னுபுஆ) தலைமையில் செயற்படும்.



சபையின் திணைக்களங்கள்/ பிரிவுகள்/ அலகுகள் ஆகியவற்றின் தொழிற்பாடுகள்



சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் தொடர்புகள் பிரிவு

தனியார் நிறுவனங்களிலும் இளைப்பாற்றுச் சம்பளம் கிடைக்கப் பெறாத அரச நிறுவனங்களிலும் பணிபுரியும் ஊழியர்களின் மொத்த வருவாயில் 3மூஇனைப் பங்களிப்புச் செய்வது கட்டாயமாகும். தொழில்தருநர்களிடமிருந்து உரிய நேரத்தில் பங்களிப்புக்களைச் சேகரித்தல், மேலதிக கட்டண அறவீடுகளைச் சேகரித்தல், தவறுபவர்களை/ பங்களிக்காதோரை அடையாளங்காணுதல், தவறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் போன்றன பங்களிப்புச் சேகரித்தல் படிமுறையுடன் தொடர்புடைய முக்கியமான செயற்பாடுகளாகும். சபையின் சேகரிப்பு இலக்குகளை அடைவதே சேகரிப்பு மற்றும் தொழில்தருநர் தொடர்புப் பிரிவின் பொறுப்பு ஆகும்."

முதலீட்டுப் பிரிவு

சபையின் பல்வேறு முதலீட்டு நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள முதலீட்டுப் பிரிவு நிறுவனத்தின் முக்கிய வர்த்தக அலகாகும். முதலீடுகள் மற்றும் திரவத்தன்மையின் பாதுகாப்பினைப் பேணும் அதே வேளையில் உச்ச வருவாயை ஈட்டுவதே இவ்வலகின் முக்கிய நோக்கமாகும். முதலீட்டுத் தீர்மானங்களுக்கான வழிகாட்டியாக விரிவான முதலீட்டுக் கொள்கை ஒன்று உள்ளது.





அங்கத்தவர் சேவைகள் பிரிவு

இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாவன, அங்கத்தவர் கணக்குகளை இற்றைப்படுத்தல் மற்றும் பேணுதல், அங்கத்தவர்களுக்கு வருடாந்த அங்கத்தவர் கூற்றுக்களை வெளியிடுதல் , பொது நலன்களின் (சாதாரண மற்றும் மரண நலன் கோரல்கள்) துரித செயலாக்கம் மற்றும் செயற்படு அங்கத்தவர்களுக்கான ஏனைய நலன்புரித் திட்டங்களைப் பேணுதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. இப்பிரிவின் செயற்பாடுகளை மேலும் வலுவூட்டுவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிதிப் பிரிவு

நிதிப் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளாவன, மாதாந்த மற்றும் வருடாந்த கணக்குகள், வருடாந்த வரவு செலவுதிட்டம் மற்றும் பணிக்குழாத்தினரதும் ஏனையவற்றினதும் கொடுப்பனவுகள் ஆகியவற்றை அரச வரிகளுக்கு உட்பட்டவாறு தயாரித்தல், அரச கணக்காய்வு விடயங்களை ஒருங்கிணைத்தல், கூட்டிணைந்த திட்டம் மற்றும் ஏனைய முகாமைத்துவ தகவல் அறிக்கைகள் ஆகியவற்றைத் தயாரித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.





நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவு

தற்போதைய போட்டிமிக்க வர்த்தகச் சூழலில் இன்றியமையாத நவீன மனித வள நுட்பங்கள் மற்றும் சிறந்த அலுவலக நடைமுறைகள் ஆகியவற்றை பின்பற்றுவதன் தேவை அறியப்பட்டுள்ளது. ஒரு சேவை நிறுவனமான நுவுகு சபை மக்கள் மீது (ஊழியர்கள்) தங்கியிருக்கும் தன்மையானது மிகவும் உயர்வானது. எனவே, நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை அபிவிருத்தி மற்றும் விருத்தி செய்வதற்கு உயர் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவினால் பின்பற்றப்படும் வழிமுறைகள் மற்றும் காணப்படும் முறைமைகளை இற்றைப்படுவதற்கும் விருத்தி செய்வதற்கும் மற்றும் பணிக்குழாத்தினருக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சபையின் திணைக்களங்கள்/ பிரிவுகள்/ அலகுகள் ஆகியவற்றின் தொழிற்பாடுகள்

6 தகவல் தொழில்நுட்பப் பிரிவு

தகவல் தொழில்நுட்பப் பிரிவானது பிரதானமாக அங்கத்தவர் நிர்வாக மென்பொருள் முறைமையினை முகாமை செய்வதற்கும் பேணுவதற்கும் பொறுப்பாயுள்ளது. இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனத்துடன் இணைந்து தொழில்நுட்பப் பிரிவை மறுசீரமைப்பதற்கு தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

7 கணக்காய்வு மற்றும் உத்தரவாதப் பிரிவு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது போதிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் நிறுவப்பட்டுள்ளன எனவும் அவ்வாறான முறைமைகள் தொடர்ச்சியாகவும் பொருத்தமாகவும் பிரயோகிக்கப்படுகின்றன எனவும் உறுதிப்படுத்தவதற்கு பொறுப்பாயுள்ளது. பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு) நேரடியாகவே தலைவருக்கு அறிக்கையிடுவார். உள்ளகக் கணக்காய்வின் ஏற்கனவே உள்ள முறைமைகள் மற்றும் நடைமுறைகளின் நம்பகத்தன்மையை மீள்மதிப்பீடு செய்வதற்கு ஓர் ஆய்வினை மேற்கொள் வேண்டும் என்றும் நிறுவனத்தின் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் பயனுறுதிமிக்க கருவியொன்றாக உள்ளகக் கணக்காய்வின் வகிபங்கினை வலுவூட்டுவதற்கும் முகாமைத்துவம் கருத்திற் கொண்டுள்ளது.

8 சட்டப் பிரிவு

சட்டப்பிரிவானது சபையின் அனைத்து சட்ட விவகாரங்களுக்கும் ஆலோசனை சேவைகளை வழங்கும் அலகொன்றாகச் செயற்படுகின்றது. பிராந்திய அலுவலக வலையமைப்பு விரிவாக்கத்துடன் பிராந்திய மட்டத்திற்கு சட்ட நடவடிக்கைகள் பரவலாக்கப்பட்டுள்ளன. சட்டப் பிரிவானது பிரதிப் பொது முகாமையாளரின் (சட்டம்) கண்காணிப்பின் கீழ் இயங்குகின்றது.

செயலாற்றுகை மீளாய்வு

பெறுமதி சேர்க்கப்பட்ட வெளிப்படுத்தல்

சபையின் பெறுமதியை உருவாக்குதல் தொடர்பிலான பகுப்பாய்வு மற்றும் குழுமத்தின் பிரதான தரப்பினர்களுக்கு மத்தியில் உள்ள வேறாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

	2022 ரூ.மில்லியன்.	2021 ரூ.மில்லியன்.	வித்தியாசம் %
சேர்க்கப்பட்ட பெறுமதி			
பிரதான வியாபார முயற்சிகள் மூலம் உழைக்கும் வருமானம்	45,677.35	35,201.80	29.76
சேவை கிரயம்	(292.05)	(330.07)	11.52
பிரதான வியாபார முயற்சிகள் மூலம் சேர்க்கப்பட்ட பெறுமதி	**45,385.29**	**34,871.73**	**30.15**
வேறு வருமானங்கள்	444.59	288.09	54.32
கடன் மற்றும் வேறு நட்டங்களுக்கான அறவீடுகள்	76.82	0.48	16,049.81
பெறுமதியை சேர்த்தல்	**45,906.70**	**35,160.30**	**30.56**
ஊழியர்களுக்கு பெறுமதியை வேறாக்கல்			
சம்பளம், வேதனம் மற்றும் வேறு நலன்கள்	1,392.35	1,264.34	(10.13)
அங்கத்தவர்களுக்கு			
அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி	12,679.22	11,808.66	7.37
அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம்	24,301.89	16,366.67	48.48
அரசுக்கு			
வரிச் செலவினம்	6,449.43	4,590.14	(10.51)
சமூகத்திற்கு			
அங்கத்தவர் நலன்கள்	477.05	440.91	8.20
விரிவாக்கல் மற்றும் விருத்திக்காக			
தடுத்துவைக்கப்பட்ட இலாபம்	(2.80)	649.40	(100.43)
தேய்மானம் மற்றும் கடன்கழிப்பு	36.06	39.97	(9.78)
வேறாக்கப்பட்ட மொத்தப் பெறுமதி	**45,333.20**	**35,160.30**	**28.93**

சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி (EVA)

சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி நிறுவனமொன்றின் உண்மையான பொருளாதார இலாபத்தை எடுத்துக்காட்டும். சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி என்பது குறிப்பிடத்தக்க ஆபத்தான பங்குதாரர்களுக்கு தேவையான ஆகக் குறைந்த நலன்களை விஞ்சும் அல்லது குறையும் உழைப்பின் அளவு பற்றிய மதிப்பீடாகும்.

	2022 ரூ.மில்லியன்.	2021 ரூ.மில்லியன்.
முதலீட்டு மூலதனம்		
பொதுவான அங்கத்தவர் நிதியம்	432,959.75	390,752.19
சேர்க்க : கடன் மற்றும் வேறு நட்டங்களுக்கான திரண்ட இழப்பீட்டு ஒதுக்கம்	86.47	9.65
	433,046.22	**390,761.84**
முதலீட்டு மூலதனம் மீதான நலன்கள்		
வரிக்குப் பின்னரான இலாபம்	36,978.31	28,569.36
சேர்க்கப்பட்ட கடன் மற்றும் வேறு நட்டங்களுக்கான திரண்ட இழப்பீட்டு ஒதுக்கம்	76.82	0.48
முதலீட்டு மூலதனத்தின் மீதான மொத்த நலன்கள்	**37,055.12**	**28,569.83**
முதலீட்டு மூலதனத்தின் சூழ்நிலை கிரயம்	(108,218.25)	(24,618.00)
சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி	**(71,163.13)**	**3,951.84**

*2022 சாதாரண பாரமில் - 24.99% 12 மாத பொதுத் திறைசேரிப் பட்டியல் மீது கணக்கிடப்பட்டுள்ளது. (2021 - 6.00%)



தவிசாளரின் மீளாய்வு

"ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அத்தியாவசிய சேவைக்குள் வராத எனினும் நெருக்கடிமிக்க சூழலில் தொடர்ந்தும் தடையில்லாத சேவையை வழங்கிய சில அரச நிறுவனங்களில் ஒன்றாகும். எமது அர்ப்பணிப்புமிக்க குழுவின் முயற்சியினால் அதன் அங்கத்தவர்களுக்கு உரிமைகோரல்களை வெற்றிகரமாக வழங்குவதற்கான புதிய வழிமுறைகள் கண்டறியப்பட்டன."

அன்புள்ள பங்குதாரர்களே,

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் நாட்டின் மிகப்பெரிய சமூகப் பாதுகாப்பு நிதியங்களில் ஒன்றாக காணப்படுகின்றது. அதே நேரம் அதன் அங்கத்தவர்களுக்கும் சமூகத்திற்கும் அதன் பங்களிப்பை தொடர்ந்தும் வழங்கி வருகின்றது.

இந்த வருடத்திற்கான ஆண்டறிக்கையின் கருப்பொருளான "தாங்கும் வலிமை" எனும் தலைப்பின் கீழ் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் நாட்டில் நிலவிய அனைத்து சவால்களையும் முறியடித்து அதன் அங்கத்தவர்களுக்கும் நாட்டிற்கும் அதிகமான நலங்களை வழங்கியுள்ளதையும் அதன் வலுவான நிலைபேர்தன்மையையும் எடுத்துக்காட்டுகின்றது.

இன்னலுக்கு மத்தியில் செயற்படுதல்

ஸ்தீரமற்ற அரசியல் நிலைமை மற்றும் உயர்வான அரசிறை, வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் நிதித் துறை ஏற்றத்தாழ்வுகள் என்பன 2022 ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதாரக் கண்ணோட்டத்திற்கு குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தின. 2022 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் நாட்டின் பொருளாதாரம் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 4.8 சதவீதத்தால் சுருங்கியது. இவ்வாறான இடையூறுகள் காரணமாக பல வர்த்தக நடவடிக்கைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டன, எனவே, பல வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டன. இவ்வாறான இன்னல்களுக்கு மத்தியில் பல நிறுவனங்கள் மிகக் குறைந்த அளவு பங்களிப்பையே சபைக்கு வழங்கின. இவை அனைத்திற்கும் மத்தியில் நிதியம் தனது நிர்வாகத்தின் கீழ் அதன் சொத்துக்களின் வளர்ச்சியை 464 பில்லியன் ரூபா வரை அதிகரித்துக்கொண்டுள்ளது. முன்னைய நிதியாண்டில் பதிவு செய்யப்பட்ட 409 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டின் இறுதியில் நதியத்தின் சொத்துக்களின் நிகர மதிப்பு 12.5% ஆல் அதிகரித்து 460 பில்லியன் ரூபாவான காணப்பட்டது.

2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மத்திய வங்கி அதன் கொள்கை விகிதங்களை 150 அடிப்படை புள்ளிகளால் உயர்த்தியது. பணவீக்கத்தை மீட்டெடுக்கும் நடவடிக்கையாக முன்னெப்போதும் இல்லாத வகையில் ஏப்ரல் மாதத்தில் 700 அடிப்படை புள்ளிகளால் அது உயர்த்தப்பட்டது. இந்த வட்டி விகித உயர்வு மீளாய்வுக்குரிய வருடத்தின் சபையின் வருமானத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. சபையின் மொத்த வருமானம் 30% ஆல் அதிகரித்து 46 பில்லியன் ரூபாவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. சராசரி பணவீக்கம் 34.6% ஆக இருந்த போதிலும் செலவினங்களைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் வழிகாட்டலின் பிரகாரம் செலவினங்கள் இறுக்கமாக நிர்வகிக்கப்பட்ட காரணத்தினால் சபையின் மொத்தச் செலவுகள் 16% மாத்திரமே அதிகரித்துள்ளன. வரிக்கு முந்திய இலாபம் 43.4 பில்லியன் ரூபாவாக காணப்படுகின்றது. இது கடந்த ஆண்டை விட 30% அதிகரிப்பாகும். இந்த அடைவின் மூலம் சபை அதன் அங்கத்தவர்களுக்கு 8.75% தொகையை பகிர்ந்தளிக்க முடிந்தது.

துணை நிறுவனங்கள்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையானது அதன் துணை நிறுவனமான சிலோன் சால்ட் கம்பனியின் அமைப்பை மறுசீரமைத்து புதிய குழுவை நியமித்தது. அத்தோடு நிறுவனத்தின் செயல்திறனைக் கண்காணிக்கும் முயற்சியையும் முன்னெடுத்துள்ளது. மேலும் பங்கிலாபத்தின் அடிப்படையில் அதிக பங்களிப்பை வழங்க முடியுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கமைய துணை நிறுவனம் அதிக பங்கிலாபத்தை வழங்கியதன் மூலம் சபையின் செயல்திறனுக்கு பங்களிப்புச் செய்து மீளாய்வுக்குரிய ஆண்டில் குறிப்பிடத்தக்க செயல்திறனைக் காட்டியுள்ளது.

பொருளாதார நெருக்கடியை வழிநடத்துதல்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அத்தியாவசிய சேவைக்குள் வராத எனினும் நெருக்கடிமிக்க சூழலில் தொடர்ந்தும் தடையில்லாத சேவையை வழங்கிய சில அரச நிறுவனங்களில் ஒன்றாகும். எமது அர்ப்பணிப்புமிக்க குழுவின் முயற்சியினால் அதன் அங்கத்தவர்களுக்கு உரிமைகோரல்களை வெற்றிகரமாக வழங்குவதற்கான புதிய வழிமுறைகள் கண்டறியப்பட்டன. அவ்வாறே, பல சவால்களுக்கு மத்தியிலும் நெருக்கடியான காலக்கட்டத்தில் எமது முதலீட்டுச் செயற்பாடுகளை சிறந்த முறையில் பராமரிக்க இயலுமாகியது. "வீட்டிலிருந்து வேலை" எனும் எண்ணக்கருவுடன் இணைந்து மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரையிலான ஊழியர்களின் அயராத முயற்சியுடன் சுழற்சி முறையிலான பணி அட்டவணைகள் மூலம் கூடிய எண்ணிக்கையிலான அங்கத்தவர்களுக்கு தடையற்ற சேவையை வழங்குவதற்கு இயலுமாகியது. இது சபையின் வெற்றிக்கு காரணமாக அமைந்தது என்றால் மிகையாகாது.

இ - ஆளுகை

"டிஜிட்டல் அரசாங்கம்" பற்றிய அரசாங்கத்தின் கொள்கையுடன் இணைவதற்காக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை ஏற்கனவே அதன் முக்கிய வர்த்தகம் மற்றும் ஒத்துழைப்பு சேவைகளை டிஜிட்டல்மயப்படுத்த ஆரம்பித்திருந்தது. அரசாங்கத்தின் இ - ஆளுகை முன்முயற்சிக்கு ஏற்ப காகிதமற்ற சூழலை உருவாக்கும் பொருட்டு நீண்டகால மாற்றத்தை நோக்கி நகர்வதற்கு சபை எதிர்ப்பார்க்கின்றது. புதிய

அமைப்புமுறையானது அங்கத்தவர்களை மையமாகக் கொண்ட தகவல் முறைமை மற்றும் போர்ட்டலாக காணப்படும், இது தொழில் வழங்குநர்களின் பங்களிப்புக்கள், பணத்தைத் திரும்பப்பெறுதல் மற்றும் நலன் கோரிக்கைகளை சிறப்பாக செயற்படுத்துவதற்கும் அங்கத்தவர்களின் அனுபவத்தை மேம்படுத்துவதற்கும் உதவியாக அமையும். இது கிளவுட் அடிப்படையிலான பயன்பாடாக காணப்படும். எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எந்தவொரு சவாலான நிலைமையின் போதும் சேவை நிலைகளை பராமரிப்பதன் மூலம் தொலைதூரத்தில பணியாற்றும் எமது பணியாளர்களுக்கும் அது உதவியாகக் காணப்படும்.

இந்தக் கருத்திட்டம் தற்போது அதன் இறுதிக் கட்டத்தில் உள்ளது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில் புதிய அமைப்பு நடைமுறைக்கு வரவுள்ளது. இது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நியத்தின் வளர்ச்சிப் பாதையின் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமையும். ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்திடமிருந்து (ஐஊவுயு) தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியைப் பெற்றுக்கொள்கின்றது.

இந்த குறிப்பிடத்தக்க பயணத்தை எளிதாக்கும் வகையில், 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 15 க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட தொழில் வழங்குநர்களுக்கு இணைய வழியில் பணம் செலுத்தும் திட்டம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

எமது மனித வளம்

எமது பணியாளர்களின அர்ப்பணிப்பினால் நாட்டில் எவ்வாறான சவால்கள் இருந்தபோதிலும், எமது அங்கத்தவர்களுக்கு இடையூறற்ற சேவையை வழங்க முடிந்ததென்பதை பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

செயல்முறை விருத்தி, தொழில்நுட்ப இற்றைப்படுத்தல் மற்றும் பயிற்சி மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றின் மூலம் எமது தற்போதைய ஆளணியின் அறிவு, திறன்கள் மற்றும் செயல்திறனை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். தொழில்நுட்ப நீதியில் எமது ஆளணியை வலுப்படுத்துவதன் மூலம் எமது சேவை அனுபவத்தை மேலும் தரப்படுத்த முடியும்.

விருதுகளும் பாராட்டுகளும்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வருடாந்த அறிக்கை - 2020 க்கு இலங்கையின் பொது நிதிக் கணக்காளர்கள் சங்கத்தினால் (யீகுயுளுடு) பொதுத் துறைப் பிரிவில் ஒட்டுமொத்த வெற்றியாளர் விருதும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் இரண்டாவது முறையாகவும் 'நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் ஆணைக்குழு' பிரிவில் தங்க விருதும் கிடைக்கப்பெற்றது. இந்த விருதுகள் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் பெருநிறுவன நிர்வாகத்தின் மிக உயர்ந்த தரத்தை பராமரிப்பதில் எமது அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றன.

எதிர்கால நோக்கு

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அதன் அங்கத்தவர்களுக்கு திறமையான சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, முழுமையான டிஜிட்டல் மயமாக்கல் செயல்முறையை நோக்கிய அதன் எதிர்காலப் பயணத்தை திட்டமிட்டுள்ளது. அரசாங்கத்தின் நிதிக் கொள்கைகளை ஆதரிக்கும் அதே வேளையில் திறமையான பட்டியலிடப்பட்ட முதலீட்டைப் பராமரிப்பதே எமது நோக்காகக் காணப்படுகின்றது.

நிதி மற்றும் முதலீட்டில் பங்கேற்பதன் மூலம் பணியாளர்களின் உரிமை, நலன்கள் மற்றும் பொருளாதார ஜனநாயகத்தை ஊக்குவித்து மற்றும் அவர்களின் ஓய்வுக்குப் பிறகு ஊழியர்களுக்கு பங்களிப்பு இல்லாத நலன்களை வழங்குவதற்கும் நாம் எமது அங்கத்தவர்களுக்கு உறுதியளிக்கின்றோம். அவ்வாறே பங்குதாரர்களுக்கு மதிப்பளிப்பதையும் நாம் தொடருவோம்.

நன்றி நவிழல்

அங்கத்தவர்களின் ஓய்வூதிய நிதியை நிர்வகிப்பதில் எங்கள் மீது அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கும் உறுதிக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அர்ப்பணிப்பும் ஊக்கமும் கொண்ட எமது ஆளணியினர் முன்மாதிரியான சேவையை வழங்குவதில் சவால்களை எதிர்கொண்டனர். அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நிர்வாகக் குழுவுக்கும் மற்றும் ஊழியர்களின் அர்ப்பணிப்புக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவிக்க இதனை சந்தர்ப்பமாகக் கருதுகின்றேன்.

அத்தோடு, இந்த சவால்மிக்க வருடத்தில் எமக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கிய மாண்புமிகு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்ளகைகள் அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதே போன்று அமைச்சின் செயலாளர் உட்பட அதிகாரிகள் மற்றும் பொதுத் தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உட்பட ஆளணியினருக்கும் நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். அவ்வாறே சபையை சரியான திசையில் மூலோபாய ரீதியில் வழிநடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களையும் இங்கு நினைவுகூறுகின்றேன்.

இறுதியாக, நாட்டின் இரண்டாவது மிகப் பெரிய ஓய்வூதிய நிதியமாக சபை காணப்படும் என்ற எதிர்பார்ப்பை நம்பிக்கையுடன் எடுத்தியம்புவதற்கு எமக்கு உதவிய அனைத்து பங்குதாரர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. டி.எல்.பி. ரோஹண அபயரத்ன
தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
(பதில் கடமை)

னுஜசுநுஊவுழுசு'ளு சுநுீழுசுவு

"ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை 2022 ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு வலுவான செயல்திறனைக் காட்டியது. சவாலான நுண்பொருளாதார நிலைமைகள் மற்றும் பலவீனமான பேரினப் பொருளாதாரக் கண்ணோட்டம் இருந்த போதிலும் மொத்த வருமானம் மற்றும் இலாபம் ஆகிய இரண்டும் கிட்டத்தட்ட 30மூ ஆல் அதிகரித்துள்ளன. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அதன் மூலோபாய இலக்குகள் மூலம் தொடர்ந்தும் அங்கத்தவர்களுக்கு சேவைகளை வழங்கி சிறந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் நாட்டின் இரண்டாவது பெரிய சமூகப் பாதுகாப்பு நிதியமாகத் திகழ்வதற்கு வாடிக்கையாளர்களின் திருப்தி மற்றும் சிறந்த வருமானம் உந்து சக்தியாகவும் முக்கிய தூண்களாகவும் காணப்படுபவதாக பணிப்பாளர் சபை நம்புகின்றது."

செயற்படுத்தலின் சிறப்பியல்புகள்

உள்ளக மற்றும் வெளிப்புற சவால்கள் இருந்த போதிலும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அங்கத்தவர்களின் திருப்தியில் முக்கிய கவனம் செலுத்திவருகின்றது. நுண் மற்றும் பேரினப் பொருளாதார முறைகளில் ஸ்தீரமற்றப் போக்கு காணப்பட்ட வருடங்களில் நிலவிய அசாதாரண சவால்கள் இங்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. எனினும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை நாட்டுக்காக வழங்கிய தொடர்ச்சியான சேவை மூலம் வலுவான செயல்திறனை 2022 ஆம் ஆண்டில் பதிவுசெய்திருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

2022 ஆம் ஆண்டில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் செயல்திறனுக்கான வரைவிலக்கணமாக "நிலையான வலிமை" என்பது காணப்படுகின்றது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையானது கடந்த நான்கு தசாப்த காலப் பகுதிக்கும் மேலாக நிதி நெருக்கடிகள் மற்றும் பொருளாதார மந்த நிலைகளை முகாமைத்துவம் செய்வதில் அனுபவத்தைப் பெற்றுள்ளது. ஒவ்வொரு இன்னல்மிக்க காலப்பகுதியிலும் சுருசுருப்பாகவும் தயார் நிலையிலும் செயற்பட்டு அனைத்து தரப்பினரும் வெற்றியடைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதே போன்று நிலையான தயார் நிலையும் விடாமுயற்சியுடன் அபாயங்கள் மற்றும் நெருக்கடிகளை நிர்வகிக்கும் அணுகுமுறையும் எல்லா சந்தர்ப்பங்களிலும் எமது இருப்பை உறுதிசெய்துள்ளது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, வாடிக்கையாளர் சேவைகளை மேம்படுத்தும் அதே நேரம் உகந்த செயல்பாடுகளுக்கான உள் செயல்திறனை மேம்படுத்தும் வகையில் நன்கு நிர்வகிக்கப்பட்ட முதலீட்டு நடவடிக்கைகள் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் நடவடிக்கைகள் மூலம் அங்கத்தவர்களுக்கு முதலீட்டில் கவர்ச்சிகரமான வருமானத்தை வழங்குவதற்கு அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுத்துவருகின்றது. நிலையற்ற சூழல் இருந்தபோதிலும், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தால் கட்டாயப்படுத்தப்பட்ட 3.00மூ குறைந்தபட்ச வட்டி விகிதத்துடன் 5.75மூ பங்கிலாபத் தொகையை வழங்குவதற்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை நியாயமான உறுதியான செயல்திறனுடன் நடவடிக்கை எடுத்தது. எமது மூலோபாயங்களின் வெற்றிக்கான சான்றாக எமது முடிவுகளும் ஊழியர்களின் அர்ப்பணிப்பும் காரணமாக அமைந்தது. மேலும் எமது அங்கத்தவர்களின் நல்வாழ்வு மற்றும் எதிர்காலத்திற்காக எம்மால் செய்ய முடியுமான சிறந்த சேவையை வழங்குவதே எமது நோக்கமாக உள்ளது.

ஆரம்பத்திலிருந்தே, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முதலீடுகள் முதலீடுட்டுச் சந்தையில் ஏற்ற இறக்கம் இருந்தபோதிலும், அதன் ஆணையை சந்திக்கும் திறனை உறுதி செய்யும் அதே நேரம் முதலீடு உகந்ததாக இருப்பதை உறுதிசெய்யும் ஒரு ஒழுங்குமுறை அணுகுமுறையால் வழிநடத்தப்படுகின்றது. அதே நேரம் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முதலீட்டுச் சொத்துக்கள் முதன்மையாக பாதுகாப்பு நோக்கத்துடன் அரசாங்கப் பத்திரங்களிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின அனைத்து முதலீட்டுத் தீர்மானங்களும் எமது அங்கத்தவர்களுக்கு சிறந்த வருமானத்தை வழங்கும் நோக்கிலும் எமது அங்கத்தவர்களின் ஓய்வூதிய சேமிப்பைப் பாதுகாக்கும் நோக்கிலுமே மேற்கொள்ளப்படுகின்றன.

டிஜிட்டல்மயமாக்கல்

2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட டிஜிட்டல் பயணம் தற்போது முடிவுக்கு வந்துள்ளது. அவ்வாறே ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தனது வரலாற்றில் முதல் முறையாக புதிய அங்கத்தவர்களை மையப்படுத்திய அமைப்பை வரவேற்கத் தயாராக உள்ளது. இத்திட்டம் 2023 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
வாடிக்கையாளர்களுக்குச் சிறப்பாகச் சேவை செய்யும் நோக்கில் அங்கத்தவர்களை மையமாகக் கொண்ட சூழலில் செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்ட நவீன நுசீ தரவுத் தளத்தில் செயல்படுத்த இந்த அமைப்புமுறை கட்டமைக்கப்பட்டுள்ளது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் நேரடியாக கொடுப்பனவுகளை வரவு வைக்கும் இன்னுமொரு இ-கருவி முறையும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அதிகமான வங்கிகள் அதன் இ-பேங்கிங் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

விருதுகளும் பாராட்டுகளும்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் இலங்கையின் பொது நிதிக் கணக்காளர்கள் சங்கத்தினால் (யீகுயுளுடு) பொதுத் துறைப் பிரிவில் ஒட்டுமொத்த தங்க விருதும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் 'நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் ஆணைக்குழு' பிரிவில் தங்க விருதும் கிடைக்கப்பெற்றது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை தொடர்ச்சியாக நான்காவது முறையாக இந்த விருதை வென்றுள்ளது. இந்த விருதுகள் நிறுவன அறிக்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களின் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், சமூகப் பொறுப்பு மற்றும் பெருநிறுவன நிர்வாகத்தின் மிக உயர்ந்த தரத்தை பராமரிப்பதிலும் எமது அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றன.

எதிர்கால நோக்கு

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அதன் அனைத்து அங்கத்தவர்களுக்கும் தரமான ஓய்வுக்கான நிபந்தனைகளை உள்ளடக்கிய ஆணையை உருவாக்குவதை ஒரு தார்மீகக் கடமையாக ஏற்றுக்கொள்கின்றது. தற்போதைய தெரிவுநிலையின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டில் முக்கியமான வர்த்தக டிஜிட்டல் மயமாக்கல் செயல்முறையை நிறைவு செய்து, அதை இ - ஆளுமையை நோக்கி நகர்த்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் சபை அதன் வழமைக்கு மாற்றமாக சவாலான பொருளாதார நிலைமைகளை தாக்குப்பிடிக்கும் வகையில் சபையின் உத்திகளை மீளமைப்பதற்கும் உத்தேசித்துள்ளது.

நன்றி நவிழல்

எமது அங்கத்தவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் மற்றும் சபையுடன் இணைந்துள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் பங்கிலாப பெறுமதிகளை உருவாக்கி தரமான வாழ்கையை மேம்படுத்த நாம் கடமைப்பட்டுள்ளோம். எமது நம்பகமான ஊழியர்கள் இன்றி அதனை எம்மால் அடைந்துகொள்ள முடியாது. மூலோபாய ரீதியில் மாறிவரும் சூழலுக்கு ஏற்ற வகையில் முயற்சியுனும் கடின உழைப்புடனுடனும் பணியாற்றிவரும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஊழியர்களின் அர்ப்பணிப்பு குறித்து பெருமையடைகின்றேன்.

இந்த சவால்மிக்க ஆண்டில் தவிசாளர், பொது முகாமையாளர், உயர் முகாமைத்துவம் மற்றும் அனைத்து ஆளணியினருக்கும் அங்கத்தவர்களின் நலனுக்காக மேற்கொள்ளும் தொடர்ச்சியான அர்ப்பணிப்பிற்காக எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



திரு. டி.எல்.பி. ரோஹண அபயரத்ன
தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
(பதில் கடமை)

முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு


2022 ஆம் ஆண்டு

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டு, பொருளாதார ஸ்திரமின்மை, சமூக அமைதியின்மை மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றின் அடிப்படையிலான காரணிகளின் கலவையால் உருவாக்கப்பட்ட சவால்மிக்க ஒரு காலப்பகுதியாகும். கொவிட் தொற்றுநோய் நிலைமையை வெற்றிகரமாகச் சமாளித்து, பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் சிறந்த வளர்ச்சியை நோக்கிய புதிய நம்பிக்கையுடன் 2022 ஆம் ஆண்டை இலங்கை ஆரம்பித்துள்ளது. பேரினப் பொருளாதாரக் கொள்கைகளைப் பயன்படுத்தத் தவறியதன் விளைவாக கடந்த காலத்தில் இலங்கையால் நிலையான பொருளாதார வளர்ச்சியைத் தக்கவைக்க முடியவில்லை. பலவீனமான முதலீட்டு சூழல், தளர்வான பணவியல் கொள்கை மற்றும் நிர்வகிக்கப்பட்ட நாணய மாற்று விகிதம் ஆகியவை வெளிப்புற ஏற்றத்தாழ்வுகளுக்கு பங்களித்துள்ளன. 2019 ஆம் ஆண்டில் வரி குறைப்புகளுடன் குறைந்த வருமான வகூல் மூலம் வழிநடாத்தப்பட்ட நிலையான நிதி ஏற்றத்தாழ்வுகள், அதிக நிதி பற்றாக்குறை என்பன அதிகப்படியான கடன் சுமையின் விரைவான வளர்ச்சிக்கு பங்களித்துள்ளன.

கடன் தரமதிப்பீடுகள் குறைக்கப்பட்ட பின்னர் இலங்கை சர்வதேச நிதிச் சந்தைகளுக்கான பிரவேசத்தை இழந்தது. சந்தைப் பிரவேசம் இன்றி இலங்கை தனது வெளிநாட்டுக் கடனைத் தொடர்ந்து செலுத்தி வந்தது. அத்தோடு, உத்தியோகபூர்வ இருப்புக்கள் மற்றும் வங்கித் துறையின் கடன்களைப் பயன்படுத்தி இறக்குமதிகளுக்குச் செலுத்தியது. 2022 ஆம் ஆண்டில் ஜூன் மாதத்தில் அதிகாரப்பூர்வ கையிருப்பு (சீனாவுடனான 1.5 பில்லியன் டொலருக்குச் சமமான நிதி பரிமாற்றத்தை தவிர) ருளுனு 400 மில்லியனுக்கும் குறைவாக இருந்தது. தொடர்ச்சியான அந்நிய செலாவணி பற்றாக்குறையின் காரணமாக 2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டிலிருந்து இலங்கை எரிபொருள், மருந்து, சமையல் எரிவாயு மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு தேவையான பல்வேறு உள்ளீடுகள் பற்றாக்குறையாக காணப்பட்டது. கூட்டுத்தாபனத் துறையானது அதன் உற்பத்தி செயற்பாடுகளை பராமரிப்பதில் வெளிநாட்டு நாணயம் இன்மையினால் அதன் விநியோகச் சங்கிலிகளில் இடையூறுகளை எதிர்கொண்டது. அதே நேரத்தில் விவசாயிகள் உரங்கள் மற்றும் எரிபொருள் பற்றாக்குறையை எதிர்கொண்டனர். இறுதியில் இலங்கைப் பொருளாதாரம் 7.8% என்ற கடுமையான சுருக்கத்துக்கு தள்ளப்பட்டது.

2022 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் வருடாந்த புள்ளி பணவீக்கம் 64.3 சதவீதத்தை எட்டியது. அதிக உணவுப் பணவீக்கம் 93.7 சதவீதத்தை எட்டியது அதற்கான காரணமாக இருந்தது. உலகளாவிய ரீதியில் பொருட்களின் விலை உயர்வு, நிதிப் பற்றாக்குறையை சமாளிப்பதற்கு பணம் அச்சிடுதல், பணம் மதிப்பிழப்பு மற்றும் விநியோகச் சங்கிலி சீர்குலைவு ஆகியவற்றின் தாக்கங்கள் இதில் பிரதிபலிக்கின்றது. இலங்கை மத்திய வங்கிக்கு புதிய ஆளுநர் நியமிக்கப்பட்டதுடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதத்தை 700 அடிப்படை புள்ளிகளால் 13.50 வீதம் மற்றும் 14.50 வீதமாக அதிகரிக்க தீர்மானித்தது. முறையே. இந்த விகிதங்கள் பின்னர் அதிக பணவீக்கத்தைக் குறைப்பதற்காக மேலும் 100 அடிப்படை புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டன. தாங்க முடியாத பணவீக்கச் சூழ்நிலையால் பொதுமக்கள் தங்களது நுகர்வு மற்றும் செலவு முறைகளை மாற்ற வேண்டி ஏற்பட்டது. இந்த நிலைமை நிறுவனங்களின் சந்தைத் தளம் சுருங்குவதற்கு நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்தும் அதே நேரம் இறுதியில் அவர்களின் விற்பனை அளவையும் வருமானத்தைப் பாதிக்கின்றது.

2022 ஆம் ஆண்டில் பணவீக்கம்




மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், இலங்கை.


வட்டி வீதங்கள்

பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்த உயர் கொள்கை வட்டி விகிதங்களை பராமரிப்பதன் விளைவாக பிரதான சந்தை வட்டி விகிதங்களை உயர்த்தப்பட்டுள்ளன. இலங்கை மத்திய வங்கியானது வர்த்தக வங்கிகளுக்கான கடைசி முயற்சியாக கடன் வழங்குவதுடன், 2022 ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக அதிகரித்த கடன்களுக்கான வட்டி வீதம் (சராசரி கடன் வழங்கும் முதல்நிலை கடன் வீதம்) ஆண்டின் இறுதியில், மேற்படி சராசரி கடன் வழங்கும் முதல்நிலை கடன் விகிதம் 27.24% ஐ எட்டியது. இந்த உயர் வட்டி வீதம் வணிகங்கள் தங்கள் நிதிச் செலவுகளை முகாமை செய்வதற்கு அழுத்தத்தைக் கொடுத்தது. கடன் வாங்கும் செலவின் அதிகரிப்பு உற்பத்தி செயல்முறையின் இயக்கச் செலவுகளைப் பாதிக்கின்றது. இதன் மூலம் இன்னுமொரு சுற்றில் தொடர்புடைய விலை மட்டங்களில் அழுத்தம் அதிகரிக்கின்றது. சிறு மற்றும் நடுத்தரத் துறையைச் சேர்ந்த தொழில்முனைவோர் தங்கள் வணிகங்களைக் குறைக்கவோ அல்லது செயல்பாடுகளை நிறுத்தவோ அழுத்தம் கொடுக்கப்பட்டனர்.

இலங்கை மத்திய வங்கியின் உயர் கொள்கை விகிதங்களைப் பேணுவதற்கான தீர்மானத்தின் விளைவாக நாட்டில் பணப் புழக்கம் குறைந்து திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி பிணைமுறிச் சந்தைகளில் வருவாய் விகிதங்கள் அதிகரித்தன.




மூலம் : இலங்கை மத்திய வங்கி



மூலம் : இலங்கை மத்திய வங்கி

முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

இலங்கையின் வருவாய் வட்டம் - 2022 டிசம்பர் 5 இலங்கை அரசின் பிணைமுறிகள்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

இலங்கையின் பொருளாதாரம்


2022 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் பொருளாதாரம் 4.8 சதவீத வருடாந்த புள்ளி விகிதத்தில் சுருங்கியது. உள்ளீடுகளின் பற்றாக்குறை மற்றும் விநியோகச் சங்கிலி சீர்குலைவுகளுக்கு மத்தியில் அனைத்து முக்கிய துறைகளும் சுருங்கின. 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் சுமார் 9.2 வீதத்தால் சுருங்கும் என கணிக்கப்பட்டுள்ளது. அதிக பணவீக்கம், மின்வெட்டு, அதிக வட்டி விகிதங்கள், டொலர் தட்டுப்பாடு மற்றும் எரிபொருள், உரம் மற்றும் விநியோகச் சங்கிலித் தடைகள் ஆகியவற்றின் பொருளாதாரத்தின் மீதான தாக்கம் காரணமாக விவசாயத்தை உள்ளடக்கிய பொருளாதாரத் துறை 4.6% உம் தொழில்துறை 16.0% உம் சேவைகள் துறை 2.0% உம் வீழ்ச்சியடைந்துள்ளது.

முதலீட்டுக் குறிக்கோள்கள்


நாட்டின் இரண்டாவது பெரிய சமூகப் பாதுகாப்பு நிதியமான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது முதலீட்டுப் பாதுகாப்பு, இலாபம் மற்றும் பணப்புழக்கம் ஆகிய மூன்று அம்சக் கொள்கைகளின் கீழ் செயல்படுகின்றது. நிதியமானது முதன்மையாக நிலையான வருமானப் பத்திரங்களில் முதலீடு செய்வதில் கவனம் செலுத்துகின்றது. இந்தக் கொள்கைகளுக்கு இணங்க அதிக அளவு நம்பகத்தன்மை கொண்ட பத்திரங்களிலேயே முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முதலீட்டுக் கொள்கையின் வழிகாட்டுதல்களின் பிரகாரம் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையானது நிலையான வருமானப் பத்திரங்களில் 94% க்கும் குறையாமலும், பங்கு முதலீடுகளில் 6மூ ஐ அதிகரிக்காமலும் சொத்து ஒதுக்கீட்டை எப்போதும் பராமரித்தல் வேண்டும். மீளாய்வுக்குரிய ஆண்டில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிலையான வருமானப் பத்திரங்களில் 443.30 பில்லியன் ரூபா முதலீடு செய்துள்ளது. இது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது மொத்த முதலீட்டில் 97.46% ஆகும். அந்தத் தொகை 12.26% அதிகரிப்பாகும். அத்தோடு, பங்கு முதலீட்டில் சபை முதலீடு செய்த 11.53 பில்லியன் ரூபா அதன் மொத்த முதலீட்டில் 2.53% ஆகும். மேலும் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது 12.27% அதிகரிப்பாகும். மீளாய்வுக்குரிய ஆண்டில் சபை 430.78 பில்லியன் ரூபா அரசாங்கப் பத்திரங்களில் முதலீடு செய்துள்ளது. இது 2021 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட 352.54 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 22.19% வளர்ச்சியாகும்.


அரசாங்க கடன் பத்திரங்களின் முதலீகள்



2022.12.31 திகதிக்க முதலீடுகள் பிரிந்து செல்லல்



2022.12.31 ஆம் திகதிக்கு முதலீட்டின் அமைப்பு




நிலையான சொத்துக்கள் முதலீடு

நிலையான வருமான ஆதாரங்களில் நிதியின் முதலீடு 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த நிதியில் 97.46% க்கு சமனாகும். நிலையான வருமான சந்தையில் வட்டி விகிதங்கள் 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் இருந்து இலங்கை மத்திய வங்கி கொள்கை வட்டி விகிதங்களை உயர்த்தியதன் மூலம் மேல்நோக்கிய போக்கைப் பின்பற்றியது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் மொத்த வருமானத்தை அதிகரிக்கும் மற்றும் நீண்ட காலத்திற்கு அதன் அந்நியச் செலாவணியைப் பேணுவதை நோக்கமாகக் கொண்டு, பல்வேறு தவணைக்காலங்களின் கீழ் நிதியை திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைமுறிகளில் முதலீடு செய்ய முடிந்தது. இலங்கை மத்திய வங்கிக்கு புதிய ஆளுநரை நியமித்ததன் மூலம் அதன் நாணயச் சபை கொள்கை வட்டி விகிதங்களை உயர்த்த தீர்மானித்தது. அதற்கிணங்க, நிலையான வைப்பு வீதம் மற்றும் நிலையான கடன் வீதம் 700 அடிப்படை புள்ளிகளால் அதிகரித்து நிலையான வைப்பு வீதம் 13.50% ஆகவும் நிலையான கடன் விகிதம் 4.50% ஆகவும் உயர்த்தப்பட்டது. பின்னர், மற்றொரு சுற்றில் கொள்கை வட்டி விகிதங்களை 100 அடிப்படை புள்ளிகள் மற்றும் நிலையான வைப்பு விகிதம் 14.50% ஆகவும் நிலையான கடன் விகிதம் 15.50% ஆகவும் உயர்த்தப்பட்டது. சராசரியாக பாரம் வைக்கப்பட்ட முதன்மை கடன் விகிதத்தில் இந்த நிலையான அதிகரிப்பின் விளைவுளை 2022 ஆம் ஆண்டில் கண்டுகொள்ள முடியுமாகியது.

முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு


அதே நேரத்தில், அரசாங்கப் பத்திரங்கள் மீதான வருமான வீதம் வருடத்தில் மேல்நோக்கிய போக்கைக் காட்டியது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அதிக வருமானம் ஈட்டும் நிலை காரணமாக இந்த முதலீட்டின் உண்மையான வருமானத்தை எதிர்வரும் ஆண்டுகளில் கண்டுகொள்ள முடியும். ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அதன் நிலையான வருமானத்தை 2021 ஆம் ஆண்டில் 34.07 பில்லியன் ரூபாவிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 46.29 பில்லியன் ரூபாவாக உயர்த்த முடிந்தது. இது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 35.87மூ குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும்.



பங்கு முதலீடு

2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், கொழும்பு பங்குச் சந்தையானது அதன் அதிகபட்ச செயல்திறனைப் பதிவுசெய்தது. இதில் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் மற்றும் ஸ்டாண்டர்ட் அண்ட் புவர்ஸ் ளுடு 20 சுட்டெண் முறையே 13,462.39 மற்றும் 4,627.03 என்ற நிலைகளை எட்டியது. இதுவே கொழும்பு பங்குச் சந்தையின் வரலாற்றில் இதுவரை பதிவு செய்யப்பட்ட உயர் மட்டமாகும். 2022 ஆம் ஆண்டின் 1 ஆவது காலாண்டில் சந்தை செயல்திறனை இந்த நிலைக்கு கொண்டு வருவதில் உள்நாட்டு முதலீட்டாளர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர். முதல் காலாண்டின் பின்னர், இலங்கையானது கடுமையான சமூக அமைதியின்மையுடன் பொருளாதார மற்றும் அரசியல் நிச்சயமற்ற ஒரு சவாலான சூழ்நிலையை எதிர்கொண்டது. இந்நிலையில் கொழும்பு பங்குச் சந்தையின் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டதுடன், முதலீட்டாளர்களின் அவநம்பிக்கையான மனப்பான்மை காரணமாக இரண்டு சுட்டிகளும் வீழ்ச்சிப் போக்கைப் பின்பற்றின. பொதுவாக, கொழும்பு பங்குச் சந்தையின் செயல்திறன் ஆண்டு முழுவதும் அடிக்கடி சந்தையின் நிலையற்ற ஏற்ற இறக்கத்தை பிரதிபலித்தது.


ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை 2022 ஆம் ஆண்டின் இறுதியில் அதன் மொத்த நிதியில் 2.53% பங்கு முதலீட்டை பராமரிக்க முடிந்தது. கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட பெரும்பாலான நிறுவனங்கள் விநியோகச் சங்கிலித் தடைகள் மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு போன்ற சிரமங்களுக்கு மத்தியிலும் சிறப்பாகச் செயற்பட்டன. 2022 ஆம் ஆண்டில் பல நிறுவனங்களுக்கு தமது பங்கிலாபத் தொகையை அறிவிக்க முடியுமாகியது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை 2022 ஆம் நிதியாண்டில் அதன் பங்கு முதலீடுகள் மூலம் 835.4 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்ட முடிந்தது. பங்குச் சந்தையில் நிலவும் அதிக ஏற்ற இறக்கம் மற்றும் நிச்சயமற்ற தன்மை காரணமாக அதிகரித்து வரும் உயர் வட்டி விகிதத்தின் கீழ், பல்வேறுபட்ட காலங்களின் நிலையான வருமானப் பத்திரங்களில் முதலீடு செய்வதற்கான மேலதிக நிதிகளை ஒதுக்கீடு செய்வதற்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதற்கு ஊழியர் நம்பிக்கைப் பொப்பு நிதியச் சபை நடவடிக்கை எடுத்தது. அதன் மூலம் ஊழியர் நம்பிக்கைப் பொப்பு நிதியச் சபை அதன் ஒட்டுமொத்த முதலீட்டு வருமானத்தில் குறிப



முதலீட்டின் அமைப்பு

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் மொத்த முதலீட்டு அமைப்பு 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 454 பில்லியன் ரூபாவாக உயர்ந்தது. இது 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 409 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 11.00% அதிகரித்துள்ளது.

ஒரு சவாலான பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலையை அனுபவிக்கும் போது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அதிக வருமானத்தை அடையும் நோக்கத்துடன் அதிக வருமானம் தரும் முதலீட்டு வகைகளில் தனது நிதி முதலீட்டை மையப்படுத்தியது. வெவ்வேறு காலங்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட அமைப்பு வகைகளில் பரவியிருக்கும் விகிதாச்சாரத்தில் மாறுபட்ட முதலீட்டு கலவையுடன், எதிர்வரும் ஆண்டுகளில் ஒரு நிலையான பட்டியலிடப்பட்ட முதலீட்டு நிலையை பராமரிப்பதே ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் முயற்சியாகும்.



எதிர்கால நோக்கு

2023 ஆம் ஆண்டில் இலங்கைப் பொருளாதாரம் 4.2% சுருங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையின் நிலையான வருமான சந்தையில் சர்வதேச நாணய நிதியத்தால் வழங்கப்படும் நிதிக் கடன் வசதியில் அவர்கள் எதிர்பார்க்கும் தேவைகளுக்கு ஏற்றவாறு ஒரு சவாலான நிலைமை இருக்குமென கணிப்பீடு செய்ய முடியும். எதிர்வரும் காலங்களில் குறைந்த வட்டி முறையை பேணுவதற்கான ஏற்பாடுகளை இலங்கை நாணய அதிகார சபை மேற்கொள்ளும். இந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப, நிலையான வருமானப் பத்திரச் சந்தையில் குறைந்த இலாபம் தரும் வட்டி விகிதங்களைப் பேணுவதற்காக கொள்கை வட்டி விகிதங்களைக் குறைக்க நாணய சபை தீர்மானிக்கும். அரசாங்க கடன் மறுசீரமைப்பு திட்டமும் நடைப்பெற்று வருகின்றது. இந்தச் சூழ்நிலையில், அரசாங்கப் பிணைப் பத்திரங்கள் மற்றும் நிதி நிறுவனங்களின் நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்படும் நிதிகள் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். இலங்கைப் பொருளாதாரம் சுருங்கியுள்ள நிலையில் வர்த்தக சமூகத்திற்கு சாதகமான சூழலை எதிர்பார்க்க முடியாது. அத்தோடு, கடுமையான நிதிக் கொள்கை சீர்திருத்தங்கள் கூட்டாண்மைத் துறையின் செயல்திறனைப் பாதிக்கும். இதன் விளைவாக, உறுப்பினர் பங்களிப்புகளிலிருந்து உருவாக்கப்படும் பணப்புழக்கங்கள் குறையும் மற்றும் உறுப்பினர்களின் பணத்தைத் திரும்பப்பெறுதல் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. இது எதிரர்வரும் ஆண்டுகளில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முதலீடுகளின் வளர்ச்சியை மோசமாகப் பாதிக்கும்.

முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

பங்களிப்புத் தொகை சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள்

பங்களிப்புத் தொகை சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள் பிரிவு, தொழில் வழங்குநர்களின் பங்களிப்புகளை சரியான நேரத்தில் சேகரித்தல், தாமதமான பங்களிப்புகள் மற்றும் அறவீடுகள் மீது மேலதிகக் கட்டணம் அறவிடுதல் உள்ளிட்ட இணக்க செயல்பாடுகளுக்கு பொறுப்பாகும். சுயதொழிலாளர்களிடத்திலும் தொழில் வழங்குநர்களிடத்திலும் விழிப்புணர்வையும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அங்கத்துவத்தை ஊக்குவிப்பதற்கும் இந்தப் பிரிவு பொறுப்பாகும். பின்வரும் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்ளும் பொருட்டு பிராந்திய கிளைகள் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வலையமைப்புடன் இப்பிரிவு இணைந்து செயல்படுகிறது:

	2021 டிசம்பர் 31	2022 ஆம ஆண்டில் புதிய	2022 ஆம் ஆண்டில் நீங்கிய	2022 டிசம்பர் 31	%
தொழில் வழங்குநர்கள்					
முனைப்பான தொழில் வழங்குநர்கள்	69,094	2,471	7,539	64,026	(7%)
ஊ.ந.பொ.நி. அங்கத்தவர்கள்					
ஊ.ந.பொ.நி. அங்கத்தவர்கள் பங்களிப்புத் தொகை செலுத்துகின்ற தொழில் வழங்குநர்கள்)	2,430,091	679,313	663,795	2,445,609	0.63%
அங்கத்தவர்கள் சுயதொழிலில் ஈடுபட்டுள்ள	41,517	474	878	41,113	(0.97%)
குடிப்பெயர் ஊழியர் அங்கத்தவர்கள	228	16	3	241	5.7%

• இணக்கம் தெரிவிக்கும் தொழில் வழங்குநர்கள்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையானது இலங்கையின் முழு வேலைவாய்ப்பிலுள்ள மக்களையும் உள்ளடக்கும் தெளிவான மூலோபாயத்துடன் செயல்படுகின்றது. மத்திய வங்கி மற்றும் தொழில் திணைக்களத்தின் புள்ளிவிபரங்களின் பிரகாரம் வேலையில் உள்ளவர்களின் எண்ணிக்கைக்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு தொழில் வழங்குநர்கள் பங்களிப்புச் செலுத்த வேண்டிய நபர்களின் எண்ணிக்கைக்கும் இடையே தெளிவான வேறுபாடு காணப்படுகின்றது. அனைத்து தொழில் வழங்குநர்களையும் பதிவு செய்வதன் மூலம் மட்டுமே இந்த இடைவெளியைக் குறைக்க முடியும். 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிரந்தரப் பணியாளர்கள் மட்டுமின்றி, தற்காலிகப் பணியாளர்கள், ஒப்பந்தப் பணியாளர்கள், துண்டு விகிதப் பணியாளர்கள், தினக்கூலிப் பணியாளர்கள், ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோருக்கும் தொழில் வழங்குநர்கள் அவர்களது அடிப்படைச் சம்பளத்தில் 3 சதவீதம் பங்களிப்புத் செய்தல் வேண்டும். அது உரிய அமைப்பு முறையில் சேர்க்கப்படல் வேண்டும்.

• வழங்குநர்களுக்கிடையிலான இணக்க வீதம்

12 மாத காலப்பகுதியில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அந்தந்த தொழில் வழங்குநர்களால் தொடர்ந்து பங்களிப்பு செய்த ஊழியர்களுக்கு மட்டுமே அங்கத்துவ நலன்கள் வழங்கப்படுகின்றன. எனவே, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பை தொடர்ந்து வழங்குவதை உறுதி செய்வதில் எமது பங்களிப்பு அத்தகைய அடையாளம் காணும் பணிக்கு அப்பாற்பட்டது.

• கிளை அறவீட்டு செயற்திறன்

தொற்றுநோய்க்கு முன்னர், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய நிதிகள் காலாவதியான, தவறிய அல்லது பங்களிப்புகளைச் செலுத்தத் தவறிய தொழில் வழங்குநர்களிடமிருந்து சபையினால் மீட்டெடுக்கும் கொடுப்பனவுகளின் நிலைகளுக்கு ஏற்ப இது அமையப்பெற்றுள்ளது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, தகுதியான தொழில் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கும் ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட தொழில் வழங்குநர்களின் இணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும் அதன் கிளைகளின் வலையமைப்பின் மூலம் 40,000 முதல் 45,000 வருகைகளை மேற்கொண்டுள்ளது. சராசரியாக, இவற்றில் சுமார் 70 சதவிகிதம் பங்களிப்புத் தொகையை புறக்கணித்த தொழில் வழங்குநர்களுக்கான வருகைகள் ஆகும். ஒவ்வொரு ஆண்டும் 3,000 புதிய தொழில் வழங்குநர்கள் பதிவு செய்யப்படுகின்றனர்.
2020 மற்றும் 2021 இல் கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் 2022 இல் பொருளாதார வீழ்ச்சி ஆகியவை அமுலாக்கல் நடவடிக்கைகளை கடுமையாக பாதித்துள்ளன.

இதன் விளைவாக, கடந்த சில ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், கள ஆய்வுகளை மேற்கொள்வதில் உள்ள சிரமங்கள் காரணமாக, இயல்புநிலையைக் கண்டறிவதில் சரிவு ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், வழக்கமான நடைமுறைகளைப் பின்பற்றி மின்னஞ்சல்கள், தொலைபேசி அழைப்புகள் மற்றும் கட்டண கட்டளைகளை அனுப்புதல் ஆகியவற்றின் மூலம் காலதாமதமான தொழில் வழங்குநர்களின் பங்களிப்புகளை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, எரிபொருள் தட்டுப்பாடு போன்ற சிரமங்களுக்கு மத்தியில் தங்கள் தனிப்பட்ட அலுவலக வருகைகள் மற்றும் பயணங்களின் தேவையை நீக்குவதற்கு இணையவழி பொறிமுறைக்கு மாறுமாறு வேண்டிக் கொண்டது. இதனால் 65மூ அங்கத்தவர்களில் பெரும் பகுதியினர் இணைய வழிமுறைக்கு மாற்றிக்கொள்ள சாத்தியமாகியுள்ளது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் கிளவுட் அடிப்படையிலான மூடிய கட்டண முறையை அணுக விரும்பாத வாடிக்கையாளருக்கு சபை நேரடிப் பற்று வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. இலங்கையில் உள்ள எந்தவொரு வங்கி வலையமைப்பு ஊடாகவும் இந்த முறைமையின் ஊடாக பணம் செலுத்த முடியும். மேலும் கோவிட் தொற்றுநோய் காரணமாக தாமதம் ஏற்படும் போது பங்களிப்புகளை செலுத்துவதற்கு சலுகைக் காலமும் வழங்கப்பட்டது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அதன் அங்கத்தவர்களுக்கு நிதிப் பாதுகாப்பு வலையமைப்பை வழங்குவதனால் தற்போதைய சூழலில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் சமூகப் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது.

54	டோக்கியோ சிமென்ட PLC	230,758	210,892	116,966
55	வெலிபல் பவர்	83,752	83,519	61,035
56	விதுலங்கா PLC	701	701	537
57	விண்டோர்ஸ PLC	131,660	127,115	104,067
	மொத்தம்	**12,886,657**	**10,543,284**	**8,440,150**

நீக்கப்பட்ட பங்குகள்

1	ஆதன அபிவிருத்தி	5	45	-

ஆதன அபிவிருத்தி மீல்சி 2022 ஒக்டோபர் 27 ஆம் திகதி முதல் நீக்கப்பட்டுள்ளது.

பங்கிலாப முதலீட்டுக் கூற்று

2022.12.31 ஆம் திகதிக்கு துணை நிறுவனங்களில் முதலீடு

	கம்பனிப் பெயர்	செலவு (ரூ.'000)
	இலங்கை சோல்ட்ட லிமிடட்	470,961
	மொத்தம்	**470,961**

வெளியிடப்பட்ட பங்கு முதலீடுகள் - "இலாபம் அல்லது நட்டம" என மீள் வகைப்படுத்தப்பட்டவை 2022.12.31 ஆம் திகதிக்கு

கம்பனிப் பெயர்	உண்மைச் செலவு (ரூ.'000)	சாதாரணப் பெறுமதி (ரூ.'000)	சந்தைப் பெறுமதி 2022.12.31 ஆம் திகதிக்கு (ரூ.'000)
1 எக்சஸ் இன்ஜினியரிங்	51,441	53,257	17,905
2 ACL கேபல்ஸ் ீடுஊ	32,969	32,969	24,692
3 ஊழஅ. வங்கி	1,440,530	892,811	570,486
ஊழஅ. வங்கி (X)	159,012	108,906	62,379
4 டயலொக் அக்சியாட்டா	225,457	216,694	167,445
5 டிப்ட் புரொடக்ட்ஸ்	219,258	198,011	114,350
6 HNB - வங்கி	523,420	396,684	234,369
HNB - வங்கி (X)	68,870	61,718	35,384
7 ஹைகார்ப் ீடுஊ	10,145	10,145	9,641
8 ஹேலீஸ் பெப்ரிக்ஸ்	40,766	41,127	26,412
9 JKH - கம்பனி	177,625	194,349	175,302
10 லங்கா IOC	38,612	77,415	214,397
11 லங்கா டைல்ஸ்	121,425	121,425	60,878
12 லங்கா வோல்டைல்ஸ்	256,940	288,289	157,548
13 லாப் பவர்	3,196	1,672	1,433
14 பீபல்ஸ் லீசிங்	82,549	68,960	33,975
15 பீபல்ஸ் இன்சுவரன்ஸ்	57,882	59,773	34,853
16 PGP கிளாஸ் கம்பனி	40,073	46,081	39,747
17 ரிச்சர்ட் பீரிஸ் கம்பனி	64,590	92,619	91,490
18 ரிசுஸ் எனர்ஜீ PLC	29,828	29,828	13,849
19 ரோயல் செரமிக்	254,428	271,957	132,197
20 சம்பத் வங்கி	1,037,398	801,284	528,049
21 சேலான் வங்கி	84,110	51,987	36,020
சேலான் வங்கி (X)	82,804	61,254	29,433
22 சியெற்றா கேபல்ஸ் PLC	34,477	34,477	21,567
23 சிங்கர் பைனேன்ஸ்	48,443	39,752	23,170
24 சன்சைன் ஹோல்டிங்ஸ்	33,185	33,185	30,198
மொத்தம்	**5,219,433**	**4,286,627**	**2,887,168**

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

2022.12.31 ஆம் திகதிக்கு அலகு நிதியங்களில் செய்யப்பட்ட முதலீடுகள்

	வகை	உண்மைச் செலவு (ரூ.'000)	சாதாரணப் பெறுமதி (ரூ.'000)	சந்தைப் பெறுமதி 2022.12.31 ஆம் திகதிக்கு
1	கொம் டிரஸ்ட் பங்கிலாப நிதியம்	14,261	39,806	34,770
2	தேசிய பங்கிலாப நிதியம்	41,681	167,161	136,736
3	நாமல் வளர்ச்சி நிதியம்	2,250	34,705	30,970
	மொத்தம்	**58,192**	**241,671**	**202,475**

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் மற்றும் முக்கிய கணக்கியற் கொள்கைகள்

1. தாபனத் தகவல்கள்

1.1. சட்ட மற்றும் இட அமைவு

1980 ஆம் ஆண்டின் 46 ஆவது இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் 1981 ஆம் ஆண்டு மார்ச் 01 திகதி நிறுவப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை (நுவுகு) ஓர் அரசாங்கக் கூட்டுத்தாபனமாகும். ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது.

இலங்கை சோல்ட் லிமிடட் எனப்படும் வரையறுக்கப்பட்ட உப்புக் கம்பனி இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு வரையறுக்கப்பட்ட பொது கம்பனியாகும். கம்பனியின் பிரதான வர்த்தகத் தளம் மற்றும் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் ஹம்பாந்தோட்டை, மகாலேவாயாவில் அமைந்துள்ளது.

1.2. ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகள்

2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் ஒருங்கிணைந்த நிதி நிலமை அறிக்கைகள் சபை (தாய் நிறுவனம்) மற்றும் அதன் முழு உரிமையுடைய துணை நிறுவனத்தை உள்ளடக்கியது (ஒன்றாக "குழு" என குறிப்பிடப்படுகிறது). 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் சபையின் துணை நிறுவனமாக லங்கா சோல்ட் லிமிடெட் உள்ளது. அவ்வாறே, ETFB குழுமத்தின் இறுதித் தாய் நிறுவனமாகவும் உள்ளது.

சபையின் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் நிதி அறிக்கைகள் டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் பொதுவான நிதியாண்டைக் கொண்டது. "சபை" மற்றும் "குழுமம்" ஆகியவற்றின் நிதி அறிக்கைகள் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த 12 மாத காலத்திற்கு தயாரிக்கப்படுகின்றன.

1.3. பிரதான செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

இவ்வாண்டினுள், இந்நிதிக் கூற்றுக்களுக்குள் இருந்த வண்ணம் செயற்படுத்தப்பட்ட கம்பனியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு

கம்பனியின் பெயர்	வியாபாரத்தின் தன்மை
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை	அரசாங்க ஓய்வூதியத் திட்டத்திற்கு உரித்தாகாத எல்லா அரசாங்கத் துறை ஊழியர்களும் எல்லா தனியார் துறை ஊழியர்களும் இந்நிதியத்தின் உறுப்பினர்களாவதுடன், அவர்களின் தொழில்தருநர்கள் அவ்வூழியர்கின் மொத்த வருவாயில் 3மூ இனை மாதாந்தம் நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். மேலும் இந்த நிதியமானது புலம்பெயர் மற்றும் சுய தொழில் துறையினரையும் உள்ளடக்குகின்றது. இது எதிர்காலத்தில் மேலும் விரிவுபடுத்தப்படவுள்ளது. நிதியத்தினை நிர்வகித்தல் தவிர, ETF சபை, அதன் உறுப்பினர்களுக்கு அவர்களது பணிபுரியும் காலப்பகுதியில் சமூக மற்றும் நலன்புரி நன்மைகள் பலவற்றை நிறைவேற்றுவதில் ஈடுபடுகின்றது.
இலங்கை உப்புக் கம்பனி	கம்பனியின் பிரதான செயற்பாடுகளாக உப்பு உற்பத்தியும் விநியோகித்தலும் காணப்படுகின்றது.

1.4. நிதி அறிக்கைகளுக்கான பொறுப்பு

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் இலங்கை கணக்கியல் தரநிலைகள் (LKAS/SLFRS) என்பவற்றுக்கு இணங்க, குழு மற்றும் சபையின் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதும் சமர்ப்பிப்பதும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் பணிப்பாளர் சபையினது பொறுப்பாகும்.

1.5. வெளியிடுவதற்கான அதிகாரம் பெறும் திகதி

2022 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ETF சபையின் நிதிக் கூற்றுக்களை 2023 பெப்ரவரி 27 ஆந் திகதியன்று பணிப்பாளர் சபையின் தீர்மானம் பிரகாரம் வெளியிடுவதற்கான அதிகாரம் வழங்க ப்பட்டுள்ளது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் மற்றும் முக்கிய கணக்கியற் கொள்கைகள்

2. முக்கியமான கணக்கியற் கொள்கைகளின் சுருக்கம்

2.1. பொதுவான கொள்கைகள்

2.1.1. நிதி நிலைமைக் கூற்றுக்களை முன்வைத்தல்

நிதி நிலைமைக் கூற்றில் முன்வைக்கப்பட்ட நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தன்மையைக் கொண்டு வகைப்படுத்தப்பட்டு மற்றும் அவை தொடர்பில் திரவத்தன்மையைப் பிரதிபலிக்கும் பொருட்டு பட்டியலிடப்படுகின்றன. நிதிக் கூற்றுக்களைப் பாதிக்கும் பணவீக்கக் காரணிகளுக்கு செம்மையாக்கல்கள் ஏற்படுத்தப்படவில்லை. 12 மாதங்களுக்குள் மற்றும் அறிக்கையிடும் திகதியிலிருந்து 12 மாதங்களுக்குப் பிறகு மீட்சி அல்லது தீர்த்தல் மீதான பகுப்பாய்வொன்று இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது. (2021 ஆம் ஆண்டின் ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ஒப்பீட்டுத் தகவல்கள் நிலையான சொத்துக்களின் கொள்கை மாற்றத்தின் விளைவை பிரதிபலிக்கும் வகையில் மீண்டும் தரப்பட்டுள்ளன)

2.1.2. இணக்கக் கூற்று

2022 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மற்றும் அப்போது முடிவுற்ற ஆண்டிற்கான, நிறுவனத்தின் கணக்கியற் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் ("நிதிக் கூற்றுக்கள்") உள்ளடங்கலாக நிதி நிலைமைக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (SLFRS/LKAS) இணங்குகின்றன.

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (SME களுக்கான SLFRS) வழங்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் LSL இன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் என்பன 2007 இன் கம்பனிகள் சட்ட இல. 07 இன் தேவைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றன.

2.1.3. முக்கியமான கணக்குகளின் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

சபை எதிர்காலத்திற்காக குறிப்பிட்ட சில மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை மேற்கொள்கின்றது. எதிர்காலத்திற்கான எதிர்பார்ப்புகள் உட்பட வரலாற்று ரீதியான அனுபவம் மற்றும் ஏனைய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புக்கள் தொடர்ச்சியாக கணிக்கப்படுகின்றன.

SME களுக்கான SLFRS உடன் இணங்குமாறு இலங்கை உப்புக் கம்பனி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு சில தீர்க்கமான கணக்கீட்டு மதிப்பீடுகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. நிதிக் கூற்றுக்களுக்கு முக்கியமான ஊகங்கள் மற்றும் மதிப்பீடுகள் கொண்ட விடயங்கள் அல்லது உயர்ந்த அளவிலான தீர்ப்பு அல்லது சிக்கல் கொண்ட விடயங்கள் என்பன பின்வருமாறு எடுத்துக்காட்டப்படுகின்றன.

தீர்ப்புக்கள்

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்:

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள், இழப்புக்கள் பயன்படுத்தக்கூடியதற்கு மாறாக வரிக்குட்பட்ட இலாபம் கிடைப்பதில் சாத்தியப்பாடு உள்ளது என்ற அளவிற்கு எல்லா பயன்படுத்தப்படாத வரி இழப்புக்களும் இனங்காணப்படும். முக்கியமான முகாமைத்துவத் தீர்ப்பு, எதிர்கால வரித் திட்டமிடல் உபாயங்களுடன் எதிர்கால வரிக்குட்பட்ட இலாபங்களின் வாய்ப்பு மற்றும் மட்டத்தின் அடிப்படையில் இனங்காண முடியுமான பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் அளவினைத் தீர்மானிப்பதற்கு தேவைப்படுகின்றது.

2.1.4. அளவிடுதலின் அடிப்படை

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சிலவற்றைத் தவிர நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவின் அடிப்படையாகக் கொண்டு நியாயமான விலையில் அளவிடப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

டுளுடு இன் நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.1.5. தொழிற்படு மற்றும் முன்வைத்தல் நாணயம்

கம்பனியின் புழக்கத்திலுள்ள நாணயமான இலங்கை ரூபாவில் இந்நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. சபையின் ஆரம்ப பொருளாதார சூழலில் எல்லா நிதிசார் தகவல்களும் இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்டுள்ளன.

2.1.6. மட்டந்தட்டல்

இலங்கை கணக்கியல் தரநிலை - LKAS 1 "நிதி அறிக்கைகளை சமர்ப்பித்தல்" (LKAS 1) இல் அனுமதிக்கப்பட்டுள்ளதைத் தவிர, நிதிநிலமை அறிக்கைகளில் உள்ள தொகைகள் கிட்டிய ஆயிரம் ரூபாவுக்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

2.1.7. குறைநிரப்பல்

கணக்கியல் தரநிலை அல்லது பொருள்கோடல் மூலம் (IFRS விளக்கக் குழு மற்றும் தரநிலை விளக்கக் குழுவினால் வழங்கப்பட்ட) தேவைப்படுத்தப்படும் அல்லது அனுமதிக்கப்படாத போது வருமான அறிக்கையில் வருமானம் மற்றும் செலவுகள் ஈடுசெய்யப்படமாட்டாது. நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகள் ஈடுசெய்யப்பட்டு, SOFP இல் நிகரத் தொகை பதிவு செய்யப்படும். அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுசெய்ய சட்டப்பூர்வமாக அமுலாக்கக்கூடிய உரிமை இருக்கும் போது மட்டுமே நிகர அடிப்படையில் அல்லது சொத்துக்களை உணர்ந்து ஒரே நேரத்தில் கடன்களைத் தீர்க்கும் எண்ணம் காணப்படும்.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் மற்றும் முக்கிய கணக்கியற் கொள்கைகள்

2.1.8. பொருள் மற்றும் திரட்டல்

ஒத்த உருப்படிகளின் ஒவ்வொரு பொருள் வகுப்பும் நிதி அறிக்கைகளில் தனித்தனியாக வழங்கப்படுகின்றன. 2016 ஜனவரி 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்த LKAS 1 மற்றும் LKAS 1 இல் "வெளிப்படுத்தல் முன்முயற்சியில்" திருத்தங்களில் அனுமதித்துள்ளபடி அவை முக்கியமற்றவை அல்லாத போது, வேறுபட்ட தன்மை அல்லது செயல்பாட்டின் உருப்படிகள் தனித்தனியாக வழங்கப்படுகின்றன.

2.1.9. தொடர்ச்சியான வியாபார நிலமை

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் முகாமை தொடர்ச்சியான நிலைப்பாட்டினைத் தொடர்வதற்கான சபையின் இயலுமையை மதிப்பீடு செய்துள்ளதுடன், எதிர்வரும் எதிர்காலத்திற்கு வர்த்தகத்தில தொடர்ந்தும் ஈடுபடுவதற்கான வளங்களை சபை கொண்டுள்ளது என்பதில் திருப்தியடைந்துள்ளது. மேலும், தொடர்ச்சியான நிலைப்பாட்டினைத் தொடருவதற்கு சபையின் இயலுமை மீது குறிப்பிடத்தக்க சந்தேகத்தினை ஏற்படுத்தக் கூடிய ஏதேனும் நிச்சயமற்ற தன்மைகள் குறித்து முகாமை அறியவில்லை. அதனால், நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்தும் தொடர்ச்சியான நிலைப்பாட்டின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

இலங்கை உப்புக் கம்பனியின் பணிப்பாளர்கள் தொடர்ச்சியான நிலைப்பாட்டினைத் தொடர்வதற்கான சபையின் இயலுமையை மதிப்பீடு செய்துள்ளதுடன், அவர்கள் வர்த்தகத்தை நிறுத்தவோ அல்லது கலைப்பதற்கோ எண்ணவில்லை.

2.1.10. ஒப்பீட்டுத் தகவல

கணக்கியற் கொள்கைகள் கம்பனியால் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் கடந்த ஆண்டுடன் இசைவானவையாகவும் உள்ளன. முன்னைய ஆண்டின் நிதிநிலமை அறிக்கைகளின் சமர்ப்பிப்பு மற்றும் வகைப்பாடு திருத்தப்பட்டது. சிறந்த சமர்ப்பித்தலுக்கு நடப்பு ஆண்டுடன் ஒப்பிடுவது பொருத்தமானது.

2.2. ஒருங்கிணைவின் அடிப்படை

(அ)) ஒருங்கிணைவு

ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2022 டிசம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு கம்பனியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் நிதிக் கூற்றுக்களை உள்ளடக்குகின்றன.

துணை நிறுவனமானது, குழுமம் கட்டுப்பாட்டினைப் பெற்றுக்கொண்ட நாளாகிய, கையகப்படுத்திய நாள் முதல் ஒருங்கிணைக்கபட்டுள்ளதுடன் அத்தகைய கட்டுப்பாடு முடிவடையும் நாள் வரை தொடர்ந்தும் ஒருங்கிணைக்கபட்டிருக்கும். துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் தாய் நிறுவனத்தைப் போன்றே அறிக்கையிடும் அதே காலப்பகுதியில் தயாரிக்கப்படும்.

எனினும், குழு கணக்கியற் கொள்கைகளுள் முன்னிலைப்படுத்தப்பட்ட இரு நிறுவனங்களினதும் கணக்கியற் கொள்கைகள் வித்தியாசமானவை. அவை குழுமத்திற்குரிய கணக்கீட்டுக் கொள்கைகளில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

(ஆ)) துணை நிறுவனங்கள்

துணை நிறுவனங்களாவன, வாக்குரிமைகளின் அரைப்பகுதிக்கும் மேலாக பங்குரிமையினைப் பொதுவாகக் கொண்ட செயற்பாட்டு மற்றும் நிதிசார் கொள்கைகளை நிர்வகிப்பதற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆற்றலைக் கொண்ட குழுமத்தாலான நிறுவனங்களாகும். குழுமம் வேறோரு நிறுவனத்தைக் கட்டுப்படுத்துகின்றதா என மதிப்பிடும் போது நடைமுறைப்படுத்தக் கூடியதும் அல்லது மாற்றக்கூடியதுமான சாத்தியமான வாக்குரிமைகளின் நிலைப்பாடு மற்றும் விளைவு கருத்திற் கொள்ளப்படும். குழுமத்திற்கு கட்டுப்பாட்டினை மாற்றப்பட்ட நாள் முதல் துணை நிறுவனங்கள் முற்றாக ஒருங்கிணைக்கப்படும். கட்டுப்பாடு நிறுத்தப்பட்ட நாளிலிருந்து அவை ஒருங்கிப்பினை இழக்கும்.

கம்பனியிதும் மற்றும் அதன் துணை நிறுவனங்களினதும் எல்லா சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களிலும் மற்றும் ஒருங்கிணைப்பிலும உள்ளடங்கிய கம்பனியின் மற்றும் ஒருங்கிணைப்பில் உள்ளடங்கிய அதன் துணை நிறுவனங்களின் வருடத்திற்கான மொத்த இலாபங்கள் மற்றும் நட்டங்கள் முறையே விபரமான வருமானத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட கூற்றில் மற்றும் நிதி நிலைமைக் கூற்றிலும் காட்டப்பட்டுள்ளன.

(இ)) அறிக்கையிடும் திகதி

12 மாதங்களுடன் முடிவடையும் டிசம்பர் 31 ஆந் திகதியான பொதுவான அறிக்கையிடும் காலப்பகுதியில் துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும்.

2.3. இலாபம் மற்றும் நட்டத்தினை அளவிடுவதன் அடிப்படை

2.3.1. வருமானம்

வருமானம் இனம் காணப்படுவது அதன் மூலம் பொருளாதார நலன்கள் வியாபார நிறுவனத்திற்கு வந்துசேரும் என அனுமானிக்கப்படும் மற்றும் அந்த வருமானத்தை நம்பிக்கையுடன் கணக்கிட முடியுமாக உள்ள அளவுக்காகும். வருமானத்தை இனம் காண்பதற்கு முன்னர் பின்வரும் விசேட அடையாளம் காணும் நியதிகளை பூரணப்படுத்தல் வேண்டும்.

2.3.2. வட்டி மற்றும் ஒத்த வருமானமும் செலவும்

கடன் தீர்ப்பனவுச் செலவில் அளவிடப்படும் எல்லா நிதிச் சாதனங்களுக்காக நிதிச் சொத்துக்களையுடைய வட்டி விற்பனைக்கு உள்ளவையாகவும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் பெயர்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் மற்றும் முக்கிய கணக்கியற் கொள்கைகள்

குறிப்பிடப்பட்ட நிதிச் சாதனங்களாகவும் வகைப்படுத்தப்படுவதுடன், வட்டி வருமானம் அல்லது செலவு பயனுறுதிமிக்க வட்டி வீதத்தைப் (EIR) பயன்படுத்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. நிதிச்சொத்துக்கள் அல்லது நிதிப் பொறுப்புக்கள் மீதான தேறிய காவுகைத் தொகைக்கு பொருத்தமான விதத்தில், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவுகள் அல்லது கிடைப்பனவுகளை நிதிச் சொத்துக்களின் குறுகிய கால அல்லது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட் காலத்தினூடாக EIR துல்லியமாகக் தள்ளுபடி செய்கின்றது. நிதிச் சாதனங்களின் எல்லா ஒப்பந்த ரீதியான நிபந்தனைகளையும் (உதாரணமாக, முன்கொடுப்பனவு விருப்ப படிகள்) மதிப்பீட்டுக் கணக்கில் வைப்பதுடன், எதிர்கால பற்று நட்டங்கள் அல்லாமல், EIR இன் முக்கிய அங்கமாக உள்ளதும் சாதனங்களுக்கு நேரடியான காரணிகளாக இருக்கக்கூடியதுமான ஏதேனும் கட்டணங்களை அல்லது வருமானம் சார் செலவினங்களை உள்ளடக்குகின்றது. வட்டி வருமானம் கூப்பன் வருமானத்தை மற்றும் சாதனங்களின் தவனைப்பணம் அல்லது விலைக்கழிவின் கடன்கழிப்பு மீதான ஏதேனும் இலாபத்தையோ அல்லது நட்டத்தையோ உள்ளடக்குகின்றது.

நிதிச்சொத்தொன்றின் பெறுமதி அல்லது பெறுமதி இழப்பு நட்டம் காரணமாக குறைக்கப்பட்ட ஒத்த நிதிச் சொத்துக்களின் தொகுதி பதிவு செய்யப்பட்டதும், பெறுமதி இழப்பு நட்டத்தினை அளவிடும் நோக்கத்திற்காக எதிர்கால காசுப் பாய்ச்சலை தள்ளுபடி செய்வதற்கு பயன்படும் மூல வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி வட்டி வருமானம் தொடர்ந்தும் இனங்காணப்படும்.

அவ்வருடத்தின் டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதியத்தின் ஒவ்வொரு அங்கத்தவரினதும் தனிப்பட்ட கணக்கின் பற்றுக்கான தொகை மீதான, நிதியத்தின் பண முதலீட்டிலிருந்து வருமானத்தின் மூலம், அவ்வப்போது அமைச்சரின் மற்றும் நிதிசார் விடயங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒப்புதலோடு சபை நிர்ணயிக்கும் ஒவ்வொரு வருடமும் செலுத்தப்பட வேண்டிய, மூன்று சதவீதத்திற்கு குறையாத, சபை அவ்வாறான வீதத்தில் வட்டி செலுத்த வேண்டும் என்ற ETFB சட்டத்தின் 22 ஆவது பிரிவின் பிரகாரம் வட்டிச் செலவினம் இனங்காணப்படும்.

2.3.3. பங்கிலாப வருமானம் மற்றும் செலவினம்

பங்கிலாப இலாபமானது கொடுப்பனவைப் பெறுவதற்கான தாபனத்தின் உரிமை ஏற்றுக்கொள்ளப்படும் போது இனங்காணப்படுகின்றது. நிதியத்தின் பண முதலீட்டினால் தேறக்கூடிய இலாபங்களில் இருந்து சபை பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்த வேண்டும் என்ற ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் பங்கிலாபச் செலவு இனங்காணப்படும்.

2.3.4. ஏனைய வருமானங்கள்

ஊழியர்களின் சேவைக் காலத்துள் கடன் கழிப்பு செய்யப்பட்ட அலுவலர் கடன்களின் நியாயமான பெறுமதி அறவீடு மீதான வட்டி வருமானத்தை தவிர்ந்த கொடுப்பனவைப் பெறுவதற்கான தாபனத்தின் உரிமை ஏற்றுக்கொள்ளப்படும் போது ஏனைய வருமானங்கள் இனங்காணப்படுகின்றன.

(அ) [redacted]

பொருட்களின் விற்பனை மூலமான வருவாய் பொருட்கள் வழங்கப்படும் போது மற்றும் உரிமை கடந்து விட்ட போதும் இனங்காணப்படும். கிடைத்தவை அல்லது கிடைக்க வேண்டியவை, கழிவுகளின் தேறிய தொகை மற்றும் அரசாங்கத்தின் சார்பாக சேகரிக்ப்பட்ட விற்பனை தொடர்பிலான வரிகள் ஆகியவற்றின் நியாயமான பெறுமதியினைக் கருத்திற் கொண்டு வருவாய் அளக்கப்படும். வருவாய் இனங்காண்பதற்கு முன்னர் பின்வரும் திட்டவட்டமான இனங்காணல் பிரமாணங்கள் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

(ஆ) **பொருட்களின் விற்பனை**

பொருட்களின் விற்பனை மூலமான வருவாய் சாதாரணமாக பொருட்களை வழங்குகையில் கொள்வனவாளருக்கு பொருட்களின் உடைமையுரிமையின் குறிப்பிடத்தக்க இடர்கள் மற்றும் வெகுமதிகள் மாற்றப்படும் போது இனங்காணப்படும்.

(இ) [redacted]

வருவாய் சொத்து மீதான பயனுறுதிமிக்க வட்டியை கணிப்பிடும் நேர விகித அடிப்படையில் வருவாய் இனங்காணப்படும்.

(ஈ) **வட்டி**

[redacted]

2.4. வரிவிதிப்பு

2.4.1. தற்போதைய வரிகள

கடந்த ஆண்டுகளில் செலுத்த வேண்டிய வரிக்கு ஏதேனும் சரிப்படுத்தல்கள் மற்றும் அமுலாக்கப்பட்ட அல்லது அறிக்கையிடும் திகதியில் குறிப்பிடத் தக்க வகையில் அமுலாக்கப்பட்ட வட்டி வீதங்களைப் பயன்படுத்தி வருடத்திற்கான வசிக்குட்பட்ட வருமானம் அல்லது நட்டத்தின் மீதான எதிர்பார்க்கப்பட்ட வரி செலுத்த வேண்டியவை அல்லது கிடைக்க வேண்டியவையே தற்போதைய வரி ஆகும்.

கடன் கழிப்பு ஆதாயம் மற்றும் வருமான வரிச் செலவினம் குறித்து ஒரு நியாயமான நோக்கினை வழங்குவதற்கு கடன்கழிப்பு ஆதாயக் கணக்கிற்கு மீளச் சேர்ப்பதற்கு ஆண்டிற்காகன திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்கள் மீதான ஈட்டப்பட்ட வருமானத்திற்கு பொருந்தக்கூடிய நிறுத்தி வைப்பு வரியின் (WHT) விகிதாசாரத்தினை இனங்காண்பதற்கு சபை அதன் கணக்கியற் கொள்கைகளை மாற்றியது.

தற்போதைய செலுத்தவேண்டிய வரி வருடத்திற்கான வரிக்குட்பட்ட இலாபத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. வருமான வரிக்கான ஏற்பாடு உள்நாட்டு வருவாய் சட்டத்தின் ஏற்பாட்டின் பிரகாரம் கணக்கிடப்பட்ட மற்றும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட்டுள்ளவாறு வருமானம் மற்றும் செலவினக் கூறுகளின் அடிப்படையில் உள்ளது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் மற்றும் முக்கிய கணக்கியற் கொள்கைகள்

2.4.2. பிற்போடப்பட்ட விரிவிதிப்பு

ஐந்தொகைத் திகதியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படைகளுக்கு இடையிலான எல்லா தற்காலிக வித்தியாசங்கள் மற்றும் அறிக்கையிடும் காலத்திற்கான அவற்றின் காவுகைத் தொகைகள் மீது பொறுப்பு முறைமையினைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி வழங்கப்படுகின்றது. பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் எதிர்காலத்தில் வரிக்குட்பட்ட இலாபத்தினை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் எல்லா தற்காலிக வித்தியாசங்களுக்கும் இனங்காணப்படும். பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் எதிர்காலத்தில் வரிக்குட்பட்ட இலாபத்தினை மற்றும் ஏதேனும் பயன்படுத்தப்படா வரி இழப்புக்களை அல்லது பயன்படுத்தப்படா வரிக்கடன்களைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் எல்லா தற்காலிக வித்தியாசங்களுக்கும் இனங்காணப்பட்டு மீட்கப்படமாட்டாது என்பதை விட வாய்ப்பு உள்ள தற்போதைய அல்லது மதிப்பிடப்பட்ட எதிர்கால வரிக்குட்பட்ட இலாபம் மீதான உயர்ந்த தொகையில் பிற்போடப்பட்ட சொத்துக்கள் அளவிடப்படும்.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் தேறிய காவுகைத் தொகை ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் எதிர்கால வரிக்குட்பட்ட இலாபங்களின் தற்போதைய மதிப்பீட்டினைப் பிரதிபலிப்பதற்கு சரிப்படுத்தப்படும். சரிப்படுத்தல்கள் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும்.

அமுலாக்கப்பட்ட அல்லது அறிக்கையிடும் திகதியில் குறிப்பிடத் தக்க வகையில் அமுலாக்கப்பட்ட வரி வீதங்களின் அடிப்படையில் பிற்போடப்பட்ட வரிச் சொத்து தேறப்பட வேண்டும் அல்லது பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு தீர்க்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கும் காலங்களில் வரிக்குட்பட்ட இலாபத்திற்கு (வரி இழப்பு) பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வரி வீதங்களில் பிற்போடப்பட்ட வரி கணக்கிடப்படும்.

2.5. வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம்

கம்பனியின் புழக்கத்திலுள்ள நாணயமான இலங்கை ரூபாவில் நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பரிவர்த்தனை திகதியில் நடைமுறையிலுள்ள தொழிற்பாட்டு நாணய விகிதத்தில் ஆரம்பத்தில் வெளிநாட்டு நாணயங்களில் பரிவர்த்தனைகள் பதிவுசெய்யப்படும். ஐந்தொகைத் திகதியில் நடைமுறையில் உள்ள பரிமாற்றத்தின் தொழிற்பாட்டு நாணய விகிதத்தில் மீள்பரிமாற்றம் செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் நாணயச் சொத்துக்களும் பொறுப்புக்களும் நிர்ணயிக்கப்படும். எல்லா வித்தியாசங்களும் இலாபம் அல்லது நட்டத்திற்கு எடுக்கப்படும். வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்றுச் செலவின் பிரகாரம் அளவிடப்படும் நாணயமற்ற உருப்படிகள் ஆரம்ப கொடுக்கல் வாங்கல்களின் திகதியகளில் உள்ளவாறு பரிமாற்ற வீதங்களைப் பயன்படுத்தி பரிமாற்றம் செய்யப்படும். வெளிநாட்டு நாணயத்தில் நியாயமான பெறுமதியில் அளவிடப்படும் நாணயமற்ற உருப்படிகள் நியாயமான பெறுமதி தீர்மானிக்கப்பட்ட திகதியில் பரிமாற்ற வீதங்களைப் பயன்படுத்தி பரிமாற்றம் செய்யப்படும். னயவநள ழக வாந வையைடை வசயளெயஉவழைளெ. ழேமெ அழநெவயசல வைநஅள அநயளரசநன யவ கயசை எயடரந மை ய கழசநபைமெ உரசசநஉெல யசந வசயளெடயவநன ரளளபை வாந நஒஉாயபெந சயவநள யவ வாந னயவந றாநமெ வாந கயசை எயடரந றயள னநவநசஅநெனெ.

2.6. முதலீடுகள் மற்றும் ஏனைய நிதிச் சொத்துக்கள்

2.6.1. வகையீடு

சபையானது தனது நிதிச் சொத்துக்களை பின்வரும் அளவீட்டுத் தொகுதிக்குள் இருந்த வண்ணம் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் வகையீடு செய்கின்றது.

- சாதாரணப் பெறுமதியின் பின்னர் சமகாலத்தில் கணக்கிடப்பட வேண்டியுள்ள நிதிச் சொத்துக்கள் (வேறு விஸ்தீரண வருமானங்கள் ஊடாகவோ அல்லது இலாப நட்டத்தின் ஊடகவோ) மற்றும்
- கடன் கழிப்பு செலவின் மீது கணக்கிடப்படவுள்ள நிதிச் சொத்துக்கள். இந்த வகையீடு நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பாய்ச்சலின் ஒப்பந்தம் மற்றும் நிபந்தனைகளை முகாமை செய்வதற்கான நிறுவன ரீதியான வியாபார மாதிரியின் மீது தங்கியுள்ளது.

  சாதாரணப் பெறுமதியின் மீது கணக்கிடப்படும் சொத்துக்கள் தொடர்பில் நலன்கள் மற்றும் நட்டம் அடைதல் இலாபம் அல்லது நட்டத்தினுள் அல்லது வேறு விஸ்தீரண வருமானத்தினுள் அறிக்கையிடப்படும். விற்பனைக்காக தடுத்துவைக்கப்படாத பங்குரிமை செயலாற்றுகை கருவிகள் தொடர்பில் நோக்கும் போது, இது தங்கியிருப்பது வேறு விஸ்தீரண வருமானங்கள் ஊடாக சாதாரண பெறுமதியின் (FVOCI) மீது பங்குரிமை முதலீடுகளை கணக்கிடுவதற்காக ஆரம்ப இனம்காணும் சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்ய முடியாத தேர்வொன்று நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டதா என்ற விடயத்தின் அடிப்படையிலாகும்.

  அந்தச் சொத்தில் நிகழும் மாற்றங்களை முகாமை செய்யும் பொருட்டு தனது வியாபார மாதிரியை பயன்படுத்தும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் கடன் முதலீட்டு நிதியங்கள் மீள்வகையீடு செய்யப்படுகின்றன.

2.6.2. இனம்காணல் மற்றும் இனம்காணாப்படாமை

நிதிச் சொத்துக்களின் நிலையான கொள்வனவுகள் மற்றும் விற்பனை முறைகள் இனம்காணப்படுவது நிதியம் அந்தச் சொத்துக்களை கொள்வனவு செய்த அல்லது விற்பனை செய்த ஏற்புடைய வியாபார தினத்திற்காகும். நிதிச் சொத்துக்கள் இனம்காணப்படாமை அந்த நிதிச் சொத்துக்களின் நிதிப் பாய்ச்சலொன்றைப் பெற்றுக்கொள்ளும் உரிமை நிறைவடைந்துள்ள போது அல்லது கையளிக்கும் போது மற்றும் உரிமை பற்றிய அனைத்து ஆபத்துக்கள் மற்றும் கொடைகள் நிதியத்தினால் போதியளவு கையளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலாகும்.

2.6.3. கணக்கிடுதல்

ஆரம்ப இனங்காணலின் போது நிதியத்தினால் தனது நிதிச் சொத்தொன்றை இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரணப் பெறுமதியின் மீது அல்லாத தனது நிதிச் சொத்தொன்று தொடர்பில் கணக்கிடப்படுவது அந்த நிதிச் சொத்தை கையகப்படுத்திக்கொள்வதற்கு நேரடியாக பொறுப்பேற்க முடியுமான அங்கு கொடுக்கல் வாங்கல் செய்ய முடியுமான செலவினத்திற்கு மேலதிகமாக அதன் சாதாரண பெறுமதியின் மீதாகும்.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் மற்றும் முக்கிய கணக்கியற் கொள்கைகள்

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரண பெறுமதியின் மீது முன்கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துக்களின் கொடுக்கல் வாங்கல் செலவினங்கள் செலவு வைக்கப்படுவது இலாப அல்லது நட்டக் கணக்கிலாகும். நிதிச் சொத்துக்களின் காசுப் பாய்ச்சல், வெறுமனே முதலீடு செய்யப்பட்ட ஆரம்ப நிதியின் மற்றும் வட்டியின் கொடுப்பனவுகள் மாத்திரமா என தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில் இடைதொடர்புள்ள பெறப்பட்ட நிதிச் சொத்துக்கள் அவற்றின் சராசரியாக கணிக்கப்படும்.

2.6.3.1. கடன் செயலாற்றுகைக் கருவி

கடன் செயலாற்றுகைக் கருவி தொடர்பில் பிற்காலத்தில் செய்யப்படும் கணக்கிடல் தங்கியிருப்பது, சொத்துக்களை முகாமை செய்வதற்காக நிதியத்தின் வியாபார மாதிரி மற்றும் சொத்துக்கு ஏற்புடைய நிதிப் பாய்ச்சலின் அடையாளங்களின் மீதாகும். நிதியத்தினால் தனது கடன் செயலாற்றுகை கருவிகளை வகையீடு செய்யும் அளவீடுகள் மூன்று வகைப்படும்.

கடன்கழிப்புச் செலவினம்: ஒப்பந்தம் செய்யப்பட்ட நிதிப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காக தடுத்துவைக்கப்படும் சொத்துக்கள் அந்த காசுப் பாய்ச்சலில் வெறுமனே ஆரம்ப முதலீட்டு தொகையில் மற்றும் அதன் வட்டியுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளை மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்யும் சந்தர்ப்பங்களில் கடன் கழிப்பு செலவுக்கு அமைய கணக்கீடு செய்யப்படும். இந்த நிதிச் சொத்துக்கள் மூலம் உழைக்கப்படும் வட்டி வருமானம் செயலுக்கமுள்ள வட்டி வீத முறையைப் பயன்படுத்தி நிதி வருமானங்களில் உள்ளடக்கப்படும். சொத்துக்கள் இனம்காணலின் மீது எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் ஏற்படின் அது இலாபம் அல்லது நட்டத்திற்குள் நேரடியாக இனம் காணப்பட்டு அன்னியச் செலாவணி காரணமாக எழும் இலாபம் அல்லது நட்டத்துடன் வேறு இலாபம் கூடுநட்டம்ரு இற்குள் உள்ளடக்கப்படும். சொத்துக்கள் பலவீன மடையும் காரணத்தினால் நிகழும் நட்டம், இலாபம் அல்லது நட்டக் கூற்றில் தனியான நிரல் விடயமொன்றாக சமர்ப்பிக்கப்படும்.

வேறு விஸ்தீரண வருமானத்தின் ஊடாக சாதாரணப் பெறுமதி FVOCI : ஒப்பந்தம் செய்யப்பட்ட நிதிப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காக மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்வதற்காக தடுத்துவைக்கப்படும் சொத்துக்கள் அந்த காசுப் பாய்ச்சலில் வெறுமனே ஆரம்ப முதலீட்டு தொகையில் மற்றும் அதன் வட்டியுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளை மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்யும் சந்தர்ப்பங்களில் வேறு விஸ்தீரண வருமானத்தின் ஊடாக சாதாரண பெறுமதிக்கு அமைய கணக்கீடு செய்யப்படும். இலாபம் அல்லது நட்டம் பலவீன மடைவதை இனம் காணல், வட்டி வருமானம் மற்றும் இலாபம் அல்லது நட்டத்திற்குள் இனம் காணப்படும் அன்னியச் செலாவணி இலாபம் அல்லது நட்டம் தவிர முன்கொண்டு செல்லப்படும் பணத்தில் ஏற்படும் அசைவுகள் வேறு விஸ்தீரண வருமானங்கள் ஊடாக கணக்கிடப்படும். நிதிச் சொத்தொன்று இனம்காணப்படாத போது வேறு விஸ்தீரண வருமானத் திற்குள் ஏற்கனவே இனம்காணப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டத்தை நோக்கி மீள்வகையீடு செய்யப்பட்டு வேறு இலாபம் ∴ நட்டத்தில் காட்டப்படும். இந்த நிதிச் சொத்துக்கள் மூலம் உழைக்கப்படும் வட்டி வருமானம் பயனுள்ள வட்டி வீத முறையைப் பயன்படுத்தி நிதி வருமானங்களில் உள்ளடக்கப்படும். அன்னியச் செலாவணி காரணமாக எழும் இலாபம் அல்லது நட்டத்துடன் வேறு இலாபம் கூ டுநட்டம்ரு இற்குள் உள்ளடக்கப்படும். சொத் துக்கள் பலவீனமடையும் காரணத்தினால் நிகழும் நட்டம், இலாபம் அல்லது நட்டக் கூற்றில் தனியான நிரல் விடயமொன்றாக சமர்ப்பிக்கப்படும்.

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரண பெறுமதி FVTPL : கடன் கழிப்பு செலவினம் அல்லது வேறு விஸ்தீரண வருமானத்தின் ஊடாக சாதாரண பெறுமதிக்கான நியதிகளை பூரணப்படுத்தாத சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரண பெறுமதியின் கீழ் கணிப்பீடு செய்யப்படும். இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரண பெறுமதியின் கீழ் பிற்காலத்தில் கணிப்பீடு செய்யப்படும் கடன் முதலீடு ஒன்றின் இலாபம் அல்லது நட்டத்திற்குள் இனம் காணப்பட்டு அது நிகழ்ந்த காலப் பிரிவில் வேறு இலாபம் அல்லது (நட்டத்தின்) கீழ் தேறியதாக சமர்ப்பிக்கப்படும்.

2.6.3.2. பங்குரிமை செயலாற்றுகை கருவிகள்

நிதியம் தனது அனைத்து பங்குரிமை முதலீடுகளையும் சாதாரணப் பெறுமதிக்கு அமைய பிற்காலத்தில் கணிப்பீடு செய்யும். நிதிய முகாமைத்துவத்தினால் வேறு விஸ்தீரன வருமானத்திற்குள் பங்குரிமை முதலீடுகளை சாதாரண பெறுமதியுடன் கூடிய இலாபம் அல்லது நட்டத்தை சமர்ப்பிக்க தெரிவுசெய்யப்பட்டிருக்குமிடத்து ஏற்புடைய முதலீட்டை இனம்காணாத காரணத்தினால் நிகழும் சாதாரண பெறுமதியுடன் கூடிய இலாபம் அல்லது நட்டம், இலாபம் அல்லது நட்டத்தை நோக்கி பிற்காலத்தில் மீள்வகையீட்டுக்கு உட்படமாட்டாது. கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் நிதியத்திற்குச் சொந்தமான தனது உரிமையை உறுதிசெய்யுமிடத்து இலாபம் அல்லது நட்டத்திற்குள் அந்த முதலீகளின் மூலம் உழைக்கப்படும் பங்கிலாபம் தொடர்ச்சியாக வேறு விஸ்தீரண வருமானமாக இனம் காணப்படும்.

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரண பெறுமதி மீது கணக்கிடப்பட்ட நிதிச் சொத்துக்களின் சாதாரண பெறுமதியில் நிகழும் மாற்றங்கள், ஏற்புடையவாறு இலாபம் அல்லது நட்டத்தின் கீழ் இனம்காணப்படும். வேறு விஸ்தீரண வருமானத்தின் ஊடாக கணிப்பிடப்படும் பங்குரிமைகள் முதலீட்டின் மீது மேற்கொள்ளப்படும் வலுக்குறை நட்டம் (மற்றும் வலுக்குறை நட்டங்களின் மாற்று) சாதாரண பெறுமதி விடயத்தில் நிகழும் மாற்றங்களினால் பிரித்தறியப்பட்டு அறிக்கை யிடப்படுவதில்லை.

அடிப்படை நிதிச் சாதனங்கள

நிதிச் சொத்துக்கள் வியாபரத்திற்கு விடப்பட்ட நிதிச் சொத்துக்கள், முதிர்ச்சிக்கு விடப்பட்டவை, கடன்கள் மற்றும் வருமதிகள் மற்றும் விற்பனைக்கு உள்ள நிதிச் சொத்துக்கள் என வைகப்படுத்தப்பட்டுள்ளன. கம்பனி அதன் நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலை ஆரம்ப இனங்காணலின் போது தீர்மானிக்கின்றது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் மற்றும் முக்கிய கணக்கியற் கொள்கைகள்

கடன்கள் மற்றும் வருமதிகள்

கடன்கள் மற்றும் வருமதிகள் குறுங்கால வைப்புக்கள், நிலையான வைப்பு மற்றும் வியாபாரமும் ஏனைய வருமதிகளும் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. எல்லா நிதிச் சாதனங்களும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் தொடர்பில் தவிர அவற்றின் நியாயமான பெறுமதியில் மற்றும் கொடுக்கல் வாங்கல் செலவுகளில் ஆரம்பத்தில் அளவிடப்படும்.

கடன்களும் வருமதிகளும் செயற்படு சந்தையொன்றில் விலை குறிக்கப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான மரபு சாரா நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், அவ்வகை நிதிச் சொத்துக்கள் கடன்கழிப்புச் செலவில் பிற்பகுதியில் அளவிடப்படும். பெறுமதி இழப்பின் காரணமாக எழும் நட்டங்கள் விபரமான வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

நிதிச் சொத்துக்களின் பாதிப்பு

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் ஒரு நிதிச் சொத்து பலவீனமடைந்துள்ளது என்பதற்கு ஏதேனும் புறநிலை ஆதாரம் உள்ளதா என்பதை நிறுவனம் மதிப்பிடுகிறது. சொத்தின் ஆரம்ப அங்கீகாரத்திற்குப் பிறகு ஏற்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகளின் விளைவாக சேதம் ஏற்பட்டதற்கான புறநிலை சான்றுகள் இருந்தால் மாத்திரமே நிதிச் சொத்து பலவீனமடைந்ததாகக் கருதப்படுகிறது. அவ்வாறே, அந்த இழப்பு நிகழ்வு மதிப்பிடப்பட்ட எதிர்கால பணத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. நம்பகத்தன்மையுடன் மதிப்பிடக்கூடிய நிதிச் சொத்தின் ஓட்டங்கள், கடனாளின் கணிசமான நிதிச் சிரமம், வட்டி அல்லது அசல் கொடுப்பனவுகளில் கடன் தவறுதல் அல்லது அவர்களின் வகையறவு அற்ற நிலை அல்லது பிற நிதி மறுசீரமைப்பில் நுழைவதற்குள்ள நிகழ்தகவு மற்றும் மதிப்பிடப்பட்ட எதிர்காலத்தில் அளவிடக்கூடிய குறைவு இருப்பதைக் காணக்கூடிய தரவுகள் குறிப்பிடுவது போன்ற குறைபாடுகள் காணப்படலாம். அவ்வாறே, பணப்புழக்கம், இயல்புநிலையுடன் தொடர்புடைய பொருளாதார நிலைமைகளின் நிலுவைகளில் ஏற்படும் மாற்றங்கள் போன்றவையும் தாக்கத்தை செலுத்தும்.

நிதிப் பொறுப்புக்கள்

நிதிப்பொறுப்புக்களின் வரையறை மற்றும் ஒப்பந்திரீதியான உடன்படிக்கையின் உள்ளடக்கத்தின் பிரகாரம் இலாபம் அல்லது நட்டம் அல்லது ஏனைய நிதிப் பொறுப்புக்கள் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிப் பொறுப்புக்களாக நிதிப் பொறுப்புக்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

எல்லா நிதிச் சாதனங்களும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் தொடர்பில் தவிர அவற்றின் நியாயமான பெறுமதியில் மற்றும் கொடுக்கல் வாங்கல் செலவுகளில் ஆரம்பத்தில் அளவிடப்படும்.

வட்டிக் கடன்கள் மற்றும் கடன்கள் மற்றும் ஏனைய நிதிப் பொறுப்புக்கள் (வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை) உள்ளடங்கலான நிதிப் பொறுப்புக்கள் முதலில் கையகப்படுத்துவதற்கு நேரடியாகக் காரணமாயுள்ள குறைந்த கொடுக்கல் வாங்கல் செலவில் நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டு, தொடர்நதும் EIR முறைமையினைப் பயன்படுத்தி கடன்கழிப்புச் செலவில் அளவிடப்படுகின்றன. EIR இன் ஒன்றிணைந்த பகுதியான ஏதேனும் விலைக்கழிவு அல்லது தவணைப்பணம் மற்றும் செலவுகள் ஆகியவற்றைக் கணக்கில் எடுப்பதன் மூலம் கடன்கழிப்புச் செலவு கணிக்கப்படுகின்றது.

2.7. சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள்

2.7.1. அங்கீகாரத்தின் அடிப்படை

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுமிடத்து சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்காலப் பொருளாதார நலன்களையும் சபையின் சொத்துக்களின் செலவையும் நம்பகத்தன்மையுடன் அளவிட முடியும். 2022 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி முதல் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய கொள்கைக்கு அமைய, ஒரு பொருளின் அலகுப் பெறுமதி ரூ.10,000.00 க்குக் குறைவாக உள்ளவைகள் (துணைச் செலவு உட்பட) ஒரு சொத்தாக, ஆலையாக மற்றும் உபகரணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அது ஒரு செலவாகவே கருதப்படும். இந்த முறை பின்னோக்கிய அடிப்படையில் பின்பற்றப்படுகிறது. 2022 ஜனவரி 01 ஆம் திகதியில் தக்கவைக்கப்பட்ட வருமானத்திற்கு ரூ.10.9 மில்லியன் நிதித் தாக்கம் விதிக்கப்பட்டது. இருப்பினும், காணி, கட்டிடங்கள் மற்றும் வாகனங்களின் செலவுகள் (துணைச் செலவு உட்பட) ரூ.10,000.00 அலகு வரையறையைப் பொருட்படுத்தாது மூலதனமாக்கப்படுகின்றன.

2.7.2. அளவீட்டின் அடிப்படை

சொத்துக்கள், ஆலை மற்றும் உபகரணங்களின் இலவச காணிகள் தவிர ஏனையப் பொருட்கள் குறைந்த திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் ஏதேனும் குறைபாடு இழப்புகளின் மீது அளவிடப்படுகின்றன.

2022 ஜனவரி 01 ஆம் திகதிய நிலவரப்படி, தற்போதுள்ள சொத்துக்களின் எழுதப்பட்ட பெறுமதி, மறுமதிப்பீடு மற்றும் பொருளின் நடைமுறைச் சிரமத்தைக் கருத்திற் கொண்டு சொத்துகளின் ஆரம்ப விலையாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

சொத்தின் கையகப்படுத்துதலுக்கு நேரடியாகக் காரணமான செலவினங்கள் செலவில் உள்ளடங்கும். சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் விலையில் பொருட்கள் மற்றும் நேரடி உழைப்பு, சொத்துக்களை அவற்றின் நோக்கம் கொண்ட பயன்பாட்டிற்கான செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்கு நேரடியாகக் கூறப்படும் பிற செலவுகள் என்பன உள்ளடங்கும். பொருட்களை அகற்றுவதற்கும் மற்றும் அவை இருக்கும் தளத்தை மீட்டெடுப்பதற்கான செலவுகள் மற்றும் தகுதியான கடன் செலவுகள் ஆகியன மூலதனமாக்கப்படும்.

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் ஒரு பொருளின் பாகங்கள் வெவ்வேறு பயனுள்ள வாழ்க்கையைக் கொண்டிருக்கும் போது, அவை தனித்தனியான சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களாகக் கணக்கிடப்படுகின்றன.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் மற்றும் முக்கிய கணக்கியற் கொள்கைகள்

2.7.3. அடுத்துவரும் செலவுகள்

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதியை மாற்றுவதற்கான செலவு, அந்த பகுதிக்குள் பொதிந்துள்ள எதிர்கால பொருளாதார நன்மைகள் பகுதிக்குப் பாயும் மற்றும் அதன் செலவை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியும் எனில், பொருளை எடுத்துச் செல்லும் தொகையில் அது ஏற்றுக்கொள்ளப்படும். அத்தோடு, மாற்றப்பட்ட பகுதியின் சுமந்து செல்லும் அளவு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் நாளாந்த சேவைளுக்கு செலவு செய்யப்படும் விடயங்கள் ஏற்க நேர்ந்த செலவுகளாக கருதப்படும்.

2.7.4. தேய்மானம்

2022 ஜனவரி 01 ஆம் திகதிக்கு முன்னரான தேய்மானத்தைக் குறைக்கும் சமநிலை முறையைப் பயன்படுத்தி கணக்கிடப்பட்டது. அத்தோடு, 2022 ஆம் ஆண்டின் ஜனவரி 01 ஆம் திகதி முதல் தேய்மானம் ஒரு சொத்தின் எஞ்சிய பெறுமதியைக் குறைக்கும் செலவின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது. தனிப்பட்ட சொத்துகள் குறிப்பிடத்தக்க கூறுகள் மீது மதிப்பிடப்படுகின்றன, மேலும் ஒரு கூறு அந்தச் சொத்தின் எஞ்சியவற்றிலிருந்து வேறுபட்ட பயனுள்ள ஆயுளைக் கொண்டிருப்பின் அந்தக் கூறு தனியாக தேய்மானம் செய்யப்படும்.

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் ஒவ்வொரு கூறுகளின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தின் மீது ஒரு நேர்கோட்டு அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் தேய்மானம் ஏற்றுக்கெ ாள்ளப்படுகிறது. இங்கு காணி மதிப்பிறக்கம் செய்யப்படவில்லை.

ஒரு சொத்தின் தேய்மானம், அது பயன்பாட்டுக்குக் கிடைக்கும் போது ஆரம்பமாகின்றது. அவ்வாறே, சொத்து விற்பனைக்கு விடப்பட்டதாக வகைப்படுத்தப்பட்ட திகதி மற்றும் சொத்தின் அங்கீகாரம் நீக்கப்பட்ட திகதியின் முன்னைய திகதியில் அது முடிவுறுத்தப்படும்.

தேய்மான முறைகள், பயனுள்ள ஆயுட்காலம், எஞ்சிய பெறுமதிகள் ஆகியவை அறிக்கையிடும் திகதியில் மதிப்பிடப்பட்டு, பொருத்தமானதாக இருப்பின் சரிசெய்யப்படும்.

2.7.5. சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் அங்கீகாரத்தை நீக்குதல்

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் ஒரு உருப்படி மற்றும் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு குறிப்பிடத்தக்க பகுதியும் அகற்ற ப்படும்போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலில் இருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாதபோது அது ஏற்றுக்கெ காள்ளப்படமாட்டாது. சொத்தின் அங்கீகாரம் நீக்கப்படும்போது ஏற்படும் எந்த இலாபமோ அல்லது நட்டமோ சொத்து அங்கீகரிக்கப்படாத இலாபம் அல்லது இழப்பு அறிக்கையில் சேர்க்கப்படும். எஞ்சிய பெறுமதிகள், பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் தேய்மானத்தின் முறைகள் ஆகியவை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் மதிப்பாய்வு செய்யப்பட்டு, பொருத்தமாக இருப்பின் எதிர்காலத்தில் சரிசெய்யப்படும்.

சொத்துக்களின் தேய்மானம் நேர்-கோடு முறையைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகின்றது. அவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தின் மீது அவற்றின் செலவுகள் பின்வருமாறு கணக்கிடப்படுகின்றது:

	வருடங்கள் (பயனுள்ள ஆயுட்காலம்)		தேய்மான வீதம்	
	2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர்	2022 ஜனவரி 01 ஆம் திகதிக்குப் பின்னர்	2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர	2022 ஜனவரி 01 ஆம் திகதிக்குப பின்னர்
கட்டிடங்கள்	15 வருடங்கள40	வருடங்கள	6.67மூ	2.5மூ
மோட்டார் வாகனங்கள்	04 வருடங்கள்05	வருடங்கள்	25மூ	20மூ
கணினி உதிரிப் பாகங்கள்	05 வருடங்கள்05	வருடங்கள்	20மூ	20மூ
தளபாடங்கள்	6 2/3 வருடங்கள்10	வருடங்கள	15மூ	10மூ
இணைப்புகள் மற்றும் பொருத்திகள்	03 வருடங்கள்10	வருடங்கள்	33.33மூ	10மூ
ஏனைய உபகரணங்கள்	05 வருடங்கள்05	வருடங்கள்	20மூ	20மூ

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் மற்றும் முக்கிய கணக்கியற் கொள்கைகள்

சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகளின் உருப்படிகள் திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் ஏதேனும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்களைக் கழித்து வரலாற்றுச் செலவில் அளவிடப்படும். சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் பெறுமானத் தேய்விற்கு பயன்படுத்தப்படும் வருடாந்த வீதங்களைக் கழித்து சொத்துக்களின் செலவினை ஒதுக்கீடு செய்யும் பொது பெறுமானத் தேய்வு விதிக்கப்படும்:

கட்டடங்கள் மற்றும் அறுதியுள்ள காணிகள்	2.5%
பொறித்தொகுதீ மற்றும் இயந்திரங்கள்	10%
கருவிகள்	10%
தளபாடங்கள் மற்றும் பொருத்திகள்	10%
மோட்டார் வாகனங்கள்	
- வீதி வாகனங்கள்	10%
- டிராக்டர்கள் மற்றும் டிரெய்லர்கள்	20%
அபிவிருத்திப் பணிகள்	20%
முதர்ச்சியுற்ற பெருந்தோட்டங்கள் - தென்னை	2%

பெறுமானத் தேய்வு வீதம், பயன்தரு ஆயுட்காலம் அல்லது ஒரு சொத்தின் எஞ்சிய பெறுமதி ஆகியவற்றில் முக்கியமான மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளமைக்கான அறிகுறி இருப்பின், சொத்தின் பெறுமானத் தேய்வு புதிய எதிர்பார்ப்புக்களைப் பிரதிபலிப்பதற்கு எதிர்காலத்தில் திருத்தியமைக்கப்படும்.

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் ஓர் உருப்படியானது அகற்றுகை அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றுகை மூலம் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகள் இல்லாத போது இனங்காண்பது நிறுத்தப்படும். சொத்தினை இனங்காண்பது நிறுத்தப்படுவதால் எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (தேறிய அகற்றுகை வருவாய்கள் மற்றும் சொத்தின் காவுகைத் தொகை ஆகியவற்றிற்கு இடையிலான வித்தயாசமாகக் கணிக்கப்பட்ட) சொத்து இனங்காண்பது நிறுத்தப்பட்ட ஆண்டில் இலாபம் அல்லது நட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- **உயிர் சொத்துக்கள்**

  உயிர் சொத்துக்கள், முதிர்ச்சி அடைந்த உயிர் சொத்துக்கள் மற்றும் முதிர்ச்சி அடையாத உயிர் சொத்துக்கள் என இரு வகைப்படும். முதிர்ச்சி அடைந்த உயிர் சொத்துக்களாக அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடியுமான விசேட தரத்திலுள்ள அல்லது அடிக்கடி அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடியுமான சொத்துக்களாகும். முதிர்ச்சி அடையாத உயிர் சொத்துக்களாக தற்காலம் அளவில் அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடியாத விசேட தரத்திற்கு உட்படாத சொத்துக்களாகும். தெங்குப் பயிர்ச் செய்கை மற்றும் நாற்று மேடைகள் உயிர் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. உடமை உயிர் சொத்துக்கள் விற்பனை செய்வதற்கோ அல்லது அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்கோ எண்ணமில்லாத போதும் விவசாய உற்பத்திகளாக அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்தாத உயிர் சொத்துக்கள் உள்ளடக்கப்படும். கடந்தகால நிகழ்வொன்றின் பெறுபேறாக ஏற்புடைய சொத்துக்களுடன் பின்னிப் பிணைந்து காணப்படும் எதிர்கால பொருளாதார நலன்கள் தன்னை நோக்கி வரும் என மற்றும் அந்தச் சொத்துக்களின் சாதாரணப் பெறுமதி அல்லது செலவு நம்பகமான முறையில் அளவிட முடியுமென நிறுவனம் அனுமானிக்கும் போது மற்றும் நிறுவனத்தினால் அந்த ஏற்புடைய சொத்துக்களை கட்டுப்படுத்துகின்ற போது மாத்திரம் அந்த நிறுவனம் தனது உயிர் சொத்துக்களை இனம் காணுகின்றது. உயிர் சொத்துக்கள் தொடர்பில் நிகழும் தேய்வு முழுமையாக இலாபம் அல்லது நட்டம் பற்றிய கூற்றுக்களில் அறவீடாக காட்டப்பட்டு ஏற்புடைய நட்டத்தை உறுதியாக அறிந்துகொண்ட பின்னர் அந்த நட்டம் ஏற்பட்ட ஆண்டில் அந்த சொத்துக்களுக்குரிய தேறியவைகள் முன்கொண்டு செல்லப்படும் கணக்குகளுக்கு குறைவு செய்யப்படும்.

- **உடமையுள்ள உயிர் சொத்துக்கள்**

  உடமையுள்ள உயிர் சொத்துக்கள், இல 16 இலங்கை கணக்கீட்டுத் தரங்கள் - சொத்துக்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கு அமைய அவற்றின் திரண்ட தேய்மாணம் மற்றும் மற்றும் திரண்ட குறைவு நட்டங்கள் இருப்பின் அவையும் கழிக்கப்பட்ட செலவுகளின் மீது, அளவிடப்படும். கன்றுகளை நட்டுதல் மற்றும் அறுவடையைப் பெற்றுக்கொள்ளும் (மரக் கன்றுகள் நடப்பட்ட பிரதேசம் முதிர்ச்சியடைந்து வளர்ந்த பின்னர்) காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட காணி சீராக்கம், மறுசீரமைப்பு, புதிதாக கன்று நடல், மீண்டும் கன்று நடல், பயிர்களை பல்வகைப்படுத்தல், துணைப் பயிர்களை நடல் மற்றும் உரம் இடல் போன்றவற்றுக்கான செலவுகள் முதிர்ச்சியடையாத பயிர்செய்கைகள் என வகைப்படுத்தப்படும். இந்த முதிர்ச்சி அடையாத பயிர்ச் செய்கைகளுக்கான நிதியிடலுக்காக பயன்படுத்தப்படும் நீண்ட கால கடன் தொகைகளுக்குரிய வட்டி உட்பட ஏனைய ஏற்புடை அவசிய செலவுகளுக்குரிய நேரடிச் செலவுகளுக்கு அமைய எடுத்துக்காட்டப்படும். வருடத்தினுள் பயன்தரக்கூடிய உடமை உயிர்ச் சொத்துக்கள் (தெங்கு) மீது ஏற்படுத்தப்படும் செலவுகள் முதிர்ச்சியடைந்த சொத்துக்களுக்கு மாற்றப்படும்.

2.8. முதலீட்டுச் சொத்து

கொடுக்கல் வாங்கல் செலவுகள் உட்பட முதலீட்டுச் சொத்தக்கள் ஆரம்பத்தில் செலவில் அளவிடப்பட்டன. ஆரம்ப இனங்காணலின் பிற்பாடு, அறிக்கையிடும் தினத்தில் சந்தை நிலைமைகளைப் பிரதிபலிக்கும் நியாயமான பெறுமதியில் முதலீட்டுச் சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. முதலீட்டுச் சொத்துக்கள் மீதான நியாயமான விலையில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் காரணமாக எழக்கூடிய இலாபங்கள் மற்றும் நட்டங்கள் அவை ஏற்பட்ட காலப்பிரிவில் வருமானக் கூற்றில் உள்ளடங்குகின்றன.

சபையின் முதலீட்டுச் சொத்து விபரமான வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ள காவுகைப் பெறுமதியில் உள்ள மாற்றங்களுடன் திறந்த சந்தைப் பெறுமதிக்கு ஒவ்வொரு மூன்று வருடத்திலும் மீள் மதிப்பீடு செய்யப்படும்.

கிடைக்க வேண்டிய வாடகை குத்தகைக்கு விடப்பட்ட காலப்பகுதிக்குள் நேர் கோட்டு முறைமையின் அடிப்படையில் அமைக்கப்படும். வாடகைக் குடியிருப்பாளனுக்கு ஊக்குவிப்பொன்று (வாடகை அறவிடப்படாத காலப்பகுதி போன்ற) வழங்கப்படுகையில், முதலீட்டுச் சொத்தின் காவுகைப் பெறுமதி இவ்வடிப்படையில் வாடகை வருமானமாக இனங்காணப்பட்டதன் விளைவாக பிரத்தியேகமான சொத்தொன்றாக பதியப்பட்ட ஏதேனும் தொகையை நீக்கும்.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் மற்றும் முக்கிய கணக்கியற் கொள்கைகள்

சபைக்குச் சொந்தமான கொழும்பு 02, நவம் மாவத்தையில் அமைந்துள்ள 2 ஏக்கர் 1 ரூட் 28 பேர்சஸ் விஸ்தீரணமுள்ள காணியொன்று காணப்படுகின்றது. அரசாங்க விலைமதிப்பீட்டாளரினால் 2022 நவம்பர் 11 ஆம் திகதி விலைமதிப்பு செய்யப்பட்டுள்ளது. அரசாங்க விலைமதிப்பாளரின் அறிக்கைகக்கு அமைய இந்தக் காணியின் சாதாரணப் பெறுமதி ரூ. 4,587,406,450/- ஆக அதிகரித்துள்ளது.

2.8.1. (அ) சபையின் முதலீட்டுச் சொத்துக்களின் விபரம் - விஸ்தீரணம் மற்றும் அமைவிடம்

அமைவிடம்	விஸ்தீரணம் (பேர்சஸ்)	முதலீட்டுச் சொத்தின் சாதாரணப் பெறுமதி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, நவம் மாவத்தை, கொழும்பு 02.	388	ரூ. 4,566,000,000.00

அமைவிடம்	கட்டிடம் (சதுரஅடி)	முதலீட்டுச் சொத்தின் சாதாரணப் பெறுமதி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, நவம் மாவத்தை, கொழும்பு 02.	19,319	ரூ. 21,406,450.00

2.8.2. (ஆ) சபையின் முதலீட்டுச் சொத்துக்களின் விபரம் - விலைமதிப்பு

விலைமதிப்பீட்டாளரின் பெயர் / முகவரி மற்றும் அமைவிடம்	மதிப்பிடும் முறை மற்றும் குறிப்பிடத்தக்க விடயங்கள் கவனிக்க முடியாத உள்ளீடுகள்	மதிப்பீடுகளின் வரையறைகள் கவனிக்க முடியாத உள்ளீடுகள் ரூ.	முதலீட்டுச் சொத்தின் சாதாரணப் பெறுமதி ரூ.
அரசாங்க விலைமதிப்புத் திணைக்களம், "விலைமதிப்பகம்" இல 748, மருதானை வீதி, கொழும்பு 10.	சந்தை ஒப்பீட்டு முறை • ஒரு பேர்சசுக்கான விலை • ஒரு சதுர அடிக்கான விலை	11,823,212.50 p.p 625 – 1955 p.sq.ft.	4,566,000,000.00 21,406,450.00

2.8.3. (இ) மதிப்பீட்டு நுட்பங்கள் மற்றும் குழுமத்தின் முதலீட்டுச் சொத்துக்களின் சாதாரணப் பெறுமதியின் உணர்திறன்

மதிப்பீட்டு நுட்பங்கள்	கவனிக்க முடியாத மதிப்பீட்டு உள்ளீடுகள்	சாதாரணப் பெறுமதியின் உணர்திறன்
சந்தை ஒப்பீட்டு முறை இந்த முறையானது, மறுமதிப்பீடு செய்யப்படும் சொத்தின் நியாயமான மதிப்பை நிர்ணயிப்பதில், நியாயமான கிட்டிய காலத்திற்குள் இதேபோன்ற சொத்தின் விற்பனை விலை-யைக் கருதுகின்றது. இது ஒரே மாதிரியான சொத்துக்க-ளின் கிட்டிய செயலில் உள்ள சந்தை விலைகளை மதிப்பிடுவதை உள்ளடக்குகிறது. குறிப்பிட்ட சொத்தின் அளவு, தன்மை, அமைவிடம் மற்றும் நிலை ஆகியவற்றில் உள்ள வேறுபாடுகளுக்கு பொருத்தமான மாற்றங்களைச் செய்கின்றது.	• ஒரு பேர்சசுக்கான விலை • ஒரு சதுர அடிக்கான விலை	மதிப்பிடப்பட்ட நியாயமான பெறுமதி அதிகரிப்பு / (குறைதல்) ஒரு பேர்ச்சஸ் விலை அதிகரிப்பு/ (குறைதல்) ஒரு சதுர அடி விலை அதிகரித்தல்.(குறைதல்)

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் மற்றும் முக்கிய கணக்கியற் கொள்கைகள்

2.9. அருவச் சொத்துக்கள்

2.9.1. வெளிவாரியாகப் பெறப்பட்ட அருவச் சொத்துக்கள்

பிரத்தியேகமாகப் பெறப்பட்ட அருவச் சொத்துக்கள் ஆரம்ப இனங்காணலின் போது செலவில் அளவிடப்பட்டன. அருவச் சொத்துக்கள் மீதான பின்வரும் ஆரம்ப இனங்காணல்கள், திரண்ட கடன் தீர்ப்பனவு மற்றும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்களைக் கழித்து செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அருவச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வரையறுக்கபட்ட அல்லது வரையறுக்கப்படாத விதத்தில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

அருவச் சொத்துக்கு பெறுமதி இழப்பு ஏற்படக் கூடும் என்ற குறிகாட்டி உள்ள போதெல்லாம், வரையறைக்குள்ளான ஆயுட்காலத்தை கொண்ட அருவச் சொத்துக்கள் அவற்றின் பயன்தரு பொருளாதார ஆயுட்கலத்தினுள் கடன் தீர்ப்பனவு செய்யப்படுவதுடன், பெறுமதி இழப்புக்காக மதிப்பீடு செய்யப்படும். வரையறைக்குள்ளான பயன்தரு ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்திற்கான கடன் தீர்ப்பனவு காலம் மற்றும் கடன் தீர்ப்பனவு முறைமை குறைந்தபட்சம் ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் மீளாய்வு செய்யப்படும். எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது சொத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகளின் கொள்வனவின் எதிர்பார்க்கப்பட்ட முறைமை கடன்தீர்ப்பனவு காலம் அல்லது முறையை மாற்றுவதன் மூலம் கணிப்பீடு செய்யப்படுவதுடன், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்களாகக் கருதப்படும். வரையறைக்குள்ளான ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள் மீதான கடன் தீர்ப்பனவு செலவினமானது அருவச் சொத்துக்களின் தொழிற்பாட்டுடனான செலவின வகை இணக்கப்பாட்டில் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

அருவச் சொத்து ஒன்றின் இனங்காணலை நிறுத்துவதனால் ஏற்படும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் தேறிய அகற்றுகை வருவாய்களுக்கும் சொத்தின் காவுகைத் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாக அளவிடப்படுகின்றன. மேலும் சொத்தினை இனங்காணுவதை நிறுத்தும் போது, அது வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

2.9.2. கணினி மென்பொருள் பொதியங்கள்

கணினி மென்பொருள் பொதியங்களைப் பெறுதல்/-தரமுயர்த்துதலால் ஏற்படும் தொகை அருவச் சொத்தக்களாக இனங்காணப்படுவதுடன், 3 வருடங்களுக்கு மேலாகக் கடன் தீர்ப்பனவு செய்யப்படும்.

2.10. குத்தகைச் சொத்துக்கள்

மதிப்பீட்டில் குறிக்கப்பட்ட மற்றும் சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் கீழ் முன்னர் வகைப்படுத்தப்பட்ட நிலப் பயன்பாட்டு உரிமைகளைக் கொண்ட குத்தகைச் சொத்து "குத்தகைச் சொத்தாக" மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஹம்பாந்தோட்டையில் உள்ள காணிக்கு செலுத்தப்பட்ட குத்தகைத் தொகை மூலதனமாக்கப்பட்டு 30 வருட குத்தகைக் காலத்திற்கு கடன்கழிப்புச் செய்யப்பட்டுள்ளது.

2.10.1. தொழிற்படு குத்தகை

உடைமையுரிமைக்கு உட்பட்ட கணிசமான அளவு இடர்கள் மற்றும் வெகுமதிகள் (தொழிற்படு குத்தகை') சபைக்கு மாற்றஞ் செய்யப்படாத போது, குத்தகையின் கீழ் செலுத்த வேண்டிய மொத்த வாடகை குத்தகைத் தவணைக்குள் நேர் கோட்டு முறைமை அடிப்படையில் விபரமான வருமானக் கூற்றுக்குச் சாட்டப்படும்.

2.11. பொருட்பதிவேடுகள்

வழக்கற்று போன மற்றும் மெதுவாக அசையும் உருப்படிகளுக்கு உரிய முற்பணங்கள் தீர்க்கப்பட்டதன் பின்னர் பொருட் பதிவேகள் குறைந்தளவிலான செலவிலும் தேறிய பணமாக மாறக்கூடிய பெறுமதியிலும் மதிப்பிடப்படும்.

வழக்கற்று போன மற்றும் மெதுவாக அசையும் உருப்படிகளுக்கு உரிய முற்பணங்கள் தீர்க்கப்பட்டதன் பின்னர் பொருட்பதிவேகள் குறைந்தளவிலான செலவிலும் தேறிய பணமாக மாறக்கூடிய பெறுமதியிலும் மதிப்பிடப்படும். பூர்த்தி செய்தல் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு மற்றும் விற்பனை மேற்கொள்வதற்கு தேவையான மதிப்பீடு செய்யப்பட்ட செலவு கழித்து பொருட்பதிவேடுகளை சாதாரண வியாபாரத்தில் விற்கக்கூடிய விலையே தேறிய பணமாக மாறக்கூடிய பெறுமதி ஆகும்.

பொருட்பதிவேடுகளை அதன் தற்போதைய இடத்திற்கும் நிலைக்கும் கொண்டுவருவதில் ஏற்பட்ட செலவு பின்வரும் செலவுச் சூத்திரங்களைப் பிரயோகித்து கணக்கிடப்படும்:-

மூலப் பொருட்கள் - முதலில் வந்தது முதலில் வெளியேறல் என்ற செலவு அடிப்படையில் கொள்வனவுச் செலவில்

முடிவுப் பொருட்கள் - நேரடிப் பொருட்கள், நேரடி உழைப்பு மற்றும் பிராந்திய உற்பத்தி மேந்தலைகளின் பொருத்தமான விகிதம் ஆகியவற்றின் செலவில்

முடிவுறா வேலைகள்- 12 மற்றும் அதற்கு மேற்பட்ட அடர்த்தியான மட்டத்தில் உட்செலுத்தப்பட்ட உப்பின் கணக்கிடப்பட்ட அளவை விட பகிர்ந்தளிக்கப்பட்ட கடந்த பருவத்தில் உப்புநீர் சுத்திகரிப்பு மற்றும் உப்புப் படுக்கைகளைத் தயாரித்தல் செலவினங்கள் 25மூஇல்லு கர்வுகள் மற்றும்

உதிரிப்பாகங்கள் - முதலில் வந்தது முதலில் வெளியேறல் அடிப்படையில் கொள்வனவுச் செலவில்

பூர்த்தி செய்தல் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு மற்றும் விற்பனை மேற்கொள்வதற்கு தேவையான மதிப்பீடு செய்யப்பட்ட செலவு கழித்து சாதாரண வியாபாரத்தில் விற்கக்கூடிய மதிப்பிடப்பட்ட விற்பனை விலையே தேறிய பணமாக மாறக்கூடிய பெறுமதி ஆகும்.

2.12. இளைப்பாற்று நலன் பொறுப்புக்கள்

2.12.1. ஊழியர் நலன்கள்

கம்பனி நிலையான நலன்கள் மற்றும் நிலையான பொறுப்புக்கள் திட்டங்களைக் கொண்டுள்ளது. நிலையான பங்களிப்புத் திட்டம் என்பது கம்பனி இன்னொரு நிறுவனத்திற்கு நிலையான பங்களிப்புக்களைச் செலுத்துகின்ற இளைப்பாற்றுத் திட்டம் ஆகும். நிலையான நலன் திட்டங்கள் சேவைக் காலம் மற்றும் இழப்பீட்டின் அடிப்படையில் இளைப்பாறுகையில் ஓர் ஊழியர் பெற்றுக் கொள்ளும் இளைப்பாற்று நலன் தொகையினை நிர்ணயிக்கின்றது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் மற்றும் முக்கிய கணக்கியற் கொள்கைகள்

2.12.2. நிலையான பங்களிப்புத் திட்டங்கள்

உரிய சட்ட விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்க, சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புக்களை மேற்கொள்வதற்கு ஊழியர்கள் தகுதியுடையவர்களாவர். ஊழியர்களின் மொத்த வருவாயிலிருந்து 15மூ மற்றும் 3மூ இனை முறையே ஊழியர்கள் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புக்களை சபை வழங்குகின்றது.

வழக்கிலுள்ள சட்ட விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்க, சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புக்களை மேற்கொள்வதற்கு ஊழியர்கள் தகுதியுடையவர்களாவர். ஊழியர்களின் மொத்த வருவாயிலிருந்து 12மூ மற்றும் 3மூ இனை முறையே ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புக்களை கம்பனி வழங்குகின்றது.

2.12.3. நிலையான நலன் திட்டங்கள் - பணிக்கொடை

ஊழியர் நன்மைகள் - இலங்கை கணக்கீட்டு நியமங்கள் LKAS 19 இன் உறுதிப்பாட்டுடன் எல்லா ஊழியர்களினதும் சேவைக்காலத்தின் முதல் வருடத்திலிருந்தே இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. எவ்வாறெனினும், 1983 இன் பணிக்கொடைக் கொடுப்பனவு சட்ட இல 12 இன் கீழ் ஓர் ஊழியருக்கான பொறுப்பு தொடர்ச்சியான ஐந்து வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யும் போதே எழுகின்றது. பொறுப்பானது வெளிவாரியாக நிதியிடப்படுவதில்லை.

நிலையான பங்களிப்புத் திட்டத்திற்கு மாறாக நிலையான நலன்கள் திட்டமானது தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டமாகும். நிலையான இளைப்பாற்றுத் திட்டம் தொடர்பில் தாபனத்தின் தேறிய கடப்பாடு, நடப்பு மற்றும் முன்னைய காலப்பகுதிகளில் ஊழியர்கள் தமது பணிக்காக ஈட்டிய எதிர்கால நன்மை மீதான தொகையை மதிப்பீடு செய்வதன் மூலம் கணிக்கப்படுகின்றது. அந்நன்மையானது அதன் நடப்புப் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு கழிவீடு செய்யப்படும். இனங்காணப்படாத கடந்த சேவைச் செலவினங்கள் கழிக்கப்படும்.

கழிவீட்டு வீதமானது அறிக்கையிடும் காலப்பகுதியில் தாபனத்தின் கடப்பாட்டு நிபந்தனைகளைப் பெரிதும் ஒத்திருக்கக்கூடிய முதிர்ச்சி நாட்களைக் கொண்ட உயர் தரக் கூட்டு முறிகள் மீதான வருவாயாகும். மேலும் அவை நன்மைகள் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் அதே நாணயத்தில் குறிக்கப்படும். நிலையான நன்மைகள் கடப்பாடு வருடாந்தம் நெறிப்படுத்தப்பட்ட அலகுப் பற்று முறைமையைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

மேலுள்ள அங்கத்துவ நிதிய மீதி 290 மில்லியன் ரூபா 2022./12./31 ஆம் திகதிக்கு தனிப்பட்ட அங்கத்துவக் கணக்கு ஒதுக்கப்படாதவை

துணைத் தகவல்கள்



கணககாய்வாளர் ஆணையாளரின் அறிக்கை 2022

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My No. LSW/F/ETF/1/2022/10

ඔබේ අංකය உமது இல. Your No.

දිනය திகதி Date 31 of May 2023

தவிசாளர்,
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை,

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் மற்றும் அதன் நிர்வாகத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டமுறையான தேவைப்பாடுகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் "சபை" மற்றும் அதன் நிர்வாகத்தின் "குழுமம்" 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று, உரிமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நிதிக் கூற்றுக்கள், சபையின் மற்றும் அதன் நிர்வாகத்தின் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை வருங்காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும். எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை எனும் பிரிவில் விளக்கியுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தை தவிர சபையின் மற்றும் குழுமத்தின் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) சபையினால் 1981 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் தொழில் வழங்குநர்கள் 3,912 பேரிடமிருந்து அறிவிடப்பட்ட 2023 ஏப்ரல் 28 ஆம் திகதிக்கு மொத்தத் தொகையான ரூபா.மில். 581.35 பெறுமதியான பங்களிப்புத் தொகையை 1980 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 16 (3) ஆம் பிரிவுக்கு அமைய அந்தந்த அங்கத்தவர்களின் கணக்குகளில் வைப்பிலிடாது தொழில் வழங்குநர் கணக்குகளில் தடுத்துவைக்கப்பட்டது. இவற்றில் 07 வருடங்கள் முதல் 41 வருடங்கள் வரை தொடர்ந்துவரும் மீதி 97.12 மில்லியன் ரூபாவாகும்.

(ஆ) 1980 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 16 (3) ஆம் பிரிவுக்கு அமைய எவரேனும் ஊழியர் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் சபையினால் நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் 1985 முதல் 2022 ஆம் ஆண்டு வரை அறவிட்டிருந்த ரூ.மில். 1,511.14 பெறுமதியான பங்களிப்புத் தொகை மற்றும் மேலதிக கட்டணங்களில் ரூ.மில். 71.25 தொகை மீளாய்வுக்குரிய வருடத்தின் இறுதி வரையில் ஊழியரின் தனிப்பட்ட கணக்குகளில் வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கணினித் தொகுதிக்கு அமைய அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு வைப்புச் செய்யப்படாத மீதி ரூ.மில். 781.05 ஆகும். நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இல 34 இன் கீழ் அந்த மீதிகள் ரூ.மில். 290 என வெளிப்படுத் தப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்கு அனுப்பப்பட்ட பங்களிப் தொகைகள் மற்றும் மேலதிகக் கட்டணங்களில் தொழில் வழங்கும் நிறுவனங்களை குறிப்பாக கண்டறிய முடியாத வருமதிகளை அறிக்கையிடுவதற்காக தனியான கணக்கொன்று (V999) பேணப்படுகின்றது. அந்த கணக்கில் 1982 முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் அவ்வாறு ரூ.மில்.7.59 தொகை மீதியாக காணப்பட்டது. இந்த மீதிக்குள் 1982 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கு ஏற்புடைய ரூ.மில். 6.22 அடையாளம் காண முடியாத வருமதிகளின் மீதி காணப்பட்டது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைய என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் தலைப்பின் கீழ் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

கணகாய்வாளர் ஆணையாளரின் அறிக்கை 2022

1.3 சபையின் 2021 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள் இந்தக் கணக்காய்வு அறிக்கையில் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட சபையின் 2021 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பிலான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் எனப் பொருள்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக்கூறல் வேண்டும். நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் எனது அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் உள்ளடங்காது. நான் அது தொடர்பில் எவ்வித அத்தாட்சிப்படுத்தலையோ அல்லது அபிப்பிராயத்தையோ சமர்ப்பிக்கவில்லை. நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் எனது கணக்காய்வுக்கு அமைய எனது பொறுப்பாவது மேலே அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடனோ அல்லது கணக்காய்வின் போதோ அல்லது வேறு முறையிலோ பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கு அமைய எண்ணிக்கை அளவில் வித்தியாசம் உண்டா என்பது தொடர்பில் பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

இந்தக் கணக்காய்வு அறிக்கைக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்கள் மீது மற்றும் என்னால் புரியப்பட்ட பணிகள் அடிப்படையில் இந்த ஏனைய தகவல்கள் எண்ணிக்கை ரீதியில் பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளதென நான் தீர்மானிக்குமிடத்து அந்த விடயங்களை நான் அறிக்கையிடல் வேண்டும். இது தொடர்பில் எனக்கு அறிக்கையிட ஏதும் இல்லை.

1.4 நிதிக் கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வகிக்கும் தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிப்பதற்காக மற்றும் நியாயமாக முன்வைப்பதற்காக மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிகழுவதற்கு இடம்பாடுள்ள எண்ணிக்கை ரீதியாக பிழையான கூற்றுக்கள் இன்றி நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் பொருட்டு தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கின்ற போது சபையினால் தொடர்ச்சியாக பேண முடியுமான ஆற்றலை தீர்மானிக்கும் பொறுப்பு முகாமைத்துவத்துக்கு உரியதாகும். முகாமைத்துவம் சபையை கலைப்பதற்கு உத்தேசிக்குமாயின் அல்லது வேறு மாற்றீடு இல்லாத விடத்து செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் அன்றி தொடர்ந்தேர்ச்சியான இருப்புக்கு ஏற்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறைப் பற்றிய பொறுப்பு, நிர்வகிக்கும் தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உட்பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் தற்கால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு ஏற்ற வகையில் தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான உரிய புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மொத்தமாக நிதிக் கூற்றுக்களின் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் எண்ணிக்கை ரீதியான பொய்யான கூற்றுக்கள் அல்ல என்ற சாதாரண உறுதிப்பாட்டை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். சாதாரண உறுதிப்பாடு உயர் மட்டத்திலான சான்றிதழ் என்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும் போது அது எப்போதும் எண்ணிக்கை ரீதியான பிறழ் கூற்றுக்களை இனம்காணக்கூடிய உறுதிப்பாடாக அமையாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியான அல்லது கூட்டாக தாக்கம் செலுத்தும் எண்ணிக்கை ரீதியான பிறழ்கூற்றுக்கள் நிகழ முடியுமாயினும் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயனர்களினால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தாக்கத்தை செலுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில் ரீதியான முடிவு மற்றும் தொழில் ரீதியான தீர்ப்புடன் மற்றும் தொழில் ரீதியான சந்தேகத்துடன் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் நிகழ முடியுமான எண்ணிக்கை ரீதியான பிழையான கூற்றுக்களின் ஆபத்தை இனம்காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக நிகழக்கூடிய ஆபத்தை தவிர்ப்பதற்கு போதியளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். எண்ணிக்கை ரீதியான பொய்யான கூற்றுக்களினால் ஏற்படக்கூடிய தாக்கங்களை விட மோசடியினால் நிகழும் தாக்கம் பாரியது. கூட்டுச்சதி, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தட்டிக்கழித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை கைவிடுதல் மோசடி நிகழுவதற்கு காரணமாகும்.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக சபையின் உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வு பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் உள்ளக நிர்வாகத்தின் பயனுறுதி தொடர்பில் அபிப்பிராயம் தெரிவிக்க இங்கு முன்வரவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் தகைமையை மதிப்பிடல்.

- நிகழ்வுகள் அல்லது நிலமைகள் காரணமாக சபையின் தொடர்ச்சியான இருப்பு பற்றிய எண்ணிக்கை ரீதியான எதிர்பாராத விளைவுகள் உள்ளனவா என்பது தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டுக்கான நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு பற்றிய அடிப்படையைப் பயன்படுத்துவதன் ஏற்புடமை

கணகாய்வாளர் ஆணையாளரின் அறிக்கை 2022

தீர்மானிக்கப்பட்டது. போதியளவு எதிர்பாரா நிகழ்வு உள்ளதாக நான் முடிவு செய்யுமிடத்து நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பிலான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தை செலுத்த வேண்டுமென்பதோடு, அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாத விடத்து எனது அபிப்பிராயத்தை திருத்தியமைத்தல் வேண்டும். எவ்வாறெனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலமைகளின் மீது தொடர்ச்சியான இருப்பு முடிவடைய முடியும்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக் கூற்றுக்களில் வெளியிடல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டதோடு, அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதென மதிப்பீடு செய்தல்.

- ஒன்றிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான அபிப்பிராயத்தை முன்வைப்பதற்காக குழுமத்தினுள் காணப்படும் நிறுவனங்கள் மற்றும் வியாபாரச் செயன்முறைகளின் நிதித் தகவல்கள் தொடர்பில் போதியளவு பொருத்தமான கணக்காய்வு சாட்சியங்கள் பெற்றுக்கொள்ள-ப்பட்டன. குழும கணக்காய்வின் போது வழிநடாத்தல், மேற்பார்வை மற்றும் செயலாற்றுகைக்கு நான் பொறுப்பாகும். எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு நான் முழுமையாக பொறுப்புடையவன்.

எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக நிர்வாக பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வகிக்கும் தரப்பி-னர்களை அறிவூட்டுதல்.

வேறு சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்க-ப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெறப்பட்டுள்ளதோடு, எனது விசாரணை மூலம் தெரியவரும் விடயம் யாதெனில், சபை உரிய முறையில் நிதி அறிக்கைகளை பேணிவந்துள்ளது என்பதாகும். அதனை இங்கு அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) டுஊ டுனைரூ பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய சபையின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இணைந்து செல்கின்றது.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (�ை) (ஈ) டுனைரூ பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, இந்த அறிக்கையில் 1.2 (அ) அவதானிப்புக்கள் தவிர்ந்த கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட சிபாரிசுகள் தவிர்ந்த கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட சிபாரிசுகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சியங்களின் மீது மற்றும் எண்ணிக்கை ரீதியான விடயங்களுக்கு வரையறுத்து பின்வரும் பிரகடனங்களை செய்யுமளவுக்கு எந்தவொரு விடயமும் எனது அவதானிப்புக்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய சபையின் ஆளுநர் சபையின் எவரேனும் உறுப்பினர் ஒருவருக்கு சபையுடன் இணைந்து ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சாதாரண வியாபார நிலமைக்கு அப்பால் தொடர்பு உள்ளதென,

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த ஏதேனும் ஏற்புடைய எழுதப்பட்ட சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளுநர் சபையினால் வழங்கப்படும் வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைவாக அன்றி செயற்பட்டுள்ளாரென,

கணகாய்வாளர் ஆணையாளரின் அறிக்கை 2022

சட்டங்கள்/கூட்டளைகளுக்கான தொடர்பு		விபரம்
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் நி.ஒ. 394	வழங்கப்பட்டு 6 மாதங்கள் கடந்த மொத்தப் பெறுமதி ரூ.மில். 1.9 பெறுமதியான இரத்துச்செய்யப்பட்ட காசோலைகள் 107 தொடர்பில் நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
(ஆ)	(i) 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய இல. 05/2008 மற்றும் 2018 ஜனவரி 24 ஆம் திகதிய இல. 05/2008 (ஐ) எனும் அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை	பிரஜைகள் / சேவைப் பெறுநர் பட்டயங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டியிருப்பினும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
	(ii) 2008 டிசம்பர் 31 ஆம் திகதிய இல.30/2008 இன் மூலம் திருத்தியமைக்கப்பட்ட தாபன விதிக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 10	மீளாய்வுக்குரிய வருடத்தில் கடன் கோப்புக்கள் 67 க்கு ஏற்புடையதாக மேற்கொள்ளப்பட்ட எழுமாறான கணக்காய்வு பரிசோதனையின் போது ஏற்புடைய உத்தியோகத்தர்களுக்கு வழங்க முடியுமான அதிகபட்ச கடன் தொகையான ரூ.மில். 16.75 ஆக இருந்த போதும் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு மாற்றமாக ரூ.மில். 41.23 அதாவது ரூ.மில். 24.48 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, சபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென.

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த சபையின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் ஏற்புடைய காலப் பிரிவில் ஏற்புடைய சட்ட விதிகளுக்கு அமைய பெறுகை மேற்கொண்டு பயன்படுத்தவில்லையென,

ஒரு பெறுகை நடவடிக்கையாக திட்டமிடாது பெறுகை வழிகாட்டு நெறிக் கோவையின் 3.2 பிரகாரம் தேசிய போட்டித்தன்மை விலை முறையைப் பின்பற்றி மிகவும் போட்டிமிக்க விலைமனுக்களை பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பினும் 04 சந்தர்ப்பங்களில் கூறுவிலை முறையைப் பின்பற்றி ரூ.மில். 41.57 பெறுமதியான 205 மடிக் கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவ்வாறே, பெறுகை வழிகாட்டுநெறிக் கோவையின் 3.4 பிரகாரம் பெறுமதியில் குறைந்த பொருட்களை கொள்வனவு செய்வதற்காக கூறுவிலை முறை பின்பற்றப்பட வேண்டியிருப்பினும் இதற்காக தெரிவுசெய்த பெறுகை முறை சரியானது அல்ல என்பதை அவதானிப்புச் செய்கின்றேன்.

3. வேறு விடயங்கள்

(அ) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை சட்டத்தின் 22 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் முதலீட்டால் கிடைக்கப்பெறும் வருமானத்திலிருந்து, அமைச்சர் மற்றும் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் ஆகியோரின் இணக்கத்துடன் சபையினால் அவ்வப்போது பணிக்கப்படும் விதத்தில் வருடத்திற்கு நூற்றுக்கு மூன்று வீதத்திற்கு குறையாத ஏதேனும் வீத வட்டியை அந்த வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதியத்தின் ஒவ்வொரு அங்கத்தவரதும் தனிப்பட்ட கணக்கில் வைப்பிலிடப்பட வேண்டியிருப்பினும் கடந்த 5 ஆண்டு காலப்பகுதியில் சபையின் வருமானம் குறிப்பிட்டளவு அதிகரித்துள்ள போதிலும் அங்கத்தவர் நலன்களின் மட்டத்தை அதிகரிப்பது தொடர்பில் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கவில்லை. 1981 ஆம் ஆண்டு முதலிருந்தே நூற்றுக்கு மூன்று 3 வீத நலன் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நியதியத்தின் நிதிகளை முதலீடு செய்து பெற்றுக்கொள்ளும் இலாபங்களைக் கொண்டு பங்கிலாபத்தை பிரகடனம் செய்யப்படுதல் வேண்டும். அந்த பங்கிலாபத்தை நிதியத்தின் ஒவ்வொரு அங்கத்தவரினதும் தனிப்பட்ட கணக்கில் வைப்பிலிட வேண்டுமென 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை சட்டத்தின் 14 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. சபையின் அங்கத்தவர்களுக்காக பிரித்து வேறாக்க முடியுமான இலாபம் 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையில் ஒப்புநோக்கும் போது நூற்றுக்கு 181 வீதம் அதிகரித்துள்ள போதிலும் அங்கத்தவர்களுக்காக வழங்கப்படும் நலன் வீதத்தில் குறிப்பிட்டளவு வீதத்தை அதிகரிப்பது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்படவில்லை.

கணகாய்வாளர் ஆணையாளரின் அறிக்கை 2022

(இ) தற்போது கலைக்கப்படவுள்ள வனிக் கம்பனியின் வாக்குறுதிப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூ.மில் 12.17 மற்றும் தொகுதிக்கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூ.மில் 7.45 தொகை முறையே 2002 மற்றும் 2007 வருடங்களில் தீர்வையாவ-தற்கு இருந்தது. மேலும் வனிக் கம்பனியில் தொகுதிக்கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட வேண்டிய வட்டி வருமானம் ரூ.மில். 15.21 உம் வாக்குறுதிப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த தொகைக்க-ான வட்டி வருமானம் ரூ. 367,724 உம் அறவிடப்படவில்லை. அந்தத் தொகைகளை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் சபைக்கு இயலாமல் போயுள்ளது.

(ஈ) பல வருடங்கலாக எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியிடம-ிருந்து கிடைக்க வேண்டிய கடனுக்கான வட்டித் தொகையில் மேலும் கிடைக்க வேண்டிய ரூ.மில். 9.39 தொகை 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடப்படவில்லை.

(உ) சபை அரசாங்கப் பிணையங்களில் நிதியங்களை முதலீடு செய்யும் முதல்தர நிறுவனமென்ற போதிலும் பிணையங்களின் ஏலத்தின் போது நேரடியாக விலை மனுக்களை சமர்ப்பிக்கும் வசதி (Direct Bidding Facility) சபையினால் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளவில்லை. 2016 ஆகஸ்ட் 26 ஆம் திகதி நடைப்பெற்ற பொதுத் தொழில் முயற்சிகள் பற்றிய குழுவில் இலங்கை மத்திய வங்கியின் ஆரம்ப வாடிக்கையாளரான (Primary Dealer) என பதிவு செய்யுமாறு கட்டளையி-டப்பட்டுள்ளது. 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை.

(ஊ) 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்குஷசபையின் அனுமதிக்கப்பட்ட ஆளணி 1,107 காணப்பட்டது. உண்மையான ஆளணி 923 ஆகவும் 184 வெற்றிடங்களும் காணப்பட்டன. அவற்றில் உயர் முகாமைத்துவத்திற்குரிய 39 பதவிப் பெயர்களில் 70 வெற்றிடங்களும் முகாமைத்துவ மட்டத்திலான 08 பதவிப் பெயர்களில் 84 வெற்றிடங்களும் காணப்பட்டன.

(எ) சபைக்குச் சொந்தமான நவம் மாவத்தையில் உள்ள காணியொன்றில் இயங்கிவரும் வாகனத் தரிப்பிடத்திலிருந்து 2023 ஏப்ரல் 26 ஆம் திகதி கிடைக்க வேண்டியிருந்த ரூ.மில். 1.73 மீதியில் ரூ.455,308 தொகை செயலற்ற 58 நிறுவனங்களிலிருந்து அறவிட முடியாத மீதியாக அவதானிக்கப்பட்டது.

(ஏ) உயர் கல்வி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் கொடுப்பனவு செய்வதற்காக 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ஒதுக்கப்பட்ட மீதியான ரூ.மில். 147.16 க்குள் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்காக ஒதுக்கப்பட்ட முறையே ரூ.மில். 0.12 மற்றும் ரூ.மில். 3.04 தொகை இன்னும் தீர்க்கப்படவேண்டியுள்ளது.

(ஐ) 1994 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் நிதியுதவித் திட்டத்தின் கீழ் மாணவர்கள் 73 பேருக்கு செலுத்தாத ரூ.மில். 1.27 தொகைக்கு ஏற்புடைய புலமைப் பரிசாளர்களுக்கு செலுத்தாது மீளாய்வுக்குரிய வருடத்தில் வருமானத்திற்கு வரவு வைக்க-ப்பட்டிருந்தது. நிதி நிலமைக் கூற்றில் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் கொடுப்பனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட மீதியான ரூ.மில். 235.3 இற்குள் 2020 மற்றும் 2021 வருடங்களு-க்கு ஏற்புடைய முறையே ஒதுக்கப்பட்ட ரூ.மில். 0.075, ரூ.மில். 13.6 தொகை இன்னும் தீர்க்கப்படவேண்டியுள்ளது.

(ஒ) 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பட்டியலிடப்பட்ட கம்பனிகள் 13 இல் செய்யப்பட்டிருந்த முதலீடுகளின் சராசரி செலவு ரூ.மில். 909.89 ஆன பங்குகளு-க்காக 2022 ஆம் ஆண்டில் பங்கிலாப வருமானம் ஈட்டப்படவில்லை. அதில் இரண்டு கம்பனிகளில் இருந்து 2015 முதல் 2022 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக பங்கிலாபம் கிடைக்க-ப்பெறவில்லை என்பதோடு 11 கம்பனிக-ளிலிருந்து 2015 – 2022 வரையில் அவ்வப்போது பங்கிலாப பகுதியொன்று மாத்திரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

(ஓ) சபையினால் ஒரு கம்பனியிடமிருந்து பங்குகளை கொள்வனவு செய்யும் பரிசோதனையின் போது 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் முறையே 7இ106இ832 மற்றும் 615இ542 பங்குக-ளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கம்பனிகளின் கடந்த வருடத்-தின் நிதிக் கூற்றுக்களை பரீட்சிக்கும் போது 2017இ 2019 மற்றும் 2021 வருடங்களில் நட்டம் அடைந்த நிறுவனமொன்றாக இருந்தும் கூட அது தொடர்பில் கவனம் செலுத்தாது 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ.மில். 64.01 மற்றும் ரூ.மில். 4.99 செலவு செய்து பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், 2022 டிசம்பர் கணக்காய்வுத் திகதியன்று இந்தக் கம்பனி பங்குச் சந்தையின் சட்ட விதிகளுக்கு அமைய செயற்படாத காரணத்தினால் நயவஉா டளைவ இன் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஔ) இலங்கை மத்திய வங்கியினால் 2022 ஆம் ஆண்டில் ஏலம்விடப்பட்ட 23 சந்தர்ப்பங்களின் போது சமர்ப்பிக்கப்பட்ட தொகுதி இலக்கங்களில் பொதுத் திறைசேரி பிணைமுறி தொகுதி இல. 28 க்கு சபையினால் விலைமனு கோரப்பட்டது. அவற்றில் 12 தொகுதி இலக்கங்களுக்கு சமர்பிக்கப்பட்ட விலைமனுக்களில் நூற்றுக்கு 50 க்கும் மேற்பட்ட விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. அதன் மூலம் நிதியத்தை ஏலத்திற்காக சமர்ப்பித்து கூடிய பயன்தரும் முதலீடொன்றில் முதலீடு செய்யவிருந்த வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது. இதன் போது சபையின் GS Committee மூலம் விலைமனு தீர்மானிப்பின்

கணகாய்வாளர் ஆணையாளரின் அறிக்கை 2022

போது சந்தைக் காரணிகள் கருத்திற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் நிலவும் சந்தை நிலைமைகளை விஞ்சி உயர் பயன் வீதத்திற்கு சென்ற காரணத்தினால் இவ்வாறு விலைமனுக்களின் ஈட்டல் குறைவடைவதற்கு காரணமாக அமைந்துள்ளதென அவதானிக்கப்பட்டது.

(க) மீளாய்வுக்குரிய வருடத்தின் இறுதியில் உரிமைக் கோரப்படாத மரண நலன்கள் தொடர்பில் 1207 அங்கத்தவர்களின் ரூ.மில். 21.43 செலுத்த வேண்டியிருந்தது. 1995 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் மரணமடைந்த ஆட்களுக்கு ஏற்புடையதாக செலுத்தப்பட வேண்டியிருந்த மரண நல உரித்தாளர்களின் காலப் பகுப்பாய்வில் 07 முதல் 20 வருடங்களுக்கும் மேற்பட்ட கால வித்தியாசத்தில் 786 பயனாளர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த மரண நலன்தொகை ரூ.மில். 8.87 ஆக காணப்பட்டது.

டபிள்யு.பி.சி.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2022 கணக்காய்வாளரின் அறிக்கை தொடர்பில் சபையின் அவதானிப்புக்கள்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) 1981 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான காலப் பிரிவுக்கு ஏற்புடைய 2022.12.31 ஆம் திகதிக்கு தொழில் வழங்குநர்கள் 5341 பேரிடமிருந்து அறிவிடப்பட்டிருந்த ரூ.மில். 781.05 பங்களிப்புத் தொகையிலிருந்து ரூ.மில். 208.45 பங்களிப்புத் தொகை 2013.05.31 ஆம் திகதியன்று பிரித்தறிப்பட்டுள்ளது. அதற்கமைய மேலும் தொழில் வழங்குநர்கள் 3,782 பேரிடமிருந்து அறவிடப்பட்ட ரூ.மில். 572.59 தொகை அங்கத்தவர்களுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியுள்ளது.

பிரிக்கப்படாத பங்களிப்புத் தொகைகளின் முன்னேற்றம்.

வருடம்	2022.12.31 (ரூ)	2023.05.31 (ரூ)	முன்னேற்றம் (ரூ)
1981-2015	97,121,814.00	81,277,523.16	15,844,290.84
2016	19,308,442.00	15,326,037.93	3,982,404.07
2017	33,304,876.00	27,700.283.63	5,604,592.37
2018	54,305,961.00	47,890,315.68	6,415,645.32
2019	80,420,152.00	67,301,477.80	13,118,674.20
2020	142,869,009.00	112,636,870.90	30,232,138.10
2021	353,718,850.00	220,463,387.22	133,255,462.78
மொத்தம்	**781,049,104.00**	**572,595,896.32**	**208,453,207.68**

(ஆ) கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்ட பகிர்ந்தளிக்கப்படாத ரூ.71,284,517 தொகை ரூ.34,231,401 ஆக திருத்தப்படல் வேண்டும். விபரங்கள் பின்வருமாறு,

	வகையீடு	பெறுமதி (ரூ)	கோப்புகளின் எண்ணிக்கை	இணைப்பு	வேறு விடயங்கள்
1	அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளில் தற்போது வைப்பிலிடப்பட்டுள்ள தொகை (Allocated)	8,726,401.92	31	01	இந்தத் தொகை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 16(3) பிரிவின் பிரகாரம் தற்போது ஊழியர்களின் தனிப்பட்ட கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளது. எனவே, ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்திற்கு ஏற்புடையது அல்ல என அவதானிப்புச் செய்கின்றேன்.
2	நீதிமன்றத்தின் வேண்டுகோளின் பேரில் மீண்டும் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள வேறு நிறுவனங்களுக்குரிய தொகைகள் (Refunded)	1,576,757.12	34	02	இந்தத் தொகை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 16(1) பிரிவின் கீழ் ஏற்புடைய தொழில் வழங்குநர்களினால் தனது ஊழியர்களுக்காக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தப்படாத நிதி
3	காசோலைகள் மறுக்கப்பட்ட காரணத்தினால் மீண்டும் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள தொகைகள் (Returned Cheques)	308,000.00	01	03	என்பதனால் சட்டத்தின் 16(3) பிரிவின் கீழ் நிதியத்தின் அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்கில் வைப்பிலிட வேண்டிய தொகைகள் அல்ல. எனவே, அந்தத் தகவல்களுக்குரிய தொகை கணக்காய்வு ஐய வினாவுக்கு ஏற்புடையது அல்ல என அவதானிப்புச் செய்கின்றேன்.

2022 கணக்காய்வாளரின் அறிக்கை தொடர்பில் சபையின் அவதானிப்புக்கள்.

4	சபையின் வழக்குகளுக்கு மேலதிகமாக நிதி செலுத்தப்பட்டுள்ளதாக நீதிமன்றத்திற்கு தற்போது எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ள மற்றும் ஏற்புடைய விடயங்களை உறுதிப்படுத்தி இது வரையில் நீதிமன்றத்தினால் கோரப்படாத தொகைகள் (ழுஎநச ீயலஅநவெள)	18,283,624.38	358	04	
5	சபையின் வழக்குகளுக்கு ஏற்புடையதாகாதவை என நீதிமன்றத்தினால் தற்போது எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ள மற்றும் ஏற்புடைய விடயங்களை உறுதிப்படுத்தி இது வரையில் நீதிமன்றத்தினால் கோரப்படாத தொகைகள (வுழ டிந சுநகரனெநன)	4,663,057.26	60	05	
6	ஒரே கோவையின் பகுதிகள் பிரிக்கப்பட்டுள்ள (Allocated) மற்றும் மீதி மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள தொகையாக (Over Payments) அவதானிக்கப்படும் கோவைகள்.	2,225,077,87 (Allocated) 1,234,197,45 (Over Payments)			
	இந்த வகையீட்டுக்கு உரிய 1 முதல் 6 வரை பகுதிகளுக்கு ஏற்புடைய மொத்த தொகை ரூ.				

இந்த ரூ.மில். 34.23 க்கு ஏற்புடைய தகவல்கள் பின்வருமாறு.

புதிய கணினி முறைமை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னரான காலப் பிரிவுக்குரிய ஆயினும் தகவல்களை கண்டறிய முடியாத பழைய கோப்புக்களுக்கு ஏற்புடையது

பிராந்திய அலுவலகங்கள் மூலம் இது வரையில் வைப்பிலிடப்பட்ட தகவல்கள் தயாரிக்கப்படாத மற்றும் அங்கத்தவர் கணக்குகளில் வைப்பிலிடப்படாதவை

ரூபா.மில்.
18,28
15,95
34,23

(ஈ) எமது சபையின் வங்கிக் கணக்குகளுக்கு சபைக்குத் தெரியாமல் தொழில் வழங்குநர்கள் செய்த வைப்புகள் தொடர்பான தகவல்களைப் அடையாளம் காணும் வரை பராமரிப்பதற்காக தகவல் ஏ 999 மற்றும் ஏ 100 என்ற இரண்டு காலவரையற்ற கணக்குகள் பராமரிக்கப்படுகின்றது. அந்தக் கணக்குகளின் கீழ் 2022.12.31 ஆம் திகதி அடையாளம் காணப்படாத கொடுப்பனவுகளின் காப் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

இலக்கம்	காலப் பிரிவு	பெறுமதி
01	2006 மற்றும் அதற்கு முன்னரான காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்	6,219,198.51
02	2020 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் வரை மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவுகள்	1,301,334.77

இந்த ரூ.6,219,198.51 தொகைக்கு ஏற்புடைய தகவல்களை கண்டறிய முடியாத காரணத்தினால் கணினி முறையில் பூட்டிடுவதற்கும் எஞ்சிய ரூ.1,301,334.77 தொகையில் ரூ.600,132.72 இது வரையில் தீர்க்கப்பட்டுள்ளதோடு, எஞ்சிய ரூ.701,202.05 தொகை எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(இ) 1981 ஆம் ஆண்டு முதல் 2021 வரையிலான காலப் பகுதியில் 2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு தனிப்பட்ட கணக்குகளாகப் பிரிக்கப்படாத மொத்தத் தொகை ரூ.மில். 781.05 ஆக இருந்த போதிலும் சபையின் வணிகத்தின் தன்மை காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் (அதாவது 2020 மற்றும் 2021) உறுப்பினர் பணத்தைப் பிரிப்பது 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் செய்யப்படும். எனவே உண்மையிலேயே நடைமுறை சிக்கல்களின் அடிப்படையில் பிரிக்கப்படாத அங்கத்துவக் கட்டணங்கள் 2019 ஆம் ஆண்டுக்கு முன் பெறப்பட்ட அங்கத்தவர் தொகைகளாகும்.

இதன் விளைவாக, அத்தகைய நீண்ட கால உண்மையான நிலுவைகளின் பெறுமதி நிதிநிலமை அறிக்கையின் குறிப்பு எண் 34 இன் கீழ் வெளியிடப்பட்டுள்ளது. தேவை ஏற்படின் பிரிக்கப்படாத அங்கத்தவர் பங்களிப்பின் பெறுமதியை வெளிப்படுத்துவோம்.

2022 கணக்காய்வாளரின் அறிக்கை தொடர்பில் சபையின் அவதானிப்புக்கள்.

2.2.2

(அ) 2023.03.29 ஆம் திகதி நடைபெற்ற கணக்காய்வுக் குழுவிடம் இது தொடர்பான ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டு, அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் 2023 ஏப்ரல் மாதக் கணக்குகள் சரியாகத் திருத்தப்பட்டன. இது தொடர்பில் 2023 ஏப்ரல் 24 ஆம் திகதி சபைக்கு தெளிவூட்டுவதற்கு பணிப்பாளர் குழு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ)

i. ஒட்டுமொத்த சபைக்குமான பிரஜைகள் / சேவைப் பெறுநர் பட்டயம் விரைவாக தாயரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ii. இந்த நிறுவனம் ஒரு சபை என்றபடியால் விசேட இடர் கடன் தொடர்பிலான அடிப்படை விடயங்கள் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய தயாரித்து சபையின் ஏற்பாடுகள் சுற்றறிக்கை இலக்கம் 08.'.1994 எனும் 1994.06.01 ஆம் திகதிய உள்ளக சுற்றறிக்கை மூலம் உச்ச கடன் எல்லை அனைத்து கொடுப்பனவுகளும் அடங்கலாக 12 மாத சம்பளத்தை கருதுவதற்கு பணிப்பாளர் சபை அனுமதி வழங்கியுள்ளது. எனினும், 2022 ஆம் ஆண்டில் PED 3/2022 சுற்றறிக்கையின் பிரகாரம் பணிப்பாளர் சபையினால் இந்தக் கடனை மீளாய்வுக்கு உட்படுத்தி தற்போது கடன் தொகை ரூ.250,000/- உச்ச எல்லைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

2.2.4 228 மடிக் கணினிகளை கொள்வனவு செய்வதற்காக 2021 ஜனவரி மாதம் 03 ஆம் திகதி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அது "திணைக்கள கொள்தல் குழுவினால்" மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் 2021 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் அளவில் 90 மடிக் கணினிகள் மாத்திரமே வழங்கல் செய்யப்பட்டன. அதற்கிணங்க, உரிய காலத்திற்குள் விலைமனுக்கு அயை ஏற்புடைய பொருட்களை வழங்குவதற்கு வழங்குநரால் தவறவிடப்பட்டுள்ளது. நாட்டில் நிலவிய கொரோனா பெருந்தொற்று, பொருளாதாரப் பிரச்சினைகள், இறக்குமதி வரையறைகள் காரணமாக பொருட்களை வழங்கல் செய்வதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட நிறுவனத்தினால் இயலாமல் போயுள்ளது. நிலமை இவ்வாறிருக்கும் போது மீண்டும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண பொருளாதார நிலைமை மீண்டும் நீண்டகாலம் செல்லக்கூடிய விலைமனு செயன்முறை ஊடாக வெற்றிகரான நிலை தோன்றம் பெறாதென சந்தை ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

இத்தகைய சூழ்நிலையில் சபையின் மடிக் கணினி தேவையைப் பூர்த்தி செய்ய சந்தையை சரிபார்த்த போது அனைத்து பிரபலமான பிராண்டுகளிலும் மடிக் கணினிகளை விற்பனை செய்யும் நிறுவனங்களில் குறிப்பிட்ட அளவு மடிக் கணினிகள் இருப்பது தெரியவந்தது. அவர்கள் மடிக்கணினிகளை உடனடி விலையின் கீழ் கைக்காசுக்கு விற்க முனைகின்றனர் என்பது தெரியவந்தது. எனவே, வேகமாக மாறிவரும் சந்தையில் நீண்ட கால ஏலத்தின் செல்லுபடியாகும் தன்மைக்காக அந்த விலைகள் வழங்கப்படவில்லை. (தேசிய போட்டி விலை முறைமைக்கு அமைய வழங்குநர் தன் வசம் உள்ள பொருட்களை 91 நாட்களுக்கு வழங்கப்படும் விலையில் வழங்க கடமைப்பட்டுள்ளார்.)

சந்தை நடைமுறையை கருத்திற்கொள்ளும் போது பல கட்டங்களில் கொள்முதல் செய்வதன் மூலம் மிக விரைவாக வாங்கும் திறன் மற்றும் கடுமையான சிக்கல்கள் இல்லாமல் சபையின் நோக்கங்களை நிறைவேற்றும் திறன் உள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டது. விலை ஒப்பீட்டு முறையை (Shopping Method) வரைவிலக்கணப்படுத்தும் போது பொதுவாக எளிதாக வாங்கக்கூடிய பொருள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, இந்த முறையின் கீழ் மடிக்கணினிகள் கையிருப்பில் உள்ள இடத்தில் இருந்து வாங்க முடியும். அதற்கமைய, ஒரு முறைக்கு ரூ.மில். 10 மில்லியனை விஞ்ஞாது அங்கீகரிக்கப்பட்ட தரங்களில் மடிக்கணினிகளை கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அதற்கிணங்க, விலை ஒப்பீட்டு முறையைப் பின்பற்றி பல கட்டங்களாக மடிக்கணினி வணிகத்தில் ஈடுபட்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைகள் அழைக்கப்பட்டன. அதற்கு பதிலளிக்கும் விதமாக பல முன்னணி நிறுவனங்கள் போட்டி விலைகளை வழங்கியுள்ளன.

எனவே, 08 மாதங்களுக்குள் குறுகிய காலத்திற்குள் 205 மடிக்கணினிகளை போட்டி விலையில் சிறந்த (பணத்திற்கான மதிப்பு - Value for Money) விலையில் கொள்வனவு செய்ய முடிந்தது. அபான்ஸ், மெட்ரோபொலிடன் மற்றும் Softlogic போன்ற இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து உலகத் தரம் வாய்ந்த HP, ACER, DELL மடிக்கணிகளை கொள்வனவு செய்ய முடிந்தது.

அவ்வாறு செய்யாமல் திணைக்கள கொள்முதல் குழுவின் கீழ் 205 மடிக்கணினிகளுக்கு தேசிய போட்டி அடிப்படையில் ஏலம் அழைக்கப்பட்டிருப்பின் அதற்கு நீண்ட கால செயல்முறை எடுக்கும் என்பதனால் மற்றும் ஊ.ந.பொ.நி. சபைக்கு நிதி நட்டம் மற்றும் சரியான நேரத்தில் பொருட்களை வழங்கல் செய்யப்படாத போது செயற்பாட்டு நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க இடையூறுகள் ஏற்பட்டிருக்கும்.

03. வேறு விடயங்கள்

(அ) மற்றும் (ஆ)

1980 ஆம் ஆண்டின் இல 46 ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரிவு 22 இன் பிரகாரம் அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்கில் 3% க்கு குறையாத வருடாந்த வட்டி விகிதம் வரவு வைக்கப்படும் மற்றும் பிரிவு 14 இன் படி பங்கிலாபம் செலுத்தப்படும்.

முன்னைய ஐந்து வருட முதலீட்டு வருமானம், அங்கத்தவர் நிதி, விநியோகிக்கக்கூடிய இலாபம், வட்டி மற்றும் பங்கிலாப கொடுப்பனவுகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

வருடம்	முதலீட்டு வட்டி வருமானம் (ரூ)	அங்கத்தவர் நிதியம் (ரூ)	வட்டி 3% (ரூ)	பிரிக்க முடியுமான இலாபம் (ரூ)	பங்கிலாபம்	
					சதவீதம் (%)	(ரூ)
2018	28,301,818	306,454,810	8,434,536	14,850,912	6.00	16,869,072
2019	31,554,779	339,244,338	9,423,454	16,098,044	5.00	15,705,756
2020	33,397,541	375,215,484	10,422,652	3,1480,627	5.00	17,371,087
2021	34,095,154	406,288,900	11,553,085	32,662,961	4.50	16,366,867
2022	46,316,209	459,630,606	12,679,221	41,793,547	5.75	24,301,886

2022 கணக்காய்வாளரின் அறிக்கை தொடர்பில் சபையின் அவதானிப்புக்கள்.

இவ்வாறு, முதலீட்டு வருமான அதிகரிப்புடன் அங்கத்தவர் நிதியும் 150% வளர்ச்சியடைந்துள்ளதால் 3% வட்டி விகிதம் அதிகரிக்கவில்லை. ஆனால் 3% இல் செலுத்தப்பட்ட வட்டி 150% அதிகரித்துள்ளது.

அதேபோன்று பங்கிலாபத்தின் சதவீதம் அதிகரிக்கவில்லை என்றாலும் பங்கிலாபமாக செலுத்தப்பட்ட தொகையும் 144% அதிகரித்துள்ளது. இதனால், சதவீதங்கள் வளர்ச்சியடையாத போதிலும் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் நன்மைகள் வருமானம் மற்றும் விநியோகிக்கக்கூடிய இலாபத்திற்கு ஏற்ப வளர்ச்சியடைந்துள்ளன என்பதை குறிப்பிட விரும்புகின்றேன்.

(இ) இந்த நிறுவனத்தை கலைக்க மூன்றாம் தரப்பினரின் கோரிக்கையின் பேரில் ஒரு கலைப்பாளரை நியமிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. கலைப்பு செயல்முறை முடிந்ததும் திரும்பப் பெறக்கூடிய தொகை மற்றும் திரும்பப் பெறக்கூடிய தொகை உள்ளதா என்பது குறித்து சபையினால் திட்டவட்டமான முடிவுக்கு வர முடியும். சட்ட நடவடிக்கைகள் இன்னும் நிறைவடையவில்லை.

(ஈ) இந்நிறுவனம் அரசுடன் தொடர்புடைய நிறுவனமாகும். மேலும் இந்த நிலுவையில் உள்ள வட்டியை மீட்பது தொடர்பாக நிதி அமைச்சின் பொது நிறுவனங்கள் திணைக்களத்தின் தலையீட்டில் 2023.03.09 ஆம் திகதி நிறுவனத்துடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

அதற்கமைய, நிறுவனத்தின் தற்போதைய நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு, இந்த வட்டியைத் தீர்ப்பதற்கு சிறிது காலம் செல்லும் என்றும் சம்பந்தப்பட்ட நிரல் அமைச்சகத்துடன் கலந்துரையாடி இந்த நிலுவையில் உள்ள வட்டியைத் தீர்ப்பதற்கான எதிர்காலத் திட்டத்தை முன்வைப்பதற்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) இந்த வசதிக்கான அனுமதியைப் பெறுவதில் உள்ள சிரமங்கள், மூலதனச் செலவின் எல்லைகள், புதிய பணியமர்த்துவதில் உள்ள வரையறைகள், தற்போதுள்ள சம்பள அளவுகள் மற்றும் பிற தொடர்புடைய உள்கட்டமைப்புகளின் கீழ் தகுதிவாய்ந்த திறமையான அதிகாரிகளை பணியமர்த்துவதில் உள்ள சிரமங்கள், தக்கவைத்துக்கொள்வது மற்றும் மீண்டும் பணியமர்த்துவதில் உள்ள சிரமங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளைப் பொற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்கள் இந்தப் பணியை நிறைவேற்றுவதில் சிரமத்தை ஏற்படுத்தியது. எனவே, இவ்வாறான காரணிகளை கருத்தில் கொண்டு இந்த வசதியை தற்போது அரச வங்கியான மக்கள் வங்கியானது எவ்வித கட்டணமுமின்றி மேலதிக பணியாளர்களை நியமிக்காமல் பெற்றுக் கொள்கின்றது. இதே நிலைமை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

(ஊ) சபையில் உள்ள வெற்றிட பணியிடங்களை நிரப்புவது தொடர்பாக பொது திறைசேரியின் பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதி படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது, அரசாங்கத்தினால் ஆட்சேர்ப்பு நிறுத்தி வைக்கப்பட்டுதனால் அனைத்து வெற்றிடங்களுக்கும் உடனடியாக ஆட்சேர்ப்பு செய்ய முடியாத நிலையில் சபையின் நிர்வாக நடவடிக்கைகள் பாதிக்காத வண்ணம் அத்தியவசிய பதவிகளுக்கு பணிப்பாளர் சபையின் அனுதிக்கு அமைய அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரத்திற்கு அனுப்ப-ப்பட்டுள்ளது.

(எ) 2023.05.29 ஆம் திகதி நடைபெற்ற நிர்வாகக் குழுக் கூட்டத்தில் செயல்படாமல் இருந்த 58 நிறுவனங்கள் தொடர்பான ரூ.455,308.25 தொகையை வெட்டி விடுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(ஏ) 2022.12.31 ஆம் திகதிய நிலவரப்படி உயர்கல்வி உதவித்தொகை முறைக்கு ஒதுக்கப்பட்ட நிலுவைத் தொகையாகக் குறிப்பிடப்பட்ட ரூ.147.156 மில்லியன் பின்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கு 60 மில்லியன் ரூபாவும் 2021 ஆம் ஆண்டிற்கு 84 மில்லியன் ரூபாவும் என மேற்படி இரண்டு வருடங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலுவைத் தொகைக்கு மேலதிகமாக 2020 ஆம் ஆண்டில் 253 மாணவர்களுக்கு 3.036 மில்லியன் ரூபா தொகையும் 2019 ஆம் ஆண்டில் 10 மாணவர்களுக்கு ரூ.120,000/- என மொத்தமாக ஒதுக்கப்பட்ட மீதி ரூ.147.156 மில்லியன் ஆகும்.

2022 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடத்தப்பட்டது. பெறுபேறுகள் இன்னும் வெளியிடப்படவில்லை.

2021 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் 2022 ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடப்பட்டதால் பெறுபேறுகள் வெளியான பின்னர் 2023 மே மாதம் 31 ஆம் திகதி வரை பெறப்பட்ட 6,495 விண்ணப்பங்களில் 4,809 விண்ணப்பங்களுக்கு ஒருவருக்கு ரூ.12,000/- வீதம் ரூ.57.71 மில்லியன் ரூபா தீர்க்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய ரூ.120,000/-தொடர்பில் விண்ணப்பங்களில் உள்ள குறைபாடுகளை தெரிவிக்குமாறு சம்பந்தப்பட்ட அங்கத்தவர்களுக்கு பதிவுத் தபால், தொலைபேசி மற்றும் வாட்ஸ்அப் மூலம் அறிவிக்கப்பட்டது. ஆனால் அவர்களிடமிருந்து பதில்கள் கிடைக்கப்பெறவில்லை. எனவே அவற்றை தீர்க்க முடியவில்லை.

(ஐ) 2022 டிசம்பர் 31 ஆம் திகதிய நிலவரப்படி 5 ஆண்டு புலமைப்பரிசில் நிதியளிப்பு முறையின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ.மில். 235.3 மீதியில் 2022 ஆம் ஆண்டிற்கான ரூ.மில். 135 (9,000 மாணவர்களுக்கு ரூ.15,000/- வீதம்) ஒதுக்கீடு மற்றும் மேலும் தீர்வு-செய்யப்பட்டவை உள்ளடங்கும். 2021 ஆம் ஆண்டு மேலும் தீர்க்கப்பட வேண்டிய ரூ.மில். 13.6 மற்றும் 2020 ஆம் ஆண்டுக்கு மேலும் தீர்க்கப்பட வேண்டிய ரூ.75,000/- ஆக மேற்குறிப்பிடப்பட்ட ரூ.மில். 253.3 தயாரிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை விண்ணப்பங்கள் 2023.03.10 ஆம் திகதிக்கு விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டு நிறைவடைந்துள்ளது. விண்ணப்பங்களின் தரவுகள் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன.

2021 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை 2022.12.31 ஆம் திகதி அன்று ஒதுக்கப்பட்ட மீதியில் இருந்து 605 மாணவர்களுக்கு ரூ.மில். 9.075 தொகை செலுத்தப்பட்டுள்ளதுடன் அதற்குப் பிறகு பெறுபேறுகள் மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் பெறப்பட்ட 24 விண்ணப்பங்களுக்கு 2023.05.31 ஆம் திகதி ரூபா 288,000/- செலுத்தப்பட்டுள்ளது. மேலும், மேலே ஒதுக்கப்பட்ட மீதியில் 246 நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பான ரூ.மில். 3.69 மில்லியன் தொகையும் உள்ளடங்கும். எனவே 2021 ஆம் ஆண்டுக்கான தீர்வுத் தொகை ரூ.835,000/- ஆக குறைக்கப்பட்டுள்ளது.

2022 கணக்காய்வாளரின் அறிக்கை தொடர்பில் சபையின் அவதானிப்புக்கள்.

5 வருட புலமைப்பரிசில் நிதி உதவி முறையின் கீழ் 2020 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட 0.075 மில்லியன் ரூபாவைத் தீர்ப்பதற்காக சம்பந்தப்பட்ட கோரிக்கையாளர்களின் அடிப்படை ஆவணங்களில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய பதிவுத்தபால் தொலைபேசி மற்றும் WhatsApp மூலம் அறிவிக்கப்பட்ட போதிலும் அவை தொடர்பில் முறையான பதில்கள் கிடைக்காத காரணத்தினால் தீர்வு காண முடியவில்லை.

(ஒ) 13 நிறுவனங்களில் 3 நிறுவனங்களில் இருந்து 2023 ஜூன் மாதத்திற்குள் 49.2 மில்லியன் ரூபா பங்கிலாபம் பெறப்பட்டுள்ளது. அந்த 13 நிறுவனங்களின் மற்ற நிறுவனங்களின் பங்குகளுக்கு அவற்றின் இலாபகரமான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் பங்கிலாபத் தொகை அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கிறோம்.

(ஓ) சபையின் பங்கு முதலீட்டு வகையை பல்வகைப்படுத்தும் நோக்கத்துடன் அந்த ஆண்டு மருத்துவமனை துறையில் ஏற்பட்ட மறுமலர்ச்சி மற்றும் அதிக தேவை காரணமாக எதிர்கால வளர்ச்சி வாய்ப்புகளை பகுப்பாய்வு செய்த பின்னர் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் நவலோக்க நிறுவனத்தினால் மருத்துவமனை துறையில வெளியிடப்பட்ட பங்கு மூலதனத்தில் சுமார் 0.5% முதலீடு செய்யப்பட்டது. நீண்ட கால (Long Term) முதலீடாக இந்த முதலீடு செய்யப்பட்டுள்ளது.
கணக்காய்வு விசாரணையில் குறிப்பிட்டுள்ளபடி நவலோக மருத்துவமனை நிறுவனம் 2020/2021 நிதியாண்டில் நட்டத்தைக் காட்டியிருந்த போதிலும் நவலோக்க மருத்துவமனை குழுமம் 2020/2021 நிதிநிலமை அறிக்கைகளில் இலாபகரமான நிலையைக் காட்டியுள்ளது. மேலும், நவலோக்க ஹொஸ்பிடல்ஸ் நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் 4 நிறுவனங்களில் 100% நவலோக்க ஹொஸ்பிட்டல்ஸ் சொந்தமாக இருப்பதால் அந்த 4 நிர்வகிக்கப்பட்ட நிறுவனங்கள் மருத்துவமனை துறையுடன் தொடர்புடைய 4 நிறுவனங்கள் என்பதனாலும் நவலோக்க ஹொஸ்பிடல்ஸ் குழுமத்தின் நிதிப் பெறுபேறுகள் அந்த நிறுவனத்தின் முதலீட்டின் அடிப்படையில் அமைந்தன. அத்துடன் நவலோக்க வைத்தியசாலை நிறுவனத்தின் எதிர்கால செயற்பாடுகள் குறித்தும் கவனத்தில் கொள்ளப்பட்டது. அதே போன்று 2021/2022 ஆம் ஆண்டின் நிதிநிலமை அறிக்கைகளில் தொடர்ச்சியான இலாபம் காட்டப்பட்டுள்ளது. மேலும் அந்த அறிக்கைகளின் அடிப்படையிலேயே முதலீடு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2021/2022 நிதியாண்டின் வருடாந்த நிதி அறிக்கைகள் நவலோக்க மருத்துவமனை குழுமத்தின் வருமான வரி மறுசீரமைப்பினால் ஏற்பட்ட இழப்பு நிலைமையைக் காட்டுகின்றன. ஆனால் அந்த அறிக்கைகள் 2022 டிசம்பரில் வெளியிடப்படும். மேலும் மார்ச் மாதத்திற்குப் பிறகு சபை நவலோக்க மருத்துவமனை நிறுவனத்தில் முதலீடு செய்யவில்லை. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த நிறுவனத்தின் செய்யப்பட்ட மொத்த முதலீடு 0.58 சதவீதமாகும்.

(ஔ) வழங்கப்பட்ட 28 சந்தர்ப்பங்களில் 12 மாத்திரம் 50% க்கும் குறைவான வெற்றி ஈட்டப்பட்டுள்ளது. ஆனால் 50% க்கும் அதிகமான வெற்றியைப் பெற்ற 16 சந்தர்ப்பங்களைக் கருத்தில் கொண்டு ஒட்டுமொத்த வெற்றி விகிதம் 57% ஆகக் காணப்படுகிறது. மேலும், வினவலில் குறிப்பிடப்பட்டுள்ள 12 சந்தர்ப்பங்களில் 43% க்கு மேல் வெற்றி பெற்ற 02 சந்தர்ப்பங்களும், 21% - 43% வெற்றி பெற்ற 03 சந்தர்ப்பங களும் காணப்படுகின்றன. அந்த 12 சந்தர்ப்பங்களில் ஒரு சந்தர்ப்பத்தில் அதாவது 2022.07.11 ஆம் திகதி நடைப்பெற்ற ஏலத்தில் 02 சந்தர்ப்பங்களுக்கான ஏலம் சபையினால் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் ஒட்டுமொத்த வெற்றி விகிதம் 85% ஆகும். இங்கு வழங்கப்பட்ட மற்ற வகைகளில் ரூ.மில். 5,160 தொகை 100% வெற்றி விகிதத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டுள்ளன. அந்த வெற்றியிலிருந்து பெறப்பட்ட வகைகளுக்குப் பயன்படுத்தப்படும் உத்தி மற்ற வகைகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. மேலும், 28 ஏலச் சீட்டுகளில், 50மூக்கும் அதிகமான வெற்றி விகிதத்தைக் கொண்ட 16 சந்தர்ப்பங்களில் முதல் சந்தர்ப்பத்திலேயே 95% - 100 % இடையே முதல் முறையாக 07 ஏலங்கள் வெற்றி பெற்றன. மேலும் 5 ஏலங்கள் 100% வெற்றி பெற்றன. 73% - 95% இடையே 07 வெற்றிகரமான சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

மேலும், கணக்காய்வு விசாரணையில் சுட்டிக்காட்டப்பட்ட 12 வகைகளில் ஏலத்தின் கீழ் ாயளந ஐஐ ஏலத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒத்த வகைகளைச் சேர்ந்த 02 ஏலங்கள் 100% வெற்றி பெற்றன. அதே பிரிவில் Window வசதியின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு சந்தர்ப்பங்களில் ஒரு ஏலம் 100% வெற்றி பெற்றது. மற்ற ஏலம் 53% வெற்றியும் 03 வெவ்வேறு பிரிவுகளின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஏலங்களில் 100% வெற்றி விகிதம் எட்டப்பட்டது. மேலும், இந்த 12 சந்தர்ப்பங்களில் மேலும் ஒரு சந்தர்ப்பத்தில் Phase II மற்றும் Window வசதியின் கீழ் முதலீடு செய்யப்பட்டு ஒட்டுமொத்த ஏலத்தில் 60% வெற்றி விகிதம் எட்டப்பட்டது. அதற்கிணங்க, ஏலத்தின் வெற்றியை அளவிடுவதில் முதல் நிகழ்வில் பெறப்பட்ட ஏலங்களின் ஒட்டுமொத்த பெறுமதியை மாத்திரமல்லாது Phase II மற்றும் Window அளவிடுவது மிகவும் துல்லியமான முறை என்பது எமது கருத்தாகும்.

மேலே விளக்கப்பட்டுள்ளபடி கணக்காய்வு விசாரணையில் சுட்டிக்காட்டப்பட்ட 12 வகைகளில் முதல் சந்தர்ப்பத்தில் குறைவாகப் பெறப்பட்ட ஏலங்கள் மீண்டும் Phase II அல்லது றுனைழற் வசதியின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டன. மேலும் சராசரி பயனுள்ள வட்டி விகிதத்தின் (Weighted Average Yield) கீழ் அதிக பணத்தை மீண்டும் முதலீடு செய்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. பிணைமுறி ஏலத்தில் பங்கெடுக்கும் போது இது ஒரு சாதாரண செயல்முறையாகும்.

பிணைமுறிகளில் முதலீடு செய்வதில் எப்போதும் அதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சி எடுக்கப்படுகின்றது. முதலீட்டின் மீதான வருவாய் விகிதம் அதிகரித்து வரும் சூழ்நிலையில் மேலே ஏலம் எடுப்பது மூலோபாயமானது. ஏனைய சந்தர்ப்பங்களில் இந்த வழியில் வெற்றிகரமான பெறுபேறுகள் எட்டப்பட்டுள்ளன. முன்கூட்டிய கருத்துகளின் கீழ் ஏலங்களில் பங்கேற்பதற்கு ஏற்படுகின்றதோடு, சில சமயங்களில் 50% க்கும் குறைவாகப் அறிக்கையிடப்படுகின்றது. இது சந்தையின் செயல்திறனின் பொதுவான போக்காகும்.

மேலும் சில சந்தர்ப்பங்களில் மத்திய வங்கியினால் ஏலத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் ஏலத்தின் பெறுமதியை விட குறைவான பெறுமதி ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில் எதிர்பார்க்கப்படும் விகிதத்தில் சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏலங்கள் நிராகரிக்கப்படுவதற்கான அதிக நிகழ்தகவு உள்ளது. உதாரணமாக, 2022.02.11 LKB 01031L016 (30%), 2022.03.11 LKB 01031L016 (68%),

2022 கணக்காய்வாளரின் அறிக்கை தொடர்பில் சபையின் அவதானிப்புக்கள்.

2022.07.11 LKB 00425F013 (89%) ஆக ஏலம் நிராகரிக்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் அதிக எண்ணிக்கையிலான போட்டியிடும் விண்ணப்பதாரர்களின் எதிர்பாரா நடத்தையும் நாம் எதிர்பார்க்கும் பெறுபேறுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஏலத்தின் போது முழு ஏலமும் பரிசீலிக்கப்பட்டு முன்கூட்டிய திட்டத்தின் படி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. மேலும் பல சந்தர்ப்பங்களில் மிகவும் நிச்சயமற்ற சந்தை சூழ்நிலையிலேயே ஏலங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் ஏலம் எடுப்பது மிகவும் சவாலான சூழ்நிலை-யைத் தோற்றுவிக்கின்றது.

அதற்கமைய, ஏலங்களுக்கான பயன் விகிதங்களை நிர்ணயிப்பது ஒட்டுமொத்த சந்தை நடத்தை, முதன்மை தரகர் தகவல்கள், இரண்டாம் நிலை சந்தை நடத்தை, பிற முதலீட்டாளர்களின் பங்கேற்பு, பொருளாதாரத்தின் நிலை, குழுவின் கணிப்புகள் மற்றும் உயர் முகாமைத்துவத்தின் ஒப்புதல் ஆகியவற்றின் அடிப்படையில் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட செயல்முறையாகும்.

திறைசேரி பிணைமுறிச் சந்தையில் வட்டி விகிதங்கள் அதிகரித்து வரும் சூழ்நிலையில் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி எப்போதும் எதிர்பார்க்கப்படும் பயன் விகிதத்தைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டு ஏலம் எடுக்கப்பட்டது. அதற்கமைய முதல் சந்தர்ப்பத்தில் ஏலத்தில் இருந்து நிராகரிக்கப்பட்ட ஏலங்கள், மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட Phase II மற்றும் Window வசதி மூலம் சராசரி பயனுள்ள வட்டி விகிதத்தின் (Weighted Average Yield) கீழ் முதலீடு செய்யப்பட்டு சாத்தியமான எல்லா சந்தர்ப்பங்களிலும் மூலோபாய ரீதியில் வெற்றியை அடைய முடிந்தது.

(க) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் (2022.12.31 ஆம் திகதிக்கு) கோரப்படாத இறப்பு நன்மைக் கணக்கின் இருப்பு ரூ. 21,432,228.11 ஆகும். (1207 உறுப்பினர்களுக்கு) உறுப்பினர்களின் மரணத்திற்குப் பிறகு அந்த உறுப்பினரின் நலன்களைப் பெறுவதற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட பயனாளிகள் உள்ளனர் என தீர்மானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளன. அந்த உரிமைகோருபவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் தோன்றாததாலும் (அதாவது, சில கோரிக்கையாளர்கள் வெளிநாட்டில் இருந்ததாலும்) மற்றும் போதுமான எழுத்துமூலத் தகவல்களைச் சமர்ப்பிப்பதில் சிலரது சிரமங்கள் காரணமாக (சான்றிதழ்கள் உடனடியாக சமர்ப்பிக்கப்படவில்லை) அவர்களின் பங்குகள், சபையின் கணக்கில் தக்கவைத்துக்கொண்டு ஆவணங்களைச் சமர்ப்பித்தவர்களின் உரிமைப் பங்குகள் மட்டுமே செலுத்தப்பட்டன. இவ்வாறான நடவடிக்கைகள் தற்போது பின்பற்-ப்படுகின்றன.

அதற்கமைய 2023 ஜனவரி மாதம் முதல் 2023.05.06 ஆம் திகதி வரை, 05 உரிமையாளர்களுக்கு ரூ.207,612.79 தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேலும் 2023.05.06 ஆம் திகதி உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டிய கடப்பாட்டின் பெறுமதி ரூ.21,224,615.32 ஆகும். (1202 இறப்பு நன்மையாளர்கள்)

தேர்தல்கள் ஆணைக்குழு, பிரதேச செயலாளர் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஊடாக தகவல்களை பெற்று உறுப்பினர்களுக்கு கடிதம் மற்றும் தொலைபேசி ஊடாக அறிவித்து பணம் செலுத்தும் முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலே உள்ள கணக்கு மீதியின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

	விண்ணப்பங்களின் எண்ணிக்கை	தொகை (ரூ)
2021.12.31 ஆம் திகதிக்கு மீதி	1,169	21,695,321.62
2022 ஆம் வருடத்தில் விடுவிக்கப்பட்டது	(29)	(2,676,754.08)
	1,140	19,018,567.54
2022 ஆம் வருடத்தில் தடுத்து வைத்தல்	67	2,413,660.57
2022.12.31 ஆம் திகதிக்கு மீதி	1207	21,432,228.11
2023 ஆம் வருடத்தில் விடுவிக்கப்பட்டது	(05)	(207,612.79)
2023/06/05 ஆம் திகதிக்கு	1202	21,224,615.32

டி.எல்.பி. ரோஹண அபயரத்ன
தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி (பதில் கடமை)
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை



EMPLOYEES' TRUST FUND BOARD
19 - 23 Floors, "MEHEWARA PIYESA",
P.O.Box 807, Kirula Road, Narahenpita, Colombo 05.
Tel: 011 7747201 Fax: 011 2503917 Email: finance@etfb.lk Web: www.etfb.lk